# உதயன்

26 பக்கங்கள்

விலை ரூபா 25.00

www.onlineuthayan.com

சுடர் 28 கதிர் 077 வள்ளுவர் ஆண்டு 2044 தை 29 திங்கட்கிழமை (11/02/2013) UTHAYAN - A Lively National Tamil Daily



**இந்திய நகரங்கள் மீது தாக்குதல் நடத்தப்படும்.**
தீவிரவாதி அப்சல் குருவை தூக்கிலிட்டதற்கு... 08

**மிதக்கும் பாடசாலை நைஜீரியாவில்**
நைஜீரியாவில் மிதக்கும் பாடசாலை... 09

**கொலை: மூவருக்கு மரண தண்டனை.**
கொலைக்காக மற்றுமொருவரை கொலை செய்தார்கள்... 17

**இலங்கை அரையிறுதியில் தோல்வி.**
இந்தியாவில் இடம்பெற்றுவரும் மகளிர் ... 01


# புலம்பெயர் தமிழர் ஜெனிவாப் போரில்

## அரசுக்கு எதிராக குதிக்க முடிவு

ஜெனிவா, பெப்ரவரி 11

அடுத்தமாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பான விவாதங்கள் நடைபெறும் நாள்களில் ஜெனிவாவில் மாபெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்குப் புலம்பெயர் தமிழர் அமைப்புகள் தயாராகி வருகின்றன.

அடுத்தமாதம் 15ஆம் திகதிமுதல் தொடர்ந்து சில தினங்களுக்கு ஜெனிவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபைத் தலைமையகத்துக்கு முன்பாக நடைபெறவுள்ள இந்த **ஆர்ப்பாட்டத்தில்ஐரோப்பிய நாடுகளில் உள்ள தமிழின உணர்வாளர்கள் மிகப்பெரும் எண்ணிக்கையில் கலந்துகொள்ளவுள்ளனர் என்று** புலம்பெயர் தமி

பார்க்க பக்கம் 04

> **''ஜெனிவாவில் நடைபெறவுள்ள புலம்பெயர் தமிழர்களின் ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொள்ள தமிழ்நாட்டில் இருந்தும் முக்கிய தலைவர்கள் செல்லவுள்ளனர்.''**

## திருப்பதியில் மஹிந்தவை சந்தித்தார் 'றோ' பணிப்பாளர்

கொழும்பு, பெப்.11

இந்தியாவின் வெளியகப் புலனாய்வு அமைப்பான 'றோ'வின் பணிப்பாளர் அலோக் ஜோசியை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரகசியமாக சந்தித்துப் பேசியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தகவலை 'இந்து' நாளிதழ் வெளியிட்டுள்ளது.

திருப்பதியில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் இந்தச் சந்திப்பு இரகசியமான முறையில் இடம்பெற்றுள்ளது.

சுமார் 30 நிமிடங்கள் வரை இந்த சந்திப்பு நீடித்ததாக இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரண்டு நாள் பயணமாக புத்தகாயா மற்றும் திருப்பதி தலங்களுக்குச் சென்றிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கு அரசியல் தலைவர்கள் எவரையும் சந்திக்கவில்லை. இந்த நிலையில் இந்திய 'றோ' அமைப்பின் பணிப்பாளர் அலோக் ஜோசியை சந்தித்துப் பேசியுள்ள விவகாரம் பலத்த சந்தேகங்களை தோற்றுவித்துள்ளது.

'றோ'வின் பணிப்பாளராக அலோக் ஜோசி கடந்த மாதமே பொறுப்பேற்றிருந்தார். இந்த நிலையில் இலங்கை ஜனாதிபதியை அவர் முதற்தடவையாக திருப்பதியில் சந்தித்துப் பேசியுள்ளார். அதன்போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்து எதுவும் தெரியவரவில்லை. ஆயினும் இந்திய மற்றும் இலங்கை அரசியல் வட்டாரங்களில் இந்தச் சந்திப்பு பல்வேறு சந்தேகங்களை எழுப்பியுள்ளது. (ஐ)

## பொருளாதாரத் தடையும் ஜெனிவா பிரேரணையில்?

ஜெனிவா, பெப்.11

ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரவுள்ள பிரேரணையில், இலங்கையில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கு ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கீழ்ச் செயற்படும் சிறப்புக் குழுவை நியமித்தல், பொருளாதாரத் தடையை விதித்தல் உள்ளிட்ட பல இறுக்கமான யோசனைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று தகவல்கள் கசிந்துள்ளன.

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா முன்வைக்கவுள்ள பிரேரணையின் பிரதிகள், கடந்தமுறை தீர்மானத்தை ஆதரித்த நாடுகளின் தூதுவர்களுக்கு தனிப்பட்ட முறையில் பரிமாறப்பட்டுள்ளன.

இலங்கையில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கு ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் கீழ் செயற்படும் சிறப்புக்குழுவொன்றை நியமிப்பதென்றும், இந்தக் குழு இலங்கையில் இருந்தே செயற்பட வேண்டும் என்

பார்க்க பக்கம் 04

## போவதா? விடுவதா?

### கூட்டமைப்புக்குள் குழப்பம்

கொழும்பு, பெப்.11

**ஜெனிவாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரின் ஓரங்க கூட்டங்களில் கலந்து கொள்வது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் வாதப் பிரதிவாதங்கள் ஏற்பட்டுள்ளன என்று அறியமுடிகிறது.**

**இந்தமுறை ஜெனிவாக் கூட்டத்தொடர் நடைபெறும் காலப்பகுதியில் தமிழ்த் தேசியக் கூட்ட**மைப்பின் நாடாளுமன்றக்குழு அங்கு சென்று இராஜதந்திரிகளுடன் பேசி, இலங்கை அரசுக்குத் தீர்வு விடயத்தில் அழுத்தங்களைக் கொடுக்க முயற்சிக்க வேண்டுமென கூட்டமைப்புக்குள் ஒருசாரார் கருதுகின்றனர். ஆயினும் இது விடயத்தில் கூட்டமைப்பின் தலைமைத்துவம் இதுவரை உத்தியோகபூர்வமான முடிவு எதனையும் எடுக்கவில்லையெனத் தெரி

பார்க்க பக்கம் 04

## விஸ்வரூபம் தடை விலகியது

கொழும்பு, பெப்.11

சர்வதேச மட்டத்தில் பெரும் சர்ச்சைகளையும் பரபரப்பையும் ஏற்படுத்திய, உலக நாயகன் கமலஹாசனின் 'விஸ்வரூபம்' திரைப்படத்துக்கு விதிக்கப்பட்டிருந்த தற்காலிகத்தடை நீக்கப்பட்டுள்ளது என இலங்கை அரசு அறிவித்துள்ளது.

அந்தத் திரைப்படத்தில் குறிப்பிட்ட காட்சிகள் நீக்கப்பட்டதன் பின்னரே அதற்கான அனுமதியை தணிக்கைச் சபை இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கியுள்ளது என கலாசார அலுவல்கள் அமைச்சர் டி.பி. ஏக்கநாயக்க தெரிவித்தார்.

கமலஹாஸன் இயக்கி நடித்துள்ள 'விஸ்வரூபம்' திரைப்படத்தில் இஸ்லாமியர்களுக்கு எதிரான காட்சிகள் இடம்பெற்றுள்ளன என்று முஸ்லிம் அமைப்புகள் போர்க்கொடி தூக்கின. அதனால் வன்முறைகள் வெடிக்கலாம் என்ற அச்சத்தில் தமிழகத்தில் இந்தப்படத்துக்கு தடை விதிக்கப்பட்டது.

அதேபோல், இலங்கையிலும் முஸ்லிம் அமைப்புகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டு விஸ்வரூபத்தைத் தடை செய்ய வேண்டும் என அரசிடம் வலியுறுத்தின. அதனை அடுத்து, இந்த விவகாரம் குறித்து ஆராய்வதற்காகவென இலங்கை அரசு விஸ்வரூபத்துக்கு தற்காலிகத் தடை விதித்திருந்தது. இப்போது தடை விலக்கப்பட்டுள்ளது. (நா-கி)

## இந்தியாவின் ஆதரவைப் பெற கூட்டமைப்பு டில்லியுடன் பேச்சு

### சுவிஸில் மாவை எம்.பி. தெரிவிப்பு

சூரிச், பெப்.11

இலங்கை தொடர்பான இந்தியாவின் அரசியல், இராஜதந்திர நடவடிக்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்தி, ஈழத் தமிழர் ஆதரவு நிலைப்பாட்டை மேற்கொள்ள வைப்பதற்கான பேச்சுகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு டில்லியுடன் முன்னெடுத்து வருகிறது.

மேலும், புலம்பெயர் தமிழர்களின் கொள்கை, இலட்சியப் பற்றுடனான செயற்பாடுகள் என்பன இலங்கையில்

பார்க்க பக்கம் 04

## சர்வதேச நாடுகளின் அழுத்தங்கள் இறையாண்மையில் தலையீடல்ல

### எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, பெப்.11

**இலங்கை அரசு ஏற்கனவே அளித்த வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்துமாறே சர்வதேச நாடுகள் வலியுறுத்துகின்றன. இது நாட்டின் இறையாண்மையில் தலையிடுவதாக** அர்த்தப்படாது - என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் 2009இல் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு ஏற்ப நாட்டில் பூரண ஜனநாயகத்தை ஏற்படுத்தவேண்டு

பார்க்க பக்கம் 04

## முள்ளிவாய்க்காலில் தங்கப் புதையல்; படையதிகாரிகளும் சகாக்களும் கைது?

### மறுக்கிறார் இராணுவப் பேச்சாளர்

யாழ்ப்பாணம், பெப்.11

முள்ளிவாய்க்காலில் விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்டதாகக் கூறப்படும் தங்கத்தை தோண்டியெடுப்பதில், படைத்தரப்புக்குள் ஏற்பட்ட முறுகலால், கிழக்குப் படைத் தலைமையகத்தைச் சேர்ந்த லெப். கேணல் உள்ளிட்ட 4 படையினர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு, அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இணையங்களில் செய்தி வெளியாகியுள்ளது. ஆயினும் அதனை இராணுவப் பேச்சாளர் மறுத்துள்ளார்.

இதுகுறித்து இணையங்களில் வெளிவந்த செய்தி வருமாறு-

கிழக்குப் படைத் தலைமையகத்தைச் சேர்ந்த லெப்.கேணல் ஒருவர் தலைமையிலான குழுவினர் கடந்த புதன்கிழமை **வெள்ளமுள்ளிவாய்க்காலுக்குச் சென்று,**

**'பரா3'சுட்டலின்சிதைவுகளை அண்டிய கடற்கரையில் நிலத்தை தோண்டினர்.**

**அந்தப் பகுதியில் நிலைகொண்டுள்ள, 29 ஆவது படைப்பிரிவினர் அதை அவதானித்துவிட்டு அவர்களிடம் ஏன் தோண்டுகிறீர்**

பார்க்க பக்கம் 04

## ஆறு கிராம சேவகர் பிரிவுகளில் வலி.வடக்கில் மீள்குடியமர்வு?

யாழ்ப்பாணம், பெப்.11

வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவில் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள 6 கிராமசேவகர் பிரிவுகளில் மக்கள் மீள்குடியமர அனுமதிக்கப்படவுள்ளனர் என்று தெரியவருகின்றது. இது குறித்த அறிவிப்பு ஜனாதிபதியின் யாழ். பயணத்தின் போது வெளியிடப்படவுள்ளதாகவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை வலி.வடக்கில் உள்ள எஞ்சிய 18 கிராம சேவகர் பிரிவுகளிலுள்ள மக்களது நிலங்கள் விடுவிக்கப்படாமல் நிரந்தரமாக படைத்தரப்பின் வசமாகிவிடலாம் என்ற சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இன்னமும் வலி.வடக்கில் 24 கிராமசேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய பகுதி மக்கள் பாவனைக்காக விடுவிக்கப்படாமல் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. தேசியப் பாதுகாப்பைக் காரணம் காட்டி குறித்த பகுதிகளை படையினர் கையகப்படுத்தியுள்ளனர்.

பார்க்க பக்கம் 04

# மஹிந்தவின் நீதி போதனைகள் தமிழர் பிரச்சினைக்கு தீர்வாகா

## இந்திய ஊடகம் எச்சரிக்கை

கொழும்பு, பெப்.11

விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் அதன் தலைவர் பிரபாகரனையும் ஒழித்து விட்டதன் மூலம் இலங்கையில் இனப்பிரச்சினை தீர்ந்து விட்டது என்று ஒருவேளை ராஜபக்ஷ நம்பலாம். ஆனால் அது தவறான முடிவாகும். இன, மத, பேதமின்றி ஒரே நாட்டுக்குள் ஐக்கியப்பட்டிருப்போம் என்ற அவரது போதனைகள் மேலும் பிரச்சினைகளையே உண்டுபண்ணும்.

இவ்வாறு இந்தியாவை தளமாகக் கொண்ட 'த ரிபியூன்' பத்திரிகை தனது ஆசிரிய தலையங்கத்தில் தெரிவித்துள்ளது. அந்தத் தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையின் 65 ஆவது சுதந்திர தினத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆற்றிய உரையில், 'இந்த நாட்டின் இன அடிப்படையில் வெவ்வேறு விதமான நிர்வாகங்களை நடத்துவது என்பது நடைமுறைச் சாத்தியமல்ல' என்று கூறியுள்ளார். இதன் மூலம் அந்நாட்டில் உள்ள தமிழ்ச் சிறுபான்மையினரின் உணர்வுகளுக்கு ஜனாதிபதியே ஊறு விளைவித்திருக்கிறார்.

இவ்வாறு அவர் கூறியிருப்பதானது, 2009 ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கு எதிராக நடைபெற்ற போரின் போது, போர்க் குற்றங்களுக்குரிய வழிமுறைகளைப் பின்பற்றி இராணுவரீதியாக அவர்களை வென்றபின்னர், தமிழர்களுக்கு அவர் அளித்த உறுதிமொழிகளிலிருந்து அந்த நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் அவர் பின்வாங்குகிறார் என்றே கொள்ள வேண்டும்.

போர் முடிவுற்றதன் பின்னர் இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்தில் 13ஆவது சட்ட திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு அதிகாரங்கள் பரவலாக்கப்படும் என்று அவர் உறுதிமொழி அளித்திருந்தார்.

இந்த உறுதிமொழியில் மஹிந்த, தமிழ்ச் சிறுபான்மை இனத்தின் மீது எவ்விதமான காழ்ப்புணர்வும் கிடையாது என்றும், விடுதலைப் புலிகள் இயக்கம் அழிக்கப்பட்ட பின் தமிழ் இனத்தினர் சிங்கள இனத்தினருடன் சரிசமமாகவே நடத்தப்படுவர் என்றும், இந்தச் செய்தி உலகம் முழுதும் கொண்டு செல்லப்பட வேண்டும் என்பதுமே எனது விருப்பாகும் என்று கூறியிருந்தார்.

அப்போது இலங்கை தமிழர்களுக்காக ஜனாதிபதி வெளிப்படுத்திய கருத்து, இலங்கை இராணுவத்தினர் தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட மனித உரிமை மீறல்களை அனைத்துலக சமூகத்தினரிடம் மூடி மறைக்கும் நோக்கைக் கொண்டது என்பது தற்போது மிகத் தெளிவாகத் தெரிகிறது.

ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில், இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்காக மஹிந்த அரசு மீண்டும் கடுமையான நெருக்கடிக்கு உள்ளாகலாம் என்றே தெரிகிறது.

இலங்கையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழித்ததன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது. தமிழரின் பிரச்சினைகளுக்கு இத்தகைய வழிகளில் முற்றுப்புள்ளி வைத்திட முடியாது. 2009 இல் ஜனாதிபதி தமிழ்ச் சிறுபான்மையினருக்கு அளித்த அனைத்து உறுதிமொழிகளிலிருந்தும் அவர் பின்வாங்கும் பட்சத்தில், இலங்கையில் வாழும் தமிழர்கள் தாங்கள் பாதுகாப்பாக இருக்கலாம் என்று கருத முடியாது.

பதிலாக அனைத்துத் தமிழ் மக்களின் விருப்பங்களையும் கருத்தில் எடுத்து அரசமைப்புச் சட்டத்தின் 13 ஆவது சட்ட திருத்தத்திற்கு ஏற்ப மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைப் பரவலாக்குவதன் மூலமே இலங்கை இனப்பிரச்சினைக்கு ஓர் உண்மையான தீர்வைக் காணமுடியும்.

மாறாக,"நாட்டில் அனைத்து இனத்தினரும் சம உரிமைகளுடன் சேர்ந்து வாழ்வதே தீர்வாகும்"என்று இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறும் நீதிபோதனைகள் எந்த வகையிலும் உதவமாட்டா - என்றுள்ளது. (ஐ)

## ரயில் மோதி பாலையூற்று பெண் சாவு

கொழும்பு, பெப்.11

திருகோணமலை சிமெந்து தொழிற்சாலையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயிலில் சிக்குண்டு வயோதிபப் பெண்ணொருவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

நேற்றுக்காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் திருகோணமலை, பூம்புகார், வீதி பாலையூற்றைச் சேர்ந்த இரண்டு பெண் பிள்ளைகளின் தாயாரான க.சித்திரி (வயது - 60) என்பவரே உயிரிழந்துள்ளார்.

திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்ட சடலம், பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் ஈ.ஜி.ஞானகுணாளன் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் உப்புவெளி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தனது வீட்டிலிருந்து காலை வேளை சுயதொழிலுக்காக ரயில் வீதியூடாக குறித்த வயோதிபப் பெண் நடந்துசென்றுகொண்டிருந்த போது ரயிலில் சிக்குண்டு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. (267)

## கஞ்சா கடத்திய சிப்பாய் கைது

வவுனியா, பெப்.11

வவுனியாவில் கஞ்சா கடத்திய இராணுவச் சிப்பாய் ஒருவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து ஒரு கிலோ இரண்டு கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

மொனராகலையிலுள்ள இராணுவ பயிற்சி பாடசாலையில் பயிற்சியை முடித்துக் கொண்டு வவுனியா முகாமுக்கு மீண்டும் திரும்பி வந்த போதே குறித்த இராணுவ சிப்பாய் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார் என்று இராணுவத்தினர் தெரிவித்தனர்.

வவுனியாவில் கஞ்சா விநியோகிப்பவர்களுக்கு வழங்குவதற்காகவே இவர் கஞ்சாவைக் கடத்தி வந்ததாக சொல்லப்படுகிறது. (ஐ)

## சடலம் மீட்பு

வவுனியா, பெப்.11

வவுனியா தட்சணாங்குளத்தில் இருந்து நேற்று மாலை வவுனியா பொலிஸாரினால் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா தோணிக்கல்லை சேர்ந்த செல்லையா கோபகரன் (வயது-17) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவர் தனது நண்பர்களுடன் குளத்தில் குளிக்கச் சென்ற போதே நீரில் மூழ்கி பலியாகியிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் வவுனியா பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## தமிழக அரசியல் கட்சிகள் மீது சட்ட நடவடிக்கை வேண்டும்

### சுப்பிரமணியசுவாமி வலியுறுத்து

டில்லி, பெப்.11

திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் சில அமைப்புகள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டு வருகின்றன என்று ஜனதா கட்சியின் தலைவர் சுப்பிரமணியசுவாமி குற்றஞ்சாட்டியுள்ளார்.

இரண்டு நாள் பயணமாக இந்தியா வந்திருந்த இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக இந்திய தமிழ்க் கட்சிகளால் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

இதுதொடர்பில் கருத்து வெளியிட்டபோதே சுப்பிரமணியசுவாமி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில்:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டு



வரும் ஆர்ப்பாட்டங்கள் வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியவை.

தமிழக அரசியல் கட்சிகள் இலங்கை அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வது தமிழ்நாட்டில் பயங்கரவாதத்தை தோற்றுவிப்பதாக அமையும்.

எனவே இது தொடர்பில் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகம், மறுமலர்ச்சி முன்னேற்றக் கழகம் என்பவற்றின் மீது சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

## கைகலப்பு சந்தேகநபருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,பெப்.11

வீதியில் உரையாடிக் கொண்டிருந்த மூவரை கடுமையாகத் தாக்கிவிட்டுத் தப்பிச் சென்ற நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

இந்தச் சமயம் தாவடி தெற்கு நல்லூர் பதி முருகன் கோவிலை அண்மித்து இடம்பெற்றது. சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த மூவர் காயமடைந்து சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

கோண்டாவிலைச் சேர்ந்த நபரே சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இவர் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (ஐ-4)

## மாணவி விரும்பாததால் அனுமதி மறுக்கப்பட்டது

### வைத்தியசாலை பதில் பணிப்பாளர் விளக்கம்

யாழ்ப்பாணம்,பெப்.11

பாதிக்கப்பட்ட மாணவி தன்னை பார்வையிட அனுமதிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டதற்கு இணங்கவே யாழ். மாநகர சபை முதல்வர் உட்பட்ட குழுவினரை வைத்தியசாலை விடுதிக்குள் அனுமதியாது திருப்பி அனுப்பினோம். இவ்வாறு தெரிவித்தார். யாழ். போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் எஸ். ஸ்ரீபவானந்தராஜா.

யாழ்.நகரில் உள்ள ஆரம்பப் பாடசாலை மாணவி ஒருவர் கடந்த 31 ஆம் திகதி பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட நிலையில் வைத்தியசாலையில சேர்க்கப்பட்டார்.

பாதிக்கப்பட்ட மாணவியை பாடசாலை அதிபர் மற்றும் மாநகர சபை முதல்வர் உட்பட்டோரை பார்வையிட வேண்டும் என வைத்தியசாலை தரப்பே கோரியது.

அதன்படி அவர்கள் வைத்தியசாலைக்கு வந்தபோது எனது தலைமையில் அவர்களை அழைத்துச் சென்று வெளியே நிறுத்தி விட்டு பிரஸ்தாப மாணவியிடம் அனுமதி கோரினேன். எனினும் அவர்கள் பார்வையிடுவதை அந்த மாணவி விரும்பவில்லை. இதன் காரணமாக அந்தக் குழுவினருக்கு சம்பவத்தை தெளிவுபடுத்தி திருப்பி அனுப்பி விட்டேன். - என்றார்.

கடந்த முதலாம் திகதி பார்வையாளர் நேரம் நிறைவடைந்த பின்னர் ஆளும் தரப்பு அரசியல்வாதிகள் சிலர் வைத்தியசாலை பணிப்பாளருடன் விடுதிக்குள் நுழைந்தனர் என்று உதயனில் செய்தி வெளியாகி இருந்தது.

அது தொடர்பில் விவரிக்கையிலேயே பதில் பணிப்பாளர் மேற்படி விளக்கத்தை தெரிவித்தார். (ஐ-4)

## வெட்டுப்புள்ளி வெளியானது

2011/ 2012 ஆம் கல்வியாண்டு பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ளன.

www. ugc.ac.lk என்ற என்ற இணையத்தளத்தில் பார்வையிட முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வெட்டுப் புள்ளிகள் பழைய, புதிய பாடவிதானங்களுக்கு அமைய வெளியிடப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மார்ச் மாத இறுதிக்குள் மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்குள் உள்வாங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் ஷெனிகா ஹிருபுரேகம தெரிவித்துள்ளார். (ஐ)

## உலக நாடுகளை ஏமாற்றி வரும் மஹிந்தவின் சுயரூபம் அம்பலம்

### சுதந்திர தின உரையை கோடி காட்டுகிறார் சுமந்திரன் எம்.பி.

கொழும்பு, பெப்.11

அதிகாரப்பகிர்வை அர்த்தமுள்ளதாக்குவோம் என சர்வதேசத்துக்கு வாக்குறுதியளித்து அதனை ஏமாற்றிவரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உண்மையான நிலைப்பாடு தற்போது வெளிப்படத் தொடங்கியுள்ளது. இதுதான் அவரது உண்மையான நிலைப்பாடு.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலையில் இடம்பெற்ற சுதந்திரதின வைபவத்தின்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆற்றிய உரையினூடாகவே அவரது இந்த உண்மையான நிலைப்பாடு வெளிப்படத் தொடங்கியுள்ளது என்று தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

சர்வதேசத்திடம் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத நாடாக இலங்கை மாறியுள்ளது எனத் தெரிவித்த அவர், அனைத்து மக்களும் அரசியல் உரிமைகளைக் கையாளும் வகையில் அதிகாரங்கள் பகிரப்படவேண்டும். நாட்டின் சர்வாதிகாரப் போக்கு மாற்றப்படவேண்டும் என்றும் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற பொது எதிர்க்கட்சிகளின் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வினூடாகத் தீர்வு வழங்குவோம். அந்த அதிகாரப் பகிர்வை அர்த்தமுள்ளதாக்குவோம் எனவும் 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கமைய தீர்வு வழங்கப்படும் என்றும் ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கும், இந்தியாவுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

அதிகாரப் பகிர்வை அர்த்தமுள்ளதாக்குவோம் என கடந்த 7 வருடங்களாக சர்வதேசத்துக்கு வாக்குறுதியளித்து வந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, திருகோணமலையில் இடம்பெற்ற சுதந்திரதின வைபவத்தில் ஆற்றிய உரையில் தமது உண்மையான நிலைப்பாட்டை வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளார். ஏழு வருடங்களாக சர்வதேசத்தை ஏமாற்றிவந்ததுதான் அவரது உண்மையான நிலைப்பாடு. அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத நாடு என இலங்கை மாறியுள்ளது.

நாட்டிலுள்ள அனைத்து மக்களும் அரசியல் உரிமைகளைக் கையாளும் வகையில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும். அவ்வாறு அதிகாரங்கள் பகிரப்பட்ட நாடாக இலங்கை மாறவேண்டுமெனில், இங்கு இடம்பெற்று வரும் சர்வாதிகாரப் போக்கு மாற்றப்படவேண்டும்.

பொதுபல சேனா அரசின் நாடகம் பொதுபல சேனா இயக்கத்தினூடாக முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் எதிர்ப்பு நடவடிக்கைகள் அரசின் நாடகமாகும். அரசின் சக்திகள்தான் இந்த இயக்கத்தின் பின்னின்று செயற்படுகின்றன. தமது ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ளவே அரசு இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்கிறது. இதற்கு மக்கள் ஒருபோதும் இடமளிக்கக் கூடாது - என்றார் சுமந்திரன். (ஐ)

# ஜனாதிபதி வருகையால் பரபரப்பாகும் குடாநாடு

யாழ்ப்பாணம், பெப்.11

ஜனாதிபதி மற்றும் அரசியல் கட்சிகளின் பிரமுகர்களின் வருகையை எதிர்பார்த்து குடாநாடு பரபரப்பை எதிர்நோக்கியுள்ளது.

இதற்கென பிரத்தியேகமாக வீதித் திருத்தப் பணிகளும், கட்டட நிர்மாணப் பணிகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. பாதுகாப்பு நடவடிக்கைகளும் பலப்படுத்தப்பட்டுள்ளன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாளை செவ்வாய்க்கிழமை இரண்டு நாள் பயணமாக யாழ்.மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளார்.

அன்றைய தினம் யாழ்.மாவட்டத்தின் விசேட அபிவிருத்திக் குழுக் கூட்டம் 'டில்கோ' விடுதியில் ஜனாதிபதி தலைமையில் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து நயினாதீவுக்கும், வலி. வடக்கு பாதுகாப்பு வலயத்தில் மயிலிட்டி பிரதேசத்தில் படையினரால் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஹோட்டல் திறப்பு விழாவுக்கும் ஜனாதிபதி செல்லவுள்ளார்.

இரண்டு நாள் பயணத்தில் மறுநாள் புதன்கிழமை ஜப்பான் அரசின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட யாழ்.போதனா



வைத்தியசாலையின் கட்டடத் திறப்பு விழாவிலும் சுன்னாகத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய மின் பிறப்பாக்கி நிலையத்தின் ஆரம்ப நிகழ்விலும் ஜனாதிபதி கலந்துகொள்ளவுள்ளார்.

ஜனாதிபதியின் வருகையின் பின்னர் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள வலி. வடக்குப் பகுதியில் மக்களை மீள்குடியமர்த்துமாறு கோரி எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய முன்றலில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. இதில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் உட்பட அரசியல் கட்சிகளின் பிரமுகர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இன்று திங்கட்கிழமை இலங்கையின் இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவொன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து போரால் பாதிக்கப்பட்ட இடம்பெயர்ந்து நலன்புரிநிலையங்களில் உள்ள மக்களை நேரடியாகச் சந்தித்து அவர்களது பிரச்சினைகளைக் கேட்டறியவுள்ளனர்.

யாழ்.நகர் வர்த்தகர்களால் கே.கே.எஸ்.வீதியின் திருத்தப் பணிகளை விரைவுபடுத்துமாறு பலதடவைகளில் கோரிக்கை விடப்பட்ட போதும் அதற்கான பணிகள் முன்னெடுக்கப்படாத நிலையில் அரசியல் கட்சிகளின் பிரமுகர்களின் வருகையை முன்னிட்டு வீதித்திருத்தப் பணிகள் இரவு, பகல் எனப் பாராமல் நடைபெற்று வருகின்றன.

இதனை விட பாதுகாப்பு நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கென விசேட பாதுகாப்புக் குழு உட்பட பெரும் எண்ணிக்கையில் இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக ஜனாதிபதி செல்லவுள்ள இடங்களுக்கு பாதுகாப்புகள் முன் ஆயத்தமாகப் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இதனைவிட ஏ-9 வீதியில் வாகனத் தொடர்கள் மூலம் கண்காணிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-14-17-135-ரி)

# வலுவிழந்த தொழில் முயற்சியாளருக்கு வாகன அனுமதி எப்போது கிடைக்கும்?

## திட்டம் கிடப்பில் போடப்பட்டதால் செய்வதறியாது திண்டாட்டம்

யாழ்ப்பாணம், பெப்.11

***யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மாற்று வலுவுடையோருக்கு வாகன அனுமதிப் பத்திரம் வழங்கும் நடைமுறை கிடப்பில் போடப்பட்டுள்ளது. இதனால் அதற்கென விண்ணப்பம் செய்த மாற்று வலுவுடைய தொழில் முயற்சியாளர்களின் வாழ்வாதாரச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. எப்போது வாகன அனுமதி கிடைக்கும் என்றும் அவர்கள் கவலையுடன் கேள்வி எழுப்பியுள்ளனர்.***

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஊடாக மாற்று வலுயுடையவர்களுக்கான வாகன அனுமதிப் பத்திரம் வழங்கப்படுவது தொடர்பான ஒரு சுற்றறிக்கை மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தால் வெளியிடப்பட்டது.

இந்தச் சுற்றறிக்கையின் பிரகாரம் தொழில் முயற்சிகளை மேற்கொள்ளக்கூடிய தகுதி வாய்ந்த மாற்று வலுவுடையவர்களுக்கு வாகன அனுமதிப் பத்திரம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் போர் மற்றும் விபத்து போன்ற காரணங்களாலும் பிறப்பிலேயே அங்கவீனமடைந்தவர்களும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தக் கூடியதாக உரிய தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள ஏதுவாக வாகனங்களைச் செலுத்தக் கூடியவர்களுக்கு வாகன அனுமதிப் பத்திரம் கட்டாயமாக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் உரிய வாகன அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ள தகுதியுடைய மாற்று வலுவுடையவர்கள் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திடம் வாகன அனுமதிப் பத்திரத்துக்காக விண்ணப்பம் செய்தனர்.

எனினும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தமது சுற்றறிக்கையின் பிரகாரமே வாகன அனுமதிப் பத்திரம் வழங்க ஆவன செய்யப்படும் எனத் தெரிவித்திருந்தது. இதனால் மாற்று வலுவுடையவர்களுக்கான வாகன அனுமதிப் பத்திரம் வழங்கப்படும் நடைமுறை கிடப்பில் போடப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 30 இற்கும் மேற்பட்ட மாற்றுவலுவுடைய தொழில் முயற்சியாளர்கள் வாகன அனுமதிப் பத்திரம் கோரி மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திடம் விண்ணப்பம் செய்துள்ளனர்.

இதனால் தொழில் முயற்சிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளன. அத்துடன் அவர்களுடைய குடும்பத்தின் வாழ்க்கைத் தரம் பாதிப்படைந்துள்ளது.

மாற்று வலுவுடையவர்கள் தமக்கான தொழில் வாய்ப்புக்கள் வருமானத்தைப் பெறக் கூடியதாக இருந்தாலும் சந்தைப்படுத்தலை மேற்கொள்ளக் கூடியதாக போக்குவரத்துக்காக வாகனங்களைச் செலுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த விடயத்தில் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் மாற்றுவலுவுடையவர்களின் ஆற்றல்களைப் புறக்கணிப்பதுடன் அவர்களது தொழில் வாய்ப்புக்களையும் புறந்தள்ளி விடுகின்றது என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மாற்று வலுவுடையவர்கள் தொடர்ந்தும் இன்னொருவரிடம் தங்கி வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் இவர்கள் உளப் பாதிப்புக்களையும் சந்திக்க நேரிட்டுள்ளது.

இயற்கையாகவே அங்கவீனமடைந்தவர்களை விட போர் மற்றும் விபத்துகளால் யாழ். மாவட்டத்தில் மாற்று வலுவுடையவர்கள் உருவாக்கப்பட்டுள்ளார்கள். இந்த நிலையில் இவர்களின் குடும்ப வாழ்வாதாரம் தொடர்பாகக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

குடும்ப வாழ்வாதாரத்துக்குத் தொழில் வாய்ப்புக்கள் சாதகமாக அமைவதால் அதனை மேற்கொள்வதற்கே மாற்று வலுவுடையவர்கள் வாகன அனுமதிப் பத்திரத்துக்கு விண்ணப்பம் செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மாற்று வலுவுடைய தொழில் முயற்சியாளர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தகுதியுடைய வாகன அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் ஆவன செய்ய வேண்டும் என்று பாதிப்படைந்துள்ள மாற்றுவலுவுடைய தொழில் முயற்சியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-14)

## மதுமயக்கத்தில் 'சாகசம்' புரிந்த ஆசாமிக்கு தண்டனை

மதுபோதையில் சாவகச்சேரி நகரிலுள்ள வளைவில் ஓடும் லொறியிலிருந்து பாய்ந்து வீழ்ந்ததுடன் நகர்ப் பகுதியில் நின்ற பொது மக்கள், பொலிஸார், படையினர் ஆகியோரை தகாத வார்த்தைகளால் பேசிய யாழ். பாசையூர் வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் அபராதம் விதிக்கப்பட்டது.

புதன்கிழமை பிற்பகல் வேளையில் நகர்ப் பகுதி வளைவில் லொறியிலிருந்து வீழ்ந்த நபர், தூக்கச் சென்றவர்களை தாக்க முயற்சித்ததுடன் அங்கு சென்ற பொலிஸார், படையினர் ஆகியோரையும் தகாத வார்த்தைகளால் பேசியுள்ளார்.

தகவல் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து அங்கிருந்து வந்த பொலிஸ் வாகனம் அவரை ஏற்றிச் சென்றது. நகர்ப் பகுதியில் மதுபோதையில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்ததாக இந்த நபருக்கு எதிராக பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

வழக்கை விசாரித்த பதில் நீதிவான் சு.இ.கந்தசாமி எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து 3 ஆயிரம் ரூபா அபராம் விதித்து அபராதத் தொகையை செலுத்தத் தவறின் ஒரு மாத சாதாரணை சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (ம-9)

வலி. கிழக்குப் பிரதேச பாடசாலைகளில்

# இடைவிலகிய மாணவரை மீண்டும் இணைக்க நடவடிக்கை

அச்சுவேலி, பெப்.11

வலி. கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் பாடசாலைக்குச் செல்லாத, பாடசாலைகளில் இருந்து இடைவிலகிய மாணவர்களை இனங்கண்டு பாடசாலைகளில் சேர்த்துக்கொள்வதற்கான செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வாரத்தில் குறித்த தினத்தில் கிராம அலுவலர் உதவியுடன் பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்களை கண்டறிவதற்கு குழுக்கள் செல்கின்றன.

பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்களைக் கண்டறியும் குழுவில் கிராம அலுவலர், சமுர்த்தி அலுவலர், சிறுவர் நலன் அபிவிருத்தி அலுவலர் மற்றும் பட்டதாரிப் பயிலுநர்கள் இடம்பெற்றுள்ளனர்.

வலி. கிழக்கில் ஆனந்தபுரம், செல்வாபுரம், கலைமதி உள்ளடங்கலாக கிராம அலுவலர் பிரிவு ரீதியாக பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்களைக் கண்டறியும் குழுவின் செயற்பாடுகளுக்கு சனசமூக நிலையங்கள், மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் நிர்வாகிகளும் உள்ளூர் பிரமுகர்களும் பொருத்தமான முறையில் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

குழுவினர் கண்டறியும் சிறுவர்கள் உடனடியாக பாடசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு வகுப்புக்களில் அனுமதிக்கப்படுகின்றனர்.

குழுவினரால் கண்டறியப்பட்டு பாடசாலையில் சேர்க்கப்பட்ட சிறுவர்களில் கற்றல் நடவடிக்கைகளில் பாடசாலைச் சமூகம் பூரண ஒத்துழைப்பு வழங்கி வருகின்றது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

குறித்த சமுகத்தினர் சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் மறைந்திருக்கும் இடங்கள் தொடர்பான தகவல்களைக் குழுவினருக்கு வழங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

கல்வியில் அக்கறை இல்லாமல் விடுவதால் ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் தொடர்பாக பாடசாலைக்குச் செல்லாமல் மறைந்திருக்கும் சிறுவர்களைக் கண்டு பிடிக்கும் குழுவினர் அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி பாடசாலையில் சேர்த்துவிடுகின்றனர்.

இதனால் குறித்த மாணவர்கள் மீண்டும் கற்றல் செயற்பாடுகளில் ஆர்வத்தோடு ஈடுபட்டு வருகின்றனர் என்றும் கூறப்படுகிறது. (ம-11)

# ரூபா 3.35 மில்லியன் செலவில் வீரசிங்கம் மத்தியில் அபிவிருத்தி

தென்மராட்சி, பெப்.11

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் 3.35 மில்லியன் ரூபா செலவில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கல்லூரியின் நீண்டநாள் தேவையான விஞ்ஞான ஆய்வுகூடம், ஆங்கில செயற்பாட்டறை உட்பட பல்வேறு உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்வதற்காக மாகாண கல்வித் திணைக்களத்தால் இரண்டு மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

ஏ-9 வீதியுடன் காணப்பட்ட மதில் உடைக்கப்பட்டமைக்கான இழப்பீட்டுத் தொகையாக வீதி அபிவிருத்தி அதிகார சபையால் வழங்கப்பட்ட 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியில் புதிய மதில் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

அமரர் கனகசபை நினைவாக அவரது குடும்பத்தினரால் ஆறு இலட்சம் ரூபா செலவில் கல்லூரி முகப்பு பெயர் வளைவு அமைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது என்றும் கல்லூரி அதிபர் வே.விநாயகமூர்த்தி தெரிவித்தார். (ம-9)

# இனவாத விதைப்பில் அரசு; தீர்வு சாத்தியமாவது எப்படி?

## பொது எதிரணி காட்டமான கேள்வி

கொழும்பு, பெப்.11

இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக முன்னோக்கிச் செல்லவேண்டிய பயணம் அரசின் பின்னோக்கிய ஓட்டத்தால் முடக்கப்பட்டு விட்டது. இந்நிலையில், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு எப்படி சாத்தியமாகும் என்று பொது எதிர்க்கட்சிகள் நேற்றுக் கேள்வி எழுப்பின.

சீனாவின் ஆதிக்கத்தை நாட்டில் மேலோங்கச் செய்வதனால் அரசு, இந்தியாவைக் கோபப்படுத்துவதுடன் இனவாதத்தைத் தூண்டிவிட்டு சர்வதேச தீவிரவாதத்தை நாட்டினுள் கொண்டுவரவும் முயற்சிக்கிறது என்றும் குற்றஞ்சாட்டின.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் 'எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு' என்ற தொனிப்பொருளில் பொது எதிர்க்கட்சிகள் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவை மேற்கண்டவாறு தெரிவித்தன.

இதன்போது ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி ஜயவிக்கிரம பெரேரா கருத்துத் தெரிவிக்கையில்-

''இந்து சமுத்திரத்தில் இந்தியா, சீனா ஆகிய நாடுகள் பலம் வாய்ந்தவையாக இருக்கின்றன.

எமது அயல்நாடான இந்தியாவைக் கேவலப்படுத்தி சீனாவின் ஆதிக்கத்தை நாட்டில் அரசு வலுவடையச் செய்கிறது. அதுமட்டுமன்றி, மீண்டும் நாட்டில் இனவாதத்தைத் தூண்டிவிடும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. இதனூடாக சர்வதேச தீவிரவாதத்தை நாட்டினுள் கொண்டுவருவதற்கு அரசு முயற்சிக்கின்றது.

மேலும் விபசாரத் தொழில் அதிகரிக்கும் நாடாக இலங்கை மாறிவருகின்றது. இதுவரையில் 40 ஆயிரம் பெண்கள் விபசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்'' - என்றார்.

நவசமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன இதன்போது கருத்துத் தெரிவிக்கையில்-

''இலங்கையில் இடம்பெற்றுவரும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வழங்க அரசு நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென போரை முடிவுக்குக்கொண்டுவர இலங்கை அரசுக்கு ஆதரவளித்த அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகள் அழுத்தம் கொடுக்கின்றன.

இவ்வாறான நிலையில், போரின்போது காணாமல்போனோர்கள் தொடர்பில் இந்தியாவிடம் கேட்கவேண்டுமென இதுதொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட இராணுவத்தினரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது எந்தப் பயனுமற்ற அறிக்கையாகும் இவ்வாறு பொய் கூறி சர்வதேசத்திடமிருந்து நாம் தப்பிக்க முடியுமா?

**முஸ்லிம் எதிர்ப்பு நடவடிக்கைகள்**

தமிழ் மக்களுக்கு எதிராக அரசு கட்டவிழ்த்துவிடுகின்ற அடக்குமுறைகள் உலகத்திற்கு நன்றாகவே தெரியும். இந்நிலையில், தற்போது முஸ்லிம்களுக்கு எதிராகவும் அரசு அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவருகிறது.

பொதுபலசேனா இயக்கத்தினூடாக முஸ்லிம்களுக்கு எதிராகக் கடுமையான எதிர்ப்புகள் கிளம்புகின்றன.

பௌத்த பிக்குகளுக்கு ஹலால் உணவு வேண்டாம் என்றால், அவர்கள் விகாரையில் இருந்து போதனை செய்துகொண்டு தமக்கு ஹலால் வேண்டாம் எனக் கூறவேண்டும். வீதிகளுக்கு இறங்கி, கடைகளை உடைத்து அடக்குமுறைகளை மேற்கொள்ளக்கூடாது'' - என்றார்.

(சி)

## முள்ளிவாய்க்காலில்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கள் என்று விசாரித்தனர். அப்போது தன்னை அடையாளம் காட்டிய லெப்டினன்ட் கேணல், அந்த இடத்தில் விடுதலைப் புலிகள் பெருமளவு தங்கம் மற்றும் பணத்தை புதைத்து வைத்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளதாகவும், அதுபற்றி தான் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாவும் கூறியுள்ளார்.

எனினும் தமது முன்அனுமதி பெற்றே அங்கு தோண்ட வேண்டும் என்று 29 ஆவது படைப்பிரிவு அதிகாரி அவர்களுக்கு கூறினார்.

இதனால், இருதரப்புக்கும் இடையில் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது.

அதனை அடுத்து தாம் வந்த டபிள்கப் வண்டியில் ஏறி லெப்.கேணல் மற்றும் மூன்று படையினரும் தப்பிச் சென்றனர்.

இதுதொடர்பாக உயரதிகாரிகளுக்கு தகவல் கொடுத்ததை அடுத்து, தப்பிச் சென்ற லெப்.கேணல் மற்றும் படையினரைப் பிடிக்க வீதித் தடுப்புகள் போடப்பட்டன.

பன்சல்கட பகுதியில் போடப்பட்டிருந்த வீதித்தடையில் அந்த டபிள் கப் வாகனத்தை நிறுத்துமாறு உத்தரவிட்டபோது, அது வேகமாக செல்ல முயன்றது.

அங்கிருந்த படையினர் அதன் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர். ஆனால் அதையும் மீறி அவர்கள் தப்பிச் சென்றனர்.

இதையடுத்து அவர்களை தடுத்து நிறுத்த 62-1 பிரிகேட் படையினருக்கு உத்தரவிடப்பட்டது. அதன் பின்னர் குறித்த படைப்பிரிவினர் லெப். கேணலையும் அவர்களது சகாக்களையும் கைதுசெய்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

ஆயினும் குறித்த இணையச் செய்தி தொடர்பாக உதயனுக்குக் கருத்துத் தெரிவித்த இராணுவப் பேச்சாளர் பிரிகேடியார் ருவான் வணிகசூரிய:-

''லெப்.கேணல் உள்ளிட்ட நான்கு படையினர் கைதுசெய்யப்பட்டது உண்மைதான். ஆயினும் அவர்களிடமிருந்து சந்தேகத்துக்கிடமான எந்தவொரு பொருளும் கைப்பற்றப்படவில்லை. அத்துடன் அவர்கள் போக்குவரத்து ஒழுங்கு விதிகளை மீறியமைக்காகவே கைதுசெய்யப்பட்டுள்ளனர். மதவாச்சி சோதனைச்சாவடியில் குறித்த அதிகாரியும், சகாக்களும் நிற்காமல் சென்றதாலேயே இந்த நடவடிக்கையை மேற்கொண்டோம். மாறாக இணையங்களில் இது குறித்து வெளியான செய்திகளில் உண்மையில்லை.'' என்று தெரிவித்தார்.

(ங)

## பொருளாதார..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

றும், இந்தத் தீர்மானத்தில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என்று இராஜதந்திர வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உரியமுறையில் நடைமுறைப்படுத்த வலியுறுத்துதல், மனித உரிமைகளைப் பாதுகாத்தல், ஆள்கள் காணாமல் போவதை தடுத்தல் மற்றும் நீதித்துறை சுதந்திரத்தை உறுதிசெய்தல் போன்றவற்றை வலியுறுத்தவும் இந்தப் பிரேரணையில் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன எனத் தெரியவருகிறது.

இவைதவிர, வடக்கில் நிலைகொண்டுள்ள இலங்கைப் படையினரைக் குறைத்தல், வடக்கு, கிழக்கு மக்களின் காணிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நிரந்தர வேலைத் திட்டத்தை முன்னெடுத்தல், ஆள்களைக் கைதுசெய்தல் மற்றும் தடுத்து வைத்தல் கொள்கைகளை அனைத்துலக சட்டங்களுக்கு ஏற்ப அமைத்தல், கருத்துச் சுதந்திரத்தை உறுதி செய்தல் மற்றும் மாகாணசபைகளுக்கு உரிய அதிகாரங்களை வழங்குதல் தொடர்பான பல யோசனைகளும் இந்தப் பிரேரணையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்கும் யோசனையும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் கூறியுள்ளன.

அமெரிக்காவினால் தயாரிக்கப்பட்டுள்ள இந்தப் பிரேரணை முன்மொழிவு அடுத்த இரண்டு வாரங்களில் மேலும் திருத்தம் செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன எனவும் இராஜதந்திர வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ங-சி)

## புலம்பெயர்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ழர் அமைப்புகளின் பிரதிநிதிகள் நேற்றுத் தெரிவித்தனர்.

இறுதிப் போரில் நடைபெற்ற உயிரிழப்புகளுக்கு நீதி விசாரணை கோரியும், இது விடயத்தில் சர்வதேச சமூகம் தலையிட வேண்டி வலியுறுத்தியுமே இந்த மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளதாக மேற்படி பிரதிநிதிகள் மேலும் குறிப்பிட்டனர்.

இதற்கிடையில் புலம்பெயர் தமிழர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தும்போது அதற்குப் போட்டியாக, இலங்கை அரசுக்காக ஆதரவு தெரிவித்து புலம்பெயர் சிங்கள அமைப்புகளும் ஆர்ப்பாட்டங்களை நடத்தும் முன்னெடுப்புகளில் இறங்கியுள்ளன. இதனால் ஜெனிவாவில் அடுத்த மாத முற்பகுதியிலிருந்து விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளை நகரப் பொலிஸார் மேற்கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, ஜெனிவாவில் நடைபெறவுள்ள புலம்பெயர் தமிழர்களின் ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொள்வதற்காக தமிழ்நாட்டிலிருந்தும் முக்கிய தலைவர்கள் அங்கு செல்லவுள்ளனர் என்றும் அறியமுடிகின்றது.

(ங-சி)

## சர்வதேச..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மென்றால் அரசமைப்பின் 18ஆவது திருத்தச் சட்டத்தை இரத்துச்செய்து, 17ஆவது திருத்தச் சட்டத்தை மீண்டும் கொண்டுவரவேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷவின் அரசு சர்வதேச நிதியத்துக்கு அடிமைப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் எமது நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்காக இந்த நாணய நிதியம் பல தடவைகள் எமக்கு உதவியது. இப்போது அந்த நிலைமை மாறிவிட்டது. கல்வி, சுகாதாரம், நலன்புரி போன்ற மக்களுக்குத் தேவையானவற்றைக் குறைப்பதற்காகவே நாணய நிதியம் நிதி வழங்குகிறது.

இதற்கு முன்னர் பல தடவைகள் எமது நாடு வெளிநாட்டு வங்கிகளில் கடன் பெற்றுள்ளது. அதனால், அதற்கான அந்த வங்கிகளில் ஒப்பந்தத்திற்கு எமது நாடு அடிமைப்பட்டுள்ளது.

நாட்டில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் பல நாடுகள் பல்வேறுபட்ட யோசனைகளை முன்வைத்துள்ளன. அந்த நாடுகள் எமது நாட்டு விவகாரத்தில் தலையிடுவதை நிறுத்தவேண்டுமென்றால் நாம் ஐ.நா. மனித உரிமைகள் சபையுடன் இணைந்து செயற்படவேண்டும்.

இலங்கையில் மனித உரிமை மீறல், மனித உரிமைகளைப் பாதுகாக்க எடுக்கும் செயற்பாடுகள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் 2009இல் பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட்டது. அந்த யோசனையை 100 வீதம் நிறைவேற்றுமாறு நான் அரசைக் கேட்கிறேன்.- என்றார். (ங-சி)

## இந்தியாவின்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

சிறந்தொரு அரசியல்தீர்வை - தமிழர் தாயகத்தில் தமிழர் ஆட்சியை நிலைநாட்டுவதற்கு பேருதவியாக அமையும் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சுவிஸ் சூரிச் மாநகரில் 'சிவராம் நினைவுப் பணிமன்றம்' ஏற்பாடு செய்த ஐந்தாவது நினைவுக் கருத்தரங்கு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு 'இனப்பிரச்சினையும் சமகால அரசியலும்' என்ற தலைப்பில் உரையாற்றிய மாவை சேனாதிராஜா மேலும் தெரிவித்தாவது-

இலங்கையில் இன்றும் பத்திரிகைச் சுதந்திரம் அற்ற சூழலே நிலவுகிறது. இனப்பற்றோடும், விடுதலை உணர்வோடும் உழைத்துவரும் தமிழ்ப் பத்திரிகையாளர்கள் மட்டுமல்ல நீதி, நியாயத்துக்காகக் குரல் கொடுத்து வரும் சிங்கள ஊடகவியலாளர்களும் கொல்லப்பட்டும் அச்சுறுத்தப்பட்டும் வருகின்றனர். அரசின் சர்வாதிகார, இனவாத ஆட்சியினால் அச்சுறுத்தலுக்கு உள்ளான ஊடகவியலாளர்கள் வெளிநாடுகளில் தஞ்சம் கோரியுள்ளனர்.

மாறிவரும் உலகின் போக்குக்கு ஏற்ப நாமும் நமது இராஜதந்திர அரசியல் நடவடிக்கைகளை வகுக்க வேண்டும். சர்வதேச நாடுகளை அனுசரித்து இராஜதந்திரப் போரில் தமிழ்த் தலைவர்கள் ஒன்றுபட்டுச் செயற்பட்டு வெற்றிபெற வேண்டும். அல்லது அணிதிரண்டுவரும் சர்வதேச நாடுகள் விரக்தியடைந்துவிட நேரும். குறிப்பாக புலம்பெயர்ந்த தமிழர்கள் இந்த இராஜ தந்திர நடவடிக்கையில் செயலாற்றி வருவது முக்கியமானதாகும்

இந்த அரசின் நிகழ்ச்சி நிரல் தமிழ்த் தேசிய இனத்துக்குரித்தான இறைமை, சுயநிர்ணய உரிமைத் தத்துவத்தை அழித்துவிடுவதை நோக்கமாகக் கொண்டது. தமிழ், முஸ்லிம் மக்களின் வாழ்வுரிமையை அழித்து, இன அடையாளத்தை அழித்துவிடும் இன ஒழிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகின்றது.

அமிர்தலிங்கத்துடன் பேச்சு நடத்திய பின்னர் இந்தியப் பிரதமராக இருந்த இந்திரா காந்தி 1983 ஓகஸ்ட் 16 ஆம் திகதி இந்திய மக்களவையில் மேல் சபையில் அறிவித்தபோது, 'இலங்கையில் நடப்பது இன அழிப்பு நடவடிக்கைகள்தான்' என்று கூறினார்.

ஆயினும் இலங்கை தொடர்பான இந்தியாவின் அரசியல், இராஜதந்திர நடவடிக்கைகளில் ராஜீவ் காந்தி படுகொலைக்குப் பின்னர் மாற்றம் ஏற்பட்டிருந்தது. இந்தியாவின் இத்தகைய நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தி மீண்டும் அந்த நாடு ஈழத் தமிழர் ஆதரவு நிலைப்பாட்டை எடுக்க வைக்க வேண்டும். அதற்கான பேச்சுக்களை கூட்டமைப்பினராகிய நாம் மேற்கொண்டு வருகின்றோம் - என்றார். (ங-சி)

## போவதா?..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

விக்கப்படுகிறது.

இதுகுறித்து கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், ''ஜெனிவாவுக்குத் தமிழ்க் கூட்டமைப்பு செல்வதா, இல்லையா என்பது தொடர்பில் கட்சி ஆராய்ந்து வருகிறது. எனினும், உத்தியோக பூர்வமாக முடிவு எதனையும் எடுக்கவில்லை.

ஜெனிவாவுக்கு கூட்டமைப்பு உறுப்பினர்கள் சென்றாலும் அங்கு சென்று பிரேரணையை எங்களுக்கு ஏற்றவாறு மாற்றியமைக்க முடியாது. ஜெனிவாவில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்துப் பேசுவதை விட அந்தத் தூதுவர்கள் பொறுப்பு வகிக்கும் நாடுகளுடன்தான் நாங்கள் பேச்சு நடத்தி சில காய்நகர்த்தல்களைச் செய்ய வேண்டும். அந்த இராஜதந்திர செயற்பாட்டை நாம் ஏற்கனவே ஆரம்பித்துள்ளோம். அண்மையில் கூட தென்னாபிரிக்கா சென்று நாம் பேச்சு நடத்தி ஆபிரிக்க நாடுகளிடம் எமது பிரச்சினைகளை முன்வைத்துள்ளோம்.

அதேபோல், ஐரோப்பிய, லத்தீன் அமெரிக்க, ஆசிய நாடுகளுக்கு நாம் இராஜதந்திர ரீதியில் விளக்கங்களை அளித்துவருகிறோம். எவ்வாறாயினும், ஜெனிவாவுக்குச் செல்வது தொடர்பில் இப்போது ஆராய்ந்து வருகிறோம்'' - என்றார்.

இதற்கிடையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் இதுபற்றித் தெரிவிக்கையில்-

இதுகுறித்துச் சில தினங்களில் நாம் ஒன்றுகூடி முடிவெடுக்கவுள்ளோம்.

இலங்கை அரசுக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தவுள்ள ஜெனிவா மாநாடு நடைபெறும் நாள்களில் அங்கு பல சர்வதேச நாடுகளின் கூட்ட அமர்வுகள் நடைபெறும். அனேகமாக இந்த அமர்வுகளில் எமது கூட்டமைப்பின் தலைவரும் இன்னும் சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்வதற்கான சாத்தியங்கள் உண்டு.''- என்றார்.(ங-சி)

## ஆறு கிராம..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஆயினும் மேற்படி காணிகளில் விவசாயம், யோக்கட் உற்பத்தி, உல்லாச விடுதி போன்ற நடவடிக்கைகளையே படையினர் மேற்கொண்டுவருகின்றனர்.

அத்துடன் பாதுகாப்புவலயப் பிரதேசத்தை நிரந்தரமாகக் கையகப்படுத்தும் நோக்குடன் நிரந்தரப் பாதுகாப்பு வேலியும் அமைக்கப்பட்டு வருகின்றது. இந்தப் பகுதிக்குள் உள்ளடங்கும் பிரதேசத்திலுள்ள மக்களது வீடுகளும் நிர்மூலமாக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள காங்கேசன்துறையில் 3 பிரிவுகள், தையிட்டியில் 2 பிரிவுகள், குரும்பசிட்டியில் ஓர் கிராமசேவகர் பிரிவு என்று மொத்தம் 6 கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்கள் விடுவிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மீள்குடியமர்வுக்கான அறிவிப்பையும் யாழ்ப்பாணத்துக்கு இரு நாள் பயணமாக நாளை வரவுள்ள ஜனாதிபதியே வெளியிடுவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும் எஞ்சிய 18 கிராமசேவகர் பிரிவுகளின் நிலை தொடர்பில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இந்தப் பகுதி மக்கள் தொடர்பில் ஜனாதிபதி கரிசனை கொள்வாரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

மேலும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் வலி.வடக்கிலுள்ள உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசத்தை மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் பார்வையிட்டுச் சென்றமையும் குறிப்பிடத்தக்கது.

வலி.வடக்கு மீள்குடியமர்வை வலியுறுத்தி எதிர்வரும் 15 ஆம் திகதி தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயில் முன்றிலில் மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம், வலி. வடக்கு மீள்குடியமர்வுக் குழுவால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமை தெரிந்ததே. (ங -5)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஆழ அகலம் ஆராயாவிடின் வருவது மொழிமுறிச்சானே ...!

தனி மனிதன் என்றாலும் சரி, ஒரு நாடு அல்லது அதன் அரசானாலும் சரி, தன்னை எந்தக் கொம்பனாலும் எதுவும் செய்ய முடியாது என்று சண்டித்தனப் போக்கைக் கையில் எடுத்தால் -

நீதி, நியாயம், தர்மம், நல்லாட்சி ஆகிய மக்கள் நலன் நாடிய நியமங்களை மதித்து நடக்க - செயற்பட முனைந்தால் -

அது ஓட்டப்பம் வீட்டைச் சுடும் - எரிக்கும்- நிலைக்கே இட்டுச் செல்லும்.

இத்தனை முத்தாய்ப்பும் எதற்கான விடுகோள் என்று எண்ணாதீர்கள், மனதிற்குள் நினைக்காதீர்கள்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின், அடுத்த மாதக் கூட்டத்தில் இலங்கை அரசு எதிர்நோக்கவுள்ள பெரும் இடர்நிலை மட்டுமல்ல, பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டை இலங்கையில் நடத்தக்கூடாது என்று அதில் அங்கம் வகிக்கும் நாடுகள் எழுப்பியுள்ள ஆட்சேபமும் இலங்கை அரசுக்கு மொழிமுறிச்சான் காய்ச்சலாகி நெருப்பெடுத்தும் விவகாரத்தையே இங்கு குறிப்பிடுகிறோம்.

பொதுநலவாய நாடுகளின் உச்சிமாநாட்டை இலங்கையில் நடத்தக்கூடாது; இலங்கையில் நடத்தப்பட்டால் அதனைப் பகிஷ்கரிக்கவேண்டும் என்று கோரிக்கைகள் விடுக்கப்பட்டுவரும் இவ்வேளையில், பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஸ் ஷர்மாவின் இலங்கை வருகை மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்பில், இலங்கை மீது சர்வதேச சுயாதீன விசாரணை நடத்துவதற்கு ஐ.நா. விசேட பொறிமுறை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று அமெரிக்கா ஜெனிவாவில் வலியுறுத்தவுள்ளது. அது குறித்த தகவல்கள், செய்திகள் வெளிவந்துள்ள நிலையில், பொதுநலவாய நாடுகள் அமைப்பின் உச்சி மாநாடு இலங்கைக்கு மற்றொரு பெரும் நெருக்கடியாக மாற உள்ளது.

நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் உச்சிமாநாட்டுக்கு முன்னோடியாக ஏப்ரல் மாதம் பொதுநலவாய அமைச்சர்கள் மட்ட நடவடிக்கைக்குழு கூடுகிறது. இந்தக்குழுக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் இலங்கை விவகாரம் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பது இலங்கைக்கு முதலாவது பிரச்சினை.

இலங்கை தொடர்பாக அமைச்சர்கள் மட்ட நடவடிக்கைக் குழுவின் விசேட கூட்டத்தைக் கூட்டுமாறு கனடா விடுத்துள்ள கோரிக்கை அடுத்த பிரச்சினை.

எங்களது நாட்டில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல், சிறுபான்மை இன மக்களுக்கு எதிரான அடக்குமுறைகள், பொதுநலவாய கொள்கைப்பிரகடனங்களை மதித்துச் செயற்படாமை என்று பல்வேறு குற்றச்சாட்டுகள் இந்த நாட்டு அரசின்மீது சுமத்தப்பட்டு வருகின்றன.

நீதிச்சேவைக்கும் சட்டவாக்கத்துக்கும் இடையிலான அதிகார மோதலினால் அமெரிக்கத் தீர்மானத்தின் பரிந்துரைகளில் போதிய கவனம் செலுத்த இலங்கை தவறியிருந்தது. தற்பொழுது இதே பிரச்சினைதான் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் உச்சிமாநாட்டை இலங்கையில் நடத்துவதைக் கேள்விக்கிடமாக மாற்றி உள்ளது. அரசமைப்பை மீறி இலங்கை அரசு நீதித்துறையில் தலையிட்டுள்ளது என்று கனடாவும் பெரும்பாலான பொதுநலவாய அமைப்பு நாடுகளும் கருதுகின்றன. இலங்கையில் மாநாட்டை நடத்தக்கூடாது என்பதில் கனடாவே மிகத் தீவிரமாகச் செயற்பட்டுவருகிறது.

பொதுநலவாய அமைப்பின் அமைச்சர்கள் மட்ட நடவடிக்கைக் குழுவின் விசேட கூட்டத்தைக் கூட்டுவதற்கு எந்த ஓர் உறுப்பு நாட்டுக்கும் உரிமை உண்டு. கமலேஸ் ஷர்மாவின் இலங்கை விஜயத்தின் பின்பு இது குறித்துத் தீர்மானிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பொதுநலவாய அமைச்சர்கள் மட்ட நடவடிக்கைக் குழுவில் ஆஸ்திரேலியா, பங்களாதேஷ், கனடா, ஜமைக்கா, மாலைதீவு, சியராலியோன், தன்ஸானியா, ரினிடாட்டுபாக்கோ ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

அவற்றில் பங்களாதேஷ் மட்டுமே தெற்காசிய நாடு. தெற்காசியாவின் மற்றொரு நாடான மாலைதீவு, ஜனநாயக ரீதியில் தெரிவான முறைம்மட் நஷீட் பதவி கவிழ்க்கப்பட்டதை அடுத்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. ஏனையவை கனடாவின் செல்வாக்குக்கு உட்பட்ட கரிபியன் நாடுகளும் ஆபிரிக்க நாடுகளும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவை உறுப்பு நாடுகளின் ஆதரவைப் பெற வலைவீசும் இலங்கைக்கு, பொதுநலவாய அமைச்சர்கள் மட்ட நடவடிக் கைக்குழு நாடுகளின் ஆதரவைத் திரட்ட வேண்டிய இக்கட்டான நிலைமை ஏற்பட்டிருப்பது துரதிர்ஷ்டமே.

ஷிராணி பண்டாரநாயக்க விவகாரத்தால் பொதுநலவாய நாடுகள் கூட்டத்தில் மட்டுமல்ல ஜெனிவாக் கூட்டத்திலும் இலங்கைக்கு நெருக்கடி ஏற்படும் நிலை உருவாகிவருகிறது. மனித உரிமைகள் மீறல் தொடர்பாக இலங்கை குற்றச்சாட்டுகளை எதிர்நோக்கியிருந்த வேளையில் நீதித்துறை - சட்டவாக்கம் விவகாரத்தை அரசு தவிர்த்திருக்கலாம். அல்லது தற்காலிக சமரசம் செய்து பிற்போட்டிருக்கலாம். தற்பொழுது மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டுகளுடன் ஷிராணி பதவி நீக்கம் விவகாரமும் சேர்ந்து இலங்கை அரசை ஆட்டுகிறது.

பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாடு நடைபெறும் நாட்டை மாற்றும்படியோ, இலங்கையின் உறுப்புரிமையை மீள் பரிசீலனை செய்யும்படியோ இதுவரை எந்த நாடும் கோரவில்லை என்று பொதுநலவாய செயலகத்தின் பேச்சாளர் ரிச்சர்ட் உகு தெரிவித்திருக்கிறார்.

ஆனால் கனடா தற்பொழுது எடுத்துள்ள நடவடிக்கைகள், அதற்கான பிரிட்டிஷ் ஆதரவு ஆகியவை மோசமான நெருக்கடி ஒன்றுக்கான அறிகுறிகளே. பொதுநலவாய அமைப்பின் கோட்பாடுகளை மீறும் எந்த ஒரு நாட்டையும் இடைநிறுத்தவோ, நீக்கவோ அமைப்பு விதிகள் இடமளிக்கின்றன.

கடந்த காலங்களில் நைஜீரியா, சிம்பாப்வே, பாகிஸ்தான், பிஜி ஆகியவை பொதுநலவாய அமைப்பிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டன. பிஜி மீதான இடைநிறுத்தம் இன்னும் நடைமுறையில் உண்டு. பொதுநலவாய அமைப்பிலிருந்து சிம்பாப்வே வெளியேறிவிட்டது.

எது எவ்வாறாயினும் தன்மீதான எந்த ஒரு நடவடிக்கையையும் உறுப்பு நாடு மீதான தலையீடாகவே இலங்கை பார்க்கிறது. பொதுநலவாய அமைப்பு அரசியல்மயப்படுத்தப்பட்டு வருவதாகவும் உறுப்பு நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடுவதற்கு பொதுநலவாய அமைப்பை ஒரு கருவியாகப் பயன்படுத்த முயற்சிப்பது அதன் எதிர்காலத்தைச் சிதைத்துவிடும் என்றும் இலங்கை கூறுகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில், இலங்கை விவகாரத்தை மிகக் கவனமாகக் கையாள்வதற்கு மேற்கு நாடுகளும் இந்தியாவும் முடிவு செய்துள்ள நிலையிலும் -

இலங்கை தொடர்பான விவகாரத்தை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைக்கு எடுத்துச் செல்வதற்கு, மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை முடிவு செய்துள்ள நிலையிலும் -

இலங்கை மீது பொருளாதாரத் தடை விதித்தல், இங்கு ஐ.நா. அமைதிப் படையை நிலைநிறுத்துதல், இராணுவ ரீதியான அழுத்தங்கள் போன்ற நிலை உருவாகுமானால் இப்போதுள்ளதை விட நிலைமை மேலும் மோசமாகலாம் என்று எதிர்வுகூறல்கள் முளைவிடுகின்றன.

இவை எல்லாவற்றையும், அவற்றின் ஆழ அகலத்தை ஆராயாமல் உலகம் தனக்குள்ளேயே என்று இலங்கை அரசு கற்பனை செய்ய முனையலாமோ...?

# வங்கி வட்டி விகிதாசாரம் ஜூலையில் குறையும் அறிகுறி

## மத்திய வங்கியின் தகவல்கள் தெரிவிப்பு

கொழும்பு,பெப்.11

இந்த ஆண்டின் ஜூலை மாதமளவில் வங்கி, வட்டி வீதங்கள் நூற்றுக்கு இரண்டு வீதமளவில் குறைவடையக் கூடும் என்று இலங்கை மத்தியவங்கியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வரவு-செலவுத் திட்ட பற்றாக் குறையை நூற்றுக்கு 5.8 வரையில் குறைத்து விடுவதற்கு தீர்மானிக் கப்பட்டுள்ளதை அடுத்து, அரச வர்த்தகச் சந்தையில் இருந்து கடன்களைப் பெறுவதைக் குறைத்துக் கொள்ளவுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

அதன் காரணமாக தற்போது நூற்றுக்கு ஒன்பது என்ற விகிதாசாரத்தில் நிலவும் திறைசேரி உண்டியல் வட்டி விகிதாசாரம் நூற்றுக்கு ஏழு என்றவாறு கீழிறங்கக் கூடும் என்று எதிர்ப்பு கூறப்படுகிறது.

ஆனாலும், அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனங்கள் ஐந்து ஆண்டுகள் என்ற நீண்டகாலத்துக்கு நிலையான வைப்புக்களைப் பொறுப்பேற்றுக் கொள்ளும் போது, அதிகரித்த வட்டியை வழங்குவதற்கு தற்போதுள்ள அனுமதி தொடர்ந்தும் செல்லுபடியாவதற்கு வாய்ப்புள்ளது என்று அரசின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, அரசின் நிதித் தேவைகள் தொடர்பாக தேசிய சேமிப்பு வங்கியின் ஊடாக ஆயிரம் மில்லியன் ரூபா வரையில் கடன் தொகையைப் பெறுவதற்கும் அரசு திட்டமிட்டுள்ளது என்றும் தகவல்கள் கசிந்துள்ளன. எ

(ம-22)

## லஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் மாட்டிய உயர்மட்ட அதிகாரிகள்

கொழும்பு,பெப்.11

லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக் குழு, கடந்த ஐந்து மாத காலத்தில் உயர்மட்டத்து அரசஅதிகாரிகள் 12 பேரை சிக்க வைத்துள்ளது என்று ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் திருமதி லக்சுமி ஜயவிக்கிரம கொழும்பின் ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இவர்களுள் அதிக எண்ணிக் கையானோர் லஞ்சம் பெற்ற குற்றச் சாட்டுகள் சம்பந்தமாகவே கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில், பிரதேச சபைத் தலைவர் ஒருவர், மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் சுங்கத் திணைக்கள மேலதிகாரி, வனத்துறை அதிகாரி உள்ளிட்ட 12 பேரே இவ்வாறு மாட்டிக் கொண்டனர்.

லஞ்ச, ஊழல் ஆணைக்குழு, கடந்த ஐந்து மாத காலத்தில் 53 சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டுள்ளது. அவற்றுள் 24 சுற்றிவளைப்புக்கள் வெற்றியடைந்துள்ளன என்று திருமதி லக்சுமி ஜயவிக்கிரம மேலும் தெரிவித்துள்ளார்.

(ம-22)

## நான்கு மாகாண சபை தேர்தல்கள் இந்த ஆண்டில்

கொழும்பு,பெப்.11

நான்கு மாகாண சபைகளுக்குமான தேர்தல்களை இந்த ஆண்டில் நடத்த அரசு தீர்மானித்துள்ளது.

மே மாதத்தில் மத்திய மற்றும் வடமேல் மாகாண சபைகளின் தேர்தலை நடத்தவும் அதை அடுத்து ஒகஸ்ட் மாதத்தில் மேல் மாகாண சபைக்கான தேர்தலையும் செப்ரெம்பர் மாதத்தில் வடமாகாண சபைத் தேர்தலையும் நடத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

மேல் மாகாண சபைத் தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்பட வேண்டுமானால் அது, 2014 ஆம் ஆண்டின் மே மாதத்திலேயே நடத்தப்பட வேண்டியுள்ளது.

இந்த நிலையில் அரசின் புதிய தீர்மானத்துக்கு அமைய குறிக்கப்பட்ட காலத்துக்கு ஒன்பது மாதங்களுக்கு முன்னரே மேல்மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்படவுள்ளது.

செப்ரெம்பர் மாதத்தில் வடக்கு மாகாண சபை தொடர்பாக நடத்தப்படவுள்ள இந்தத் தேர்தல் 1988 இல் மாகாண சபைகள் முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர் வடக்கு மாகாணம் தொடர்பாக தேர்தல் இடம்பெறும் முதலாவது சந்தர்ப்பம் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-22)

## வதிவிடங்களுக்கு அண்மையாக கடமை புரிய அனுமதியளிக்குக

### கிளிநொச்சி வலயத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட ஆசிரியர்கள் கோரிக்கை

அச்சுவேலி, பெப்.11

கிளிநொச்சி கல்வி வலயத்தில் இருந்து யாழ். கல்வி வலயத்துக்கு விடுவிக்கப்பட்ட ஆசிரியர்கள் தமது வதிவிடங்களுக்கு அண்மையில் உள்ள பாடசாலைகளில் கடமை புரிவதற்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி கல்வி வலயத்தில் குறிப்பிட்ட வருடங்கள் கடமையாற்றிய பின்னர் யாழ். கல்வி வலயத்துக்கு விடுவிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளுக்கு மட்டும் நியமனம் வழங்கப்படும் என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு நிபந்தனை விதித்துள்ளது. வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் விருப்பமான பாடசாலை தொடர்பாக விவரம் தெரிவிக்குமாறு கோரியுள்ளது.

நீண்ட காலம் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றிய பின்னர் யாழ்ப்பாணத்துக்கு விடுவிக்கப்பட்ட தங்களை தமது வதிவிடங்களுக்கு அண்மையில் உள்ள பாடசாலைகளில் கடமை புரிவதற்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். வெளிமாவட்டங்களில் இருந்து யாழ். மாவட்டத்துக்கு விடுவிக்கப்பட்ட ஆசிரியர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் புதிய பாடசாலைகளில் கடமையேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-11)

## தனிச் சிங்களத்தில் கடிதங்கள் கிடைத்தால் மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிடுங்கள்

### மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.11

தனிச் சிங்களத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டால் அது தொடர்பாக தமிழ் அரச உத்தியோகத்தர்கள் மனித உரிமை ஆணைக்குழுவிடம் மொழி உரிமை மீறப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்ய முடியும்.

இவ்வாறு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தெரிவித்துள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள திணைக்களங்களின் தலைமை அலுவலகங்கள் தென்னிலங்கைப் பகுதிகளில் இருப்பதால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடமைபுரியும் அரச உத்தியோகத்தர்களுக்கான பதவி உயர்வு, சம்பள உயர்வு, சுற்றறிக்கைகள் என்பன அதிகம் சிங்கள மொழியில் மட்டுமே அனுப்பி வைக்கப்படுகின்றன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் தெரிந்த அரச உத்தியோகத்தர்கள் அதிகம் கடமையில் இருப்பதால் தமக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதங்களை வாசிக்க முடியாமல் சிங்கள மொழி தெரிந்தவர்களிடம் கடிதங்களைக் காண்பித்து அதன் பின்னரே விவரங்களை அறியக் கூடிய நிலையில் உள்ளனர்.

அரச உத்தியோகத்தர்கள் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளில் தேர்ச்சியுடையவர்களாக இருக்க வேண்டும் என்று அரச கரும மொழிகள் ஆணைக்குழுவால் திணைக்களங்களுக்கு பணிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் மொழிப் பரீட்சார்த்தியத்துக்கு குறிக்கப்பட்ட காலம் தேவைப்படுவதால் அதனை திணைக்களங்கள் நடைமுறைப்படுத்த முடியாத சூழலில் உள்ளன.

எனினும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழர்கள் அதிகளவு வசிப்பதால் சிங்கள மொழி பயன்படுத்தப்படுவதில்லை. எனினும் சிங்கள மொழியில் தேர்ச்சி பெறாத அரச உத்தியோகத்தர் ஒருவருக்கு திணைக்களங்களின் தலைமை அலுவலகங்களில் இருந்து அனுப்பப்படும் கடிதங்கள் தனிச் சிங்கள மொழியில் மட்டும் அனுப்பப்படுவது தமிழ் அரச உத்தியோகத்தர்களின் மொழி உரிமை மீறலாகவே கொள்ளப்படும்.

எனவே, புரியாத ஒரு மொழியில் மட்டும் கடிதங்கள் அனுப்பப்படுவது தொடர்பாக சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு எதிராக அரச உத்தியோகத்தர்கள் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு நேரடியாகச் சென்று முறைப்பாடு செய்யலாம்.

அரச உத்தியோகத்தர்கள் தமக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதங்களின் பிரதியை பொலிஸ் நிலையத்தில் வழங்கி முறைப்பாட்டைப் பதிவு செய்து அந்த முறைப்பாட்டுக்கு தீர்வு கிடைக்காத பட்சத்தில் மனித உரிமை ஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்யலாம்.

எனினும் சில திணைக்களங்கள் மொழி உரிமை மீறியமை தொடர்பான ஆதாரங்களும், முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளதால் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நீதிமன்றில் திணைக்களங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் மேன்முறையீட்டைப் பதிவு செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.- என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)

# சிறுபோக நெற்செய்கையின்போது நீருக்கு யூனியன் குளத்தில் தட்டுப்பாடு வரலாம்

## நீர் சேமிப்புப் பகுதியில் உடைவு ஏற்பட்டதால்

அக்கராயன்,பெப்.11

நீர் சேமித்து வைக்கப்படும் பகுதியில் உடைவு ஏற்பட்டுள்ளதால் யூனியன் குளம் கிராமத்தில் சிறுபோக நெற்செய்கையின்போது நீர்த்தட்டுப்பாடு நிலவும் என விவசாயிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

அக்கராயன்குளத்தின் வலது கரை வாய்க்கால் பகுதியில் உள்ள யூனியன்குளம் கிராமத்தின் முதலாவது நீர் சேமிப்புப் பகுதியில் அண்மையில் பெய்த மழையால் பெருவெள்ளம் ஏற்பட்டு உடைவு ஏற்பட்டுள்ளதன் காரணமாக சிறுபோக நெற்செய்கையின் போது நீர் வழங்கலில் நெருக்கடி ஏற்படும் என இங்குள்ள விவசாயிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

கோணாவில் கிராம அலுவலர் பிரிவில் சுமார் ஆயிரத்து 100 குடும்பங்கள் வசித்து வருகின்றன. அக்கராயன் குளத்தின் கீழான வலதுகரை வாய்க்கால் மூலமாக கோணாவில் பகுதியிலுள்ள ஆயிரத்து 25 ஏக்கர் வயல் நிலத்துக்கு நீர் வழங்கப்பட்டு வருகின்றமை வழக்கமாகும்.

யூனியன்குளம், கோணாவில் ஆகிய இரு இடங்களிலும் நீர் சேமித்து வைக்கக் கூடிய இரு பகுதிகள் உள்ளன. கடந்த வாரம் பெய்த ஒரு நாள் மழையின்போது யூனியன்குளம் கிராமத்திலுள்ள நீரைச் சேமித்து வைக்கும் பகுதியில் நீர் நிறைந்து இங்குள்ள வீதிக்குக் குறுக்காக அமைக்கப்பட்டிருந்த சிமெந்தினாலான கட்டு உடைந்துவயல் வெளியூடாகப் பாய்ந் துள்ளது.

இதனால் 70 ஏக்கர் வரையான அறுவடைக்குத் தயாரான நெற்பயிர்கள் அழிவடைந்துள்ளன. உடைவடைந்த பகுதி யூனியன்குளப் பாலம் என்ற பெயரில் அழைக்கப்பட்டு வருகிறது.

இதனைப் புனரமைக்கவென 20 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்ற போதிலும் கட்டுமானப் பணிகள் இதுவரை இடம்பெறாத நிலையிலேயே உள்ளமை இங்குள்ள மக்களிடையே விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் இந்தப் பாலம் புனரமைக்கப்படாமையால் கோணாவில் கிராம அலுவலர் பிரிவில் வாழும் குடும்பங்கள் அக்கராயன் மருத்துவமனைக்குச் சென்று வருவதில் கடந்த மூன்று ஆண்டுகளாக இடர்களை எதிர்கொண்டு வருகின்றன. (க-18)

### வவுனியா நகரில் விற்பனைக்கு இருந்த

# குடிதண்ணீர் போத்தல்கள் பரிசோதனை நடவடிக்கைக்கு!

நெளுக்குளம்,பெப்.11

வவுனியா நகரக் கடையொன்றில் சுகாதாரக் குறைபாடுகளுடன் காணப்பட்ட குடிதண்ணீர்ப் போத்தல்கள் சுகாதாரப் பரிசோதகர்களால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

வவுனியா வெளிவட்ட வீதியில் அமைந்துள்ள கடை ஒன்றில் வைக்கப்பட்டிருந்த குடிதண்ணீர்ப் போத்தல்களே மேற்கண்டவாறு சுகாதாரப் பரிசோதகர்களால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் வெளிவட்ட வீதியில் குறிப்பிட்ட கடை ஒன்றில் சுகாதாரப் பிரிவினரால் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது மக்களின் பாவனைக்கு உதவாத நிலையில் தூசு படிந்து காணப்பட்ட தண்ணீர்ப் போத்தல்களை பரிசோதனைக்கென அவர்கள் எடுத்துச் சென்றனர்.

வவுனியாவில் அமைந்துள்ள கிணறுகளில் உள்ள தண்ணீரில் அதிகளவு கல்சியம் காணப்படுவதால் அந்தப் பகுதி மக்கள் போத்தல்களில் அடைக்கப்பட்ட தண்ணீரையே பயன்படுத்தி வருகின்றனர்.

இந்தத் தண்ணீர்ப் போத்தல்களில் சுகாதார குறைபாடுகள் இருப்பதாக பொது மக்கள் சுகாதார பிரிவினருக்கு முறைப்பாடு தெரிவித்து வரும் நிலையில் இந்தச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (க-402)

# இல்ல மெய்வன்மை போட்டிகள்

கிளிநொச்சி,பெப்.11

கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் சி.திரவியம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக கரைச்சி கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.அமிர்தலிங்கமும், சிறப்பு விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவரும், கரைச்சி பிரதேச செயலக கணக்காளருமான பத்மநாதன் லுரேந்திரனும் கலந்து கொள்ளவுள்ளனர். (க-405)

# ஏற்று நீர்ப்பாசனத்துக்கு விவசாயிகளை தயார்படுத்தல்

## ஸ்கந்தபுரத்தில் வியாழன் நிகழ்வு

அக்கராயன்,பெப்.11

கிளிநொச்சி அக்கராயன் குளத்தின் கீழான ஸ்கந்தபுரம் ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தின் மூலமாக விவசாயிகளைத் தயார்படுத்தும் நிகழ்வு எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை காலை இடம்பெறவுள்ளது.

இதனை கிளிநொச்சி நீர்ப்பாசனப் பொறியியலாளர் சி.விகிர்தன் தெரிவித்துள்ளார்.

ஸ்கந்தபுரத்தில் உள்ள ஏற்று நீர்ப்பாசனத் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ள இடத்தில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டு தொடக்கம் போர் சூழல் காரணமாக ஸ்கந்தபுரம் ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் செயலிழந்து காணப்படுகின்றது. பின்னர் மீள்குடியமர்வு இடம்பெற்ற 2010 ஆம் ஆண்டில் இடம்பெற்ற அக்கராயன்குளத்தின் புனரமைப்பின் ஓர் அங்கமாக ஸ்கந்தபுரம் ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தின் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று தற்போது பூர்த்தியடைந்துள்ளன.

ஸ்கந்தபுரம் ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தின் மூலமாக சுமார் 140 ஏக்கர் நிலப்பரப்புக்கு நீர் வழங்க முடியும்.

ஸ்கந்தபுரத்தைப் போன்று அக்கராயன் மத்திய பகுதி, இம்மாஸ்நகர், கெங்காதரன் குடியிருப்பு ஆகிய பகுதிகளுக்கும் ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தை விஸ்தரிக்குமாறு இந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-18)



கிளிநொச்சி மாவட்டம் புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் இடம்பெற்ற கணினிக் கற்கை நெறியின் ஆரம்ப நிகழ்வில் பாடசாலை அதிபர் த.கண்ணபிரான் அருகில் அமர்ந்திருக்க ஆசிரியர் க.சேதுபதி விளக்கம் அளிக்கின்றார். (க-18)

# வணிகப் பிரிவில் சிறந்த பெறுபேறு

கிளிநொச்சி,பெப்.11

கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரியில் கல்வி கற்ற வணிகத்துறை மாணவர்கள் அனைவரும் அண்மையில் வெளியான உயர்தர பரீட்சைப் பெறுபேறுகளின் பிரகாரம் சித்தி பெற்று நூறு வீத சித்தியைப் பெற்றுள்ளனர்.

இந்தக் கல்லூரியில் முதற் தடவையாக ஆறு மாணவர்களும், இரண்டாம் தடவையாக ஒரு மாணவனுமாக ஏழு மாணவர்கள், வணிகப் பிரிவில் பரீட்சைக்குத் தோற்றினர். இவர்கள் அனைவருமே சித்தி பெற்றுள்ளனர். இவர்களில் சிறந்த பெறுபேறுகளை த.லக்சன் ஏ2பி, அ.பிறின்சியா பி2சி பெற்றுக் கொண்டனர். (க-405)

# வவுனியா கிராமங்களில் சிறுவர் தெருவில் விளையாடும் அவலம்

## மைதானங்கள் இல்லாமையே காரணம்

நெளுக்குளம்,பெப்.11

வவுனியாக் கிராமங்களைச் சேர்ந்த சிறுவர்கள் தெருவில் விளையாடும் நிலை உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் உள்ள கிராமங்களில் சீரான விளையாட்டு மைதானங்கள் இல்லாததால் தெருவில் விளையாடும் நிலைக்குத் தமது பிள்ளைகள் தள்ளப்பட்டுள்ளனர் என்று பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.

பாடசாலைக்குச் சென்றுவிட்டு வீட்டுக்குத் திரும்பி வரும் சிறுவர்கள் மைதான வசதிகள் இல்லாததால் தெருவிலும், தெருவோரங்களிலும் விளையாடி வருகின்றனர்.

இவ்வாறு விளையாடுவதால் வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளதுடன் வாகனச் சாரதிகளும் சிறுவர்களும் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிய வருகின்றது.

சில கிராமங்களில் மைதானங்கள் உள்ளபோதிலும் அவை பல்வேறு குறைபாடுகளுடன் காணப்படுவதால் அவை பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றன.

மேலும் நகரத்திலுள்ள பொது மைதானத்தைப் பயன்படுத்துவதற்கு கிராமத்தைச் சேர்ந்தவர்கள் நீண்ட தூரம் செல்ல வேண்டியிருப்பதாகவும் ஆனால் அதனை உபயோகிப்பதிலும் தடைகள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆகவே கிராமத்தில் உள்ள சிறுவர்களின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தும் பொருட்டும் அவர்களின் ஆரோக்கியத்தைப் பேணும் பொருட்டும் கிராமங்களில் விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து பெற்றோர்கள் வலியுறுத்தி வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-402)

# வவுனியா நகர கடைகளில் முட்டையின் விலை உச்சம்

வவுனியா,பெப்.11

வவுனியாவில் கோழி முட்டையின் விலை திடீரென அதிகரித்துள்ளதால் பாவனையாளர்கள் முட்டைகளைக் கொள்வனவு செய்வதில் தயக்கம் காட்ட நேர்ந்துள்ளது. வவுனியாச் சந்தை மற்றும் வர்த்தக நிலையங்களில் கோழிப் பண்ணைகளிலிருந்து பெறப்படும் முட்டைகள் 18 ரூபா தொடக்கம் 20 ரூபா வரையும் விற்பனை செய்யப்படுகின்றன.

அண்மையில் நோயினால் ஏராளமான கோழிகள் இறந்ததை அடுத்து முட்டைக்குத் தட்டுப்பாடும் விலை அதிகரிப்பும் ஏற்பட்டுள்ளன.

இதேவேளை, வெளி மாவட்டங்களில் இருந்து கொண்டு வரப்படும் முட்டைகளின் விலையிலும் ஏற்றம் காணப்படுகின்றது.

மேலும் முட்டைக்காக வளர்க்கப்படும் கோழிகள் சமீப காலமாக வெளிமாவட்டங்களில் உள்ளவர்களுக்கு இறைச்சிக்காக விற்பனை செய்யப்பட்டதாலும் முட்டையின் விலை அதிகரித்துள்ளதாக இங்குள்ள வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். (க-402)

# அக்கராயன் பகுதியில் கரும்புச் செய்கை

## ஊக்குவிப்பு நிதி வழங்க ஏற்பாடு

அக்கராயன்,பெப்.11

கிளிநொச்சி மாவட்டம் அக்கராயன் பகுதியில் கரும்புச் செய்கையை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

கரும்பு ஆராய்ச்சிச் சபையினர் இதனை முன்னெடுத்து வருகின்றனர். இங்குள்ள அக்கராயன், ஸ்கந்தபுரம், கண்ணகைபுரம், ஆனைவிழுந்தான்குளம் ஆகிய பகுதிகளில் கரும்புச் செய்கையை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கரும்பு செய்கையாளர்களுக்கான ஊக்குவிப்பு நிதி விரைவில் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

முதற்கட்டமாக 27 ஏக்கர் நிலப்பரப்பில் கரும்புச் செய்கை ஆரம்பிக்கப்படும் எனவும் எதிர்காலத்தில் 100 ஏக்கருக்கு இது விஸ்தரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஸ்கந்தபுரம் பகுதியில் சர்க்கரை ஆலை ஒன்று நிறுவப்படவுள்ளதாகவும் அறியக்கூடியதாக உள்ளது.

ஸ்கந்தபுரத்தில் 1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் இயங்கிய சர்க்கரை ஆலை போர் காரணமாக செயலிழந்து போய் விட்டது குறிப்பிடத்தக்கது. (க-18)

# சகல பயிர்ச் செய்கையாளர்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

## கிளிநொச்சி அரச அதிபர் ஆலோசனை

கிளிநொச்சி,பெப்.11

விவசாய அமைப்புகள் சகல பயிர்ச் செய்கையாளர்களையும் ஒன்றிணைத்துச் செயற்பட வேண்டும். இவ்வாறு ஆலோசனை வழங்கியுள்ளார் கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன்.

கிளிநொச்சி அரச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற விவசாயக் குழுக் கூட்டத்தில் தலைமையுரை ஆற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நெற் செய்கையை மட்டுமே இலக்காகக் கொண்டு செயற்படாமல் ஏனைய மரக்கறிப் பயிர்கள், மேட்டுப் பயிர்கள், பழமரச் செய்கைகள் ஆகியவற்றையும் ஒன்றிணைத்து பலம் வாய்ந்த விவசாய அமைப்புகளை உருவாக்குதல் வேண்டும்.

நெற் செய்கைக் காலங்களில் மட்டுமே கமக்கார அமைப்புகள் செயற்படுகின்றன. அவை எல்லாக் காலங்களிலும் செயற்படக்கூடியதாக இருத்தல் வேண்டும். மேலும் பிரதேச மட்டங்களில் கமக்கார அமைப்புகள் செயற்படும்போது தான் மாவட்ட மட்டத்திலும் அவை பலமுள்ளவையாக விளங்க முடியும்.

விவசாயிகள் சார்பில் உருவாக்கப்பட்ட விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம், விவசாயத் திணைக்களம் என்பன விவசாயிகளுடன் முறையான தொடர்புகளைப் பேண வேண்டும்.

நெல்கொள்வனவின் போது கூட கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட நிதி, வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருவதால் முழுமையாக நெல்கொள்வனவில் ஈடுபட முடியவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பல கமக்கார அமைப்புகள் பல ஆண்டுகளாக புனரமைக்கப்படாமல் உள்ளன என்றும் தெரிய வருகின்றது. (க-18)



சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு விவேகானந்தரின் திருவுருவப் படம் தாங்கிய அலங்கார ஊர்தி பவனி யாழ். நகரில் இடம்பெற்றது. (ம-17)

# ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை

## கடந்த வருட புள்ளி விவரம் தகவல்

தென்மராட்சி, பெப்.11

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடந்த வருடம் ஒரு லட்சத்து 50 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று புள்ளி விவரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் ஒரு லட்சத்து 31 ஆயிரத்து 293 பேரும் விடுதிகளில் ஒன்பதாயிரத்து 827 பேரும் வைத்தியசாலையில் நடைபெறும் பொது மருத்துவம், நீரிழிவு, கண், தோல், புற்றுநோய், பல், காசநோய், சுகவாழ்வு, குழந்தைகள் போன்ற நோய்களுக்கான கிளினிக்குகளில் சிகிச்சை பெற்றோருமான மொத்தம் ஒரு லட்சத்து 50 ஆயிரத்தும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மிருசுவில், வரணி, பளை, மருதங்கேணி, பூநகரி போன்ற பிரதேச வைத்தியசாலையில் இருந்து அம்புலன்ஸ் வாகனங்களில் நோயாளர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்படுவது குறிப்பிடத்தக்கது. (ம-9)

# டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தில் குடாநாடு முழுவதும் சிரமதானம்

## நுளம்பு பெருகும் சூழல் இருந்தால் சட்டநடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப்.11

டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு குடாநாடு முழுவதும் சிரமதானப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. நுளம்பு பெருகும் சூழலை வைத்திருந்தவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அண்மையில் பெய்த மழையை அடுத்து நுளம்பு பெருகும் சூழல் அதிகரித்துள்ளதால் டெங்கு நோயால் பாதிப்படைவோரின் எண்ணிக்கையும் நாளாந்தம் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் கடந்த 6ஆம் திகதி தொடக்கம் நாளை செவ்வாய்க்கிழமைவரை நுளம்புக் கட்டுப்பாட்டு வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

சுகாதார வைத்திய அதிகாரியின் ஒருங்கிணைப்பில் பிரதேச ரீதியாக முன்னெடுக்கப்பட்டுவரும் இந்தச் சிரமதானப் பணிகளில் கிராம மட்ட அமைப்புக்கள் உட்பட பொதுமக்களும் இணைந்துள்ளனர்.

**நாளை செவ்வாய்க்கிழமை வரை இடம்பெறவுள்ள நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் பொதுமக்கள் இணைந்து டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்துவதற்கான ஒத்துழைப்பு வழங்குங்கள்.**

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் மேற்பார்வையில் குடாநாட்டில் 7 வலயங்களில் நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

பொது நிறுவனங்கள், வீதிகள், பாடசாலைகள், வழிபாட்டுத் தலங்கள், வைத்தியசாலைகள் உட்பட வீடுகள் மற்றும் கைவிடப்பட்ட காணிகளிலும் சிரமதானப் பணிகள் இடம்பெறக் கூடியதாக ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

விழிப்புணர்வுக் கருத்துரைகளும் வழங்கப்படுவதுடன், சூழலில் நுளம்பு பெருகாமல் வைத்திருக்கக் கூடியதாக அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

இதனைவிட டெங்கு பரவக் கூடியதாக சூழலை வைத்திருந்த வீட்டு உரிமையாளர்கள் மற்றும் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராகப் பொலிஸாரின் உதவியுடன் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தண்டப் பணமும் அறவிடப்பட்டு வருகிறது.

கைவிடப்பட்ட காணிகள் மற்றும் சிறுகைத்தொழில்களை மேற்கொள்ளும் தொழிற்சாலைகளிலேயே நுளம்பு பெருகும் சூழல் இனங்காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தந்த பொதுச் சுகாதாரப் பிரிவுகளில் பொதுமக்களுடன் இணைந்து பொது இடங்களில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நாளை செவ்வாய்க்கிழமை வரை இடம்பெறவுள்ள இந்த நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் பொதுமக்கள் இணைந்து டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்துவதற்கான ஒத்துழைப்பு வழங்குமாறும் சுகாதார சேவைகள் பணிமனையால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-14-17)

# தென்மராட்சி வலய பாடசாலைகளின் சைவ சமய பாடக் கண்காட்சி



தென்மராட்சி,பெப்.11

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் சைவ சமய பாடம் கற்கும் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான மாணவர்களுக்கான சைவ சமய பாட கண்காட்சி நேற்று முன்தினம் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

வலய சைவ சமய பாட ஆசிரிய ஆலோசகர் செல்வி இ.இராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தமும் சிறப்பு விருந்தினராக மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி அதிபர் வே.விநாயகமூர்த்தியும் கலந்து கொண்டனர்.

கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த மாணவர்களின் ஆக்கப் பொருள்கள் சைவ சமயப் பிரமுகர்கள் கொண்ட குழுவால் மதிப்பீடு செய்யப்பட்டு சிறந்த ஆக்கங்கள் மாவட்ட நிலைப் போட்டிக்கு கொண்டு செல்லப்படுமென தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# செம்மணி பகுதி வயல்களில் நெல் அறுவடை மும்முரம்



கொழும்புத்துறை, பெப்.11

அரியாலை, செம்மணி, நெடுங்குளம் பகுதி வயல்களில் இப்போது நெல் அறுவடை மும்முரமாக நடைபெற்று வருகிறது.

நெற்கதிர்கள் முற்றி அறுவடை செய்யும் நிலையில் இருந்தபோது அண்மையில் திடீரெனப் பெய்த கனமழையால் வயல்களில் வெள்ளம் தேங்கி நின்று அறுவடை பாதிக்கப்பட்டிருந்தது. பல வயல்களின் நெற்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கியிருந்தன.

தற்போது சீரான காலநிலை ஏற்பட்டுள்ள நிலையில் மீண்டுமொரு மழையால் நெற்கதிர்கள் பாதிக்கப்பட்டுவிடலாம் என்ற நோக்கில் தற்போது வெள்ளத்தின் மத்தியிலும் விவசாயிகள் அறுவடையில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தொழிலாளர்களைக் கொண்டும் இயந்திரத்தைக் கொண்டும் அறுவடை துரிதமாக நடைபெற்று வருகின்றது. வயல்களில் வெள்ளம் நிற்பதால் உழவு இயந்திரத்தின் மூலம் சூடு அடிக்கும் விவசாயிகள் தாங்கள் பல சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

கிழக்கு அரியாலை, பூம்புகார், கட்டடி, காவலடி, கொட்டுக் கிணற்றடி, செம்மணி போன்ற பகுதிகளில் சீரற்ற காலநிலையால் கடந்த பெரும் போக நெற்செய்கை பாதிக்கப்பட்டமையால் சுமாரான விளைச்சலே கிடைக்கும் என்றும் விவசாயிகள் கூறினர். (ம-135)

### நெற்செய்கையில் பாதிக்கப்பட்டோர்

# மாற்றுப் பயிர்ச் செய்கைக்கு உதவி வழங்கக் கோரிக்கை

அச்சுவேலி, பெப்.11

நெற்பயிர்ச் செய்கையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மாற்றுப் பயிர்ச் செய்கைக்கு ஊக்குவிப்பு உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்று விவசாயிகள் அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இந்த வருடம் யாழ்.மாவட்டத்தில் நெற்பயிர்ச் செய்கை மழை வெள்ளம், கடும் வறட்சி, நோய்த்தாக்கம் போன்ற பல்வேறு காரணிகளால் பாதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாவட்ட விவசாயத் திணைக்களம் மேற்கொண்ட மதிப்பீடுகளிலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இயற்கை இடர் மற்றும் போர் நிலைமைகளால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நெல் அறுவடை செய்த பின்னர் சிறுபோகத்தில் மாற்றுப் பயிர்ச் செய்கையாக உழுந்து, பயறு, நிலக்கடலை, எள் போன்ற தானிய வகைகளை செய்கை மேற்கொள்ள

**கடந்த காலத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவிகள் கிடைத்தன**

ஊக்குவிப்புக்கள், உதவிகள் வழங்கப்பட்டு வந்தன.

போர் முடிவடைந்த பின்னர் கடந்த வருடம் இத்தகைய ஊக்குவிப்புக்கள், உதவிகள் எவையும் சிறுபோக மாற்றுப் பயிர்ச் செய்கைக்கு வழங்கப்படவில்லை. ஆனால் இந்த வருடம் நெற் பயிர்ச் செய்கை இயற்கை இடர்களால் கணிசமான அளவு பாதிக்கப்பட்டிருப்பதால் நெல் அறுவடையின் பின்னர் மேற்கொள்ளப்படும் சிறுபோக மாற்றுப் பயிர்ச் செய்கைக்கு ஊக்குவிப்பு உதவிகள் வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-11)

# குடாநாட்டு விவசாயிகள் மரக்கறி செய்கையில் ஆர்வம்

யாழ்ப்பாணம், பெப்.11

குடாநாட்டில் இந்த முறை விவசாயிகள் மரக்கறிச் செய்கையில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். மரக்கறி விலைகளின் அதிகரிப்புக் காரணமாகவே விவசாயிகளுக்கு இந்த ஆர்வம் ஏற்பட்டுள்ளது.

மரக்கறி வகைகள் ஒரு கிலோ நூறு ரூபாவுக்கு அதிகமாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதனால் நுகர்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தென்பகுதியில் இருந்து மரக்கறிகள் குறிப்பாகத் தம்புள்ள மரக்கறிகள் யாழ். மத்திய சந்தை, சுன்னாகம், மருதனார் மடம், திருநெல்வேலிச் சந்தைகளுக்குக் கொண்டு வரப்படுவதால் யாழ்.விவசாயிகள் மரக்கறிச் செய்கைக்கு முன்னுரிமை கொடுத்து வருகின்றனர்.

இதே வேளை, கடலுணவுகளின் விலைகளும் குடாநாட்டுச் சந்தையில் அதிகரித்துக் காணப்படுகின்றன. கடலுணவுகள் கிலோ 400 ரூபாவுக்கும் அதிகமாக விற்பனை செய்யப்பட்டு வருவதால் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர். கடலுணவுகள் வெளிமாவட்டங்களுக்கு அனுப்பப்படுவதால் அவற்றின் விலையில் உயர்வு ஏற்படக் காரணம் என்று சுட்டிக் காட்டப்பட்டது. (ம-ரி)

# சிறு கைத்தொழிலாளருக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு

சிறுகைத்தொழிலை மேற்கொள்பவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா வீதம் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. வலி.மேற்கு, சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சிறுகைத் தொழில் மேற்கொள்பவர்கள் இந்தக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளலாம்.

தத்தமது பிரிவு கிராம அலுவலர்களிடம் இதுசம்பந்தமான பதிவுகளை மேற்கொண்டு, இதற்காக விண்ணப்பிக்கலாம் என்று பிரதேச செயலர் ஆ.சோதிநாதன் தெரிவித்துள்ளார். வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-29)

# தமிழகத்திலிருந்து வெளியேறியிருந்தால் பெங்களூரில் தான் குடியேறியிருப்பேன்

## நடிகர் கமல் பேட்டி




பெங்களூர், பெப்.11

'விஸ்வரூபம்' திரைப்பட பிரச்சினையால் நான் தமிழகத்தை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பின் பெங்களூரில் குடியேற வந்திருப் பேன் என்று நடிகர் கமல் ஹாசன் தெரிவித்துள்ளார்.

கர்நாடகாவில் விஸ்வரூபம் 45 தியேட்டர்களில் வெற்றிகரமாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. திரைப்படத்தை விளம் பரப்படுத்த பெங்களூர் ரேணுகாம்பாதியேட்டருக்கு கமல்ஹாசன் நேற்றுமுன்தினம் சென்றிருந்தார். ரசிகர்களுடன் சேர்ந்து படம் பார்த்தார். பின்னர் செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டியில்-

கர்நாடகாவில் விஸ்வரூபம் படம் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருப் பது மகிழ்ச்சி அளிக்கிறது. ஒத்துழைப்பு கொடுத்த அரசு, பொலிஸாருக்கு என் நன்றியைத் தெரிவித்து கொள்கிறேன். கர்நாடகத் துக்கும் எனக்கும் நீண்ட காலத் தொடர்பு உள்ளது. பிரபல கன்னட நடிகர் அம்பரீஷ் எனக்கு நல்ல நண்பர். நான் மத சார்பற் றவன். எனக்கு அரசியல் சாயம் பூச வேண்டாம். எனக்கு அரசியல் தெரியாது. தமிழகத்தில் தடை விதிக்கப்பட்டதால் எனக்கு 60 கோடி வரை நஷ்டம் ஏற்பட்டது உண்மைதான். ஆனால், அதனை தமிழக மக்களும், ரசிகர்களும் படம் பார்ப்பதன் மூலம் எனக்குக் கொடுத்து விடுவார்கள்-என்றார். (வ)

# இன்னும் ஓரிரு தினங்களில் கூடங்குளத்தில் மின் உற்பத்தி



கூடங்குளம், பெப்.11

கூடங்குளம் அணுமின் நிலையத்தின் முதலாவது அணு உலை இன்னும் ஓரிரு தினங்களில் செயற்படத் தொடங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அணு சக்தித் துறையின் முதன்மை ஆலோசகர் ரவி பூஷன் குரோவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பல்வேறு கட்டங்களாக நடத்தப்பட்ட தொடர் சோதனைகள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதை அடுத்து, முதலாவது அணு உலை முழு வீச்சில் இயங்குவதற்கான பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

அணு உலையின் பாதுகாப்பு முழுமையாக உறுதிப்படுததப்பட்டுள்ளது. அதில் எந்தவித சமரசத்துக்கும் இடம்கொடுக்கப்படவில்லை - என்றார்.

கூடங்குளம் அணுமின் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள 2 அணு உலைகளும் தலா ஆயிரம் மெகாவாற் மின் உற்பத்தித் திறன் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

### காவிரியிலிருந்து தமிழகத்துக்குத் தண்ணீர்:

# கர்நாடகாவில் ஆர்ப்பாட்டம்

## அணையைச் சுற்றி 144 தடை உத்தரவு



பெங்களூர், பெப்.11

காவிரியிலிருந்து தமிழகத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டதைக் கண்டித்து, கர்நாடகாவில் நேற்று முன்தினம் போராட்டங் கள் நடைபெற்றன. அதன் காரணமாக, கிருஷ்ணசாகர் அணையைச் சுற்றி தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டதை கண்டித்து, விவசாய அமைப்புக்கள் மட்டுமின்றி முக்கிய அரசியல் கட்சிகளும் போராட்டங்களில் ஈடுபட் டனர்.

தமிழகத்துக்கு தண்ணீர் திறக்க, மாண்டியா விவசாயிகளும் எதிர்ப்புத் தெரிவித்தனர். 'ஒரு சொட்டு தண்ணீர் கூட விடக்கூடாது. கே.ஆர். எஸ்., அணையை விவசாயிகளிடம் ஒப்படைக்க வேண்டும். அரசியல்வாதிகள் தலையிடக்கூடாது' என்று மாண்டியா மாவட்ட, காவிரி நதி நீர் பாதுகாப்புக் குழு தலைவர் மாதே கவுடா வலியுறுத்தினார். கர்நாடகா சட்டசபையிலும், காங்கிரஸ், தேவகவுடாவின் மதசார்பற்ற ஜனதாத் தளம், சட்டசபை உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

உச்ச நீதிமன்றத்தில் மறுசீராய்வு மனு தாக்கல் செய்ய சட்டசபை, மேலவை தலைவர்கள் கூட்டத்தில், முடிவு செய்யப்பட்டது. பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து முறையிடவும் தீர்மானிக்கப்பட்டது.

இதனால், மைசூர் கே. ஆர். எஸ்., அணையை சுற்றிலும், 3 கி.மீ., சுற்றளவுக்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்தநிலையில், நேற்று முன்தினம் காலையில் ஹூப்ளியில் பேட்டியளித்த முதல்வர் ஜெகதீஷ் ஷெட்டர், ''கர்நாடகா அணைகளில் தண்ணீர் இல்லாத நிலையிலும், குடிதண்ணீருக்கே பற்றாக்குறை இருப்பினும், உச்ச நீதிமன்ற உத்தரவை மதித்து, தமிழகத்துக்கு நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியிலிருந்து தினமும், 3,860 கன அடி நீர் வீதம், எட்டு நாள்களுக்கு தண்ணீர் திறந்து விடப்படும்'' என்றார்.

அதையடுத்து, கே.ஆர். எஸ்., அணையின் மொத்த முள்ள, 16 மதகுகளில், இரண்டு மதகுகள் மூலம் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. முதலில், ஆயிரத்து 200 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டு, பின், படிப்படியாக அளவு அதிகரிக்கப்பட்டது.

தகவல் அறிந்த, மாண்டியா மாவட்ட விவசாயிகள், பெங்களூர் - மைசூர் வீதியின் குறுக்கே ரயர்களை கொளுத்தி, போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தினர். கே.ஆர்.எஸ்., அணை முன், முதல்வர்கள் ஷெட்டர், ஜெயலலிதா, கர்நாடக நீர் வளத்துறை அமைச்சர் பசவராஜ் பொம்மை ஆகியோரின் கொடும்பாவிகளை எரித்து, 'உடனடியாக தண் ணீரை நிறுத்த வேண்டும்; இல்லையென்றால், போராட் டம் வெடிக்கும்' என்று கோஷமிட்டனர்.

வீதி மறியலில் ஈடுபட்ட விவசாயிகளை பொலிஸார் கைது செய்தனர். கே.ஆர். எஸ்., அணையை முற்றுகையிட முயன்ற விவசாயிகளை, 3 கி.மீ., முன்னதாக தடுத்து நிறுத்தி, திருப்பி அனுப்பப்பட்டனர். (வ)

### கச்சதீவு யாத்திரைக்கு

# தமிழக பக்தர் 5,000 ரூபாவே கொண்டு செல்ல அனுமதி

கச்சதீவு அந்தோனியார் ஆலய விழாவுக்குச் செல் லும், தமிழக பக்தர்கள், 5 ஆயிரம் ரூபா மட்டும் கொண்டு செல்லவே, அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கச்சதீவு அந்தோனியார் ஆலய விழா எதிர்வரும் 23, 24 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளது. இராமநாதபுரம், சிவகங்கை தவிர ஏனைய மாவட்ட பக்தர்கள், விழாவில் பங்கேற்க, பொலிஸாரிடம் திருவிழாவுக்குச் செல்வதற்காக அனுமதிச் சான்று பெற வேண்டும் என்று மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. அதனால், வெளி மாவட்ட பக்தர்கள் பங்கேற்பதில், சிக்கல் எழுந்துள்ளதால், தற்போது குறித்த புதிய விதிமுறை தளர்த்தப்பட் டுள்ளது.

இதுகுறித்து இராமேஸ்வரம் பாதிரியார் சகாயராஜ் கூறியதாவது:

வெளி மாவட்ட பக்தர்கள், பொலிஸாரிடம் அனுமதிச் சான்றிதழ் வாங்க வேண்டியதில்லை. அரசு வழங்கிய அடையாள அட்டை, நிவாரண அட்டை நகலுடன் விண்ணப்பித் திருக்க வேண்டும்.

விழாவில் பொருள்கள் வாங்க, பக்தர் ஒருவர், 5,000 ரூபாய் மட்டும் கொண்டு செல்ல, மாவட்ட ஆட்சியாளர் நந்தகுமார் அனுமதித்துள்ளார். பக்தர்களை ஏற்றிச் செல்லும் படகுகளுக்கு, டீசல் உட்பட குறிப்பிட்ட தொகை வழங்கப்படும். இந்த வருடத்தில், 4 ஆயிரம் பக்தர்கள் பங்கேற்க உள்ளனர்-என்றார். (வ)

# இந்திய நகரங்கள் மீது தாக்குதல் நடத்தப்படும்

## லக்ஷர் இ தொய்பா அமைப்பு மிரட்டல்



மும்பை, பெப்.11

தீவிரவாதி அப்சல் குருவை தூக்கிலிட்டதற்கு பழிவாங்குவதற்கு இந்தியா முழுவதும் தாக்குதல் நடத்தப் போவதாக லக்ஷர் இ தொய்பா அமைப்பு மிரட்டல் விடுத்துள்ளது.

நாடாளுமன்றத் தாக்குதலில் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஜெய்ஷ் -இ -முகமது தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த அப்சல் குரு நேற்று முன்தினம் காலை டில்லியில் உள்ள திகார் சிறையில் தூக்கிலிடப் பட்டார். அவனது உடல் சிறை வளாகத்திலேயே புதைக்கப்பட்டது. அவன் உடலை புதைத்த பின்பே அவன் தூக்கிலிடப்பட்டது அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இந்தநிலையில் அப்சல் குருவை தூக்கிலிட்டதற்கு பழி வாங்க இந்தியா முழுவதும் தாக்குதல் நடத்தப் போவதாக பாகிஸ்தானைச் சேர்ந்த லக்ஷர் இ தொய்பா தீவிரவாத அமைப்பு மிரட்டல் விடுத்துள்ளது. லக்ஷர் இ தொய்பா செய்தித் தொடர்பாளர் அப்துல்லா பத்திரிகை அலுவலகம் ஒன்றை தொடர்பு கொண்டு கூறுகையில்-

அப்சல் குரு தூக்கிலிடப்பட்டதை நாம் சாதாரணமாக எடுத்துக்கொள்ள மாட்டோம். பழிக்குப் பழி வாங்குவோம். இந்தியாவிலுள்ள முக்கிய நகரங்களைத் தகர்ப்போம். இந்தியா தன் செயலுக்கான விலையை கொடுத்தே தீர வேண்டும் என்றார். இதையடுத்து அனைத்து மாநில பொலிஸாரையும் உஷாராக இருக்கு மாறு உளவுத்துறை வலியுறுத்தியுள்ளது. (வ)

### தூக்குத்தண்டனை நிறைவேற்றப்பட்டதை அடுத்து

# அப்சல் குருவின் சொந்த ஊரான காஷ்மீர் சோபோரில் வன்முறைகள்

## ஊரடங்கை மீறி மக்கள் பெரும் ஆர்ப்பாட்டம்

டில்லி, பெப்.11

டில்லி நாடாளுமன்றத் தாக்குதல் குற்றவாளி அப்சல் குருவின் கருணை மனு நிராகரிக்கப்பட்டதையடுத்து நேற்று முன்தினம் திகார் சிறையில் தூக்கிலிடப்பட்டார்.

அதையடுத்து அவரது சொந்த மாநிலமான ஜம்மு-காஷ்மீரின் பல இடங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. கடைகள் அடைக்கப்பட்டன. கேபிள் தொலைக்காட்சி., எஸ்.எம்.எஸ்., மற்றும் சமூக வலைத்தளங்கள் காஷ்மீர் பள்ளத்தாக்குப் பகுதியில் தடை செய்யப்பட்டிருந்தன.

இந்தநிலையில், அப்சல் குரு தூக்கிலிடப்பட்டது பற்றி தகவல் அறிந்ததும், அவரது சொந்த ஊரான சோபோர் நகர் அருகே உள்ள டோப்கா கிராமத்தில் ஒரு கும்பல் போராட்டத்தில் ஈடுபட்டது. ஊரடங்கு உத்தரவை மீறி போராட்டம் நடத்திய அவர்கள், பாதுகாப்புப் படையினர்மீது கற்களை வீசித் தாக்குதல் நடத் தினர்.




அதையடுத்து வன்முறையைக் கட்டுப்படுத்தும் வகையில் பாதுகாப்பு படையினர் தடியடி நடத்தியும், கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசியும் போராட்டக்காரர்களைக் கலைத்தனர்.

2001 ஆம் ஆண்டு டிசெம்பர் 13 ஆம் திகதி நாடாளுமன்றத்துக்குள் புகுந்த 5 தீவிரவாதிகள், சரமாரியாகத் தாக்குதல் நடத்தியதில், டில்லி பொலிஸ் அதிகாரிகள் 5 பேர் உட்பட 9 பேர் கொல்லப்பட்டனர். தாக்குதல் நடத்திய 5 பேரும் கொல்லப்பட்டனர்.

தாக்குதல் நடைபெற்ற ஓராண்டுக்குப் பின்னர், இது தொடர்பாக, அப்சல் குரு உள்ளிட்ட 4 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டது. விசாரணைக்கு பின் அப்சல் குரு மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டு அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. (வ)

# அக்னி – 6 ஏவுகணை தயாரிப்பில் இந்தியா

டில்லி, பெப்.11

அணு ஆயுதங்களை தாங்கிச் செல்லக்கூடிய அக்னி-6 அதிநவீன ரக ஏவுக ணையை விரைவில் தயாரிக்க இந்தியா திட்டமிட்டுள்ளதாகப் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத் தலைவர் வி.கே. சரஸ்வத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

அக்னி-6 ஏவுகணை சுமார் 6 ஆயிரம் கிலோ மீற்றர் தூரம் வரை பாய்ந்து சென்று தாக்கும் ஆற்றல் கொண்டது.

ஒரே ஏவுகணையில் ஒன்றுக்கும் மேற்பட்ட ஆயுதங்களைப் பொருத்த முடியும்.

குறித்த ஏவுகணைக்கான வடிவமைப்புப் பணிகள் முடிவடைந்துள்ளதாகவும், அதைத் தயாரிப்பதற்கான முதல்கட்டப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன-என்றார்.

அக்னி-6 ஏவுகணை உருவாக்கப்பட்டால் இத்தகைய அதிநவீன ஏவுகணைகளைக் கொண்ட நாடுகள் பட்டியலில் இந்தியாவும் இடம்பெறும்.

# அணு ஆயுத நடவடிக்கைகளை வடகொரியா கைவிட வேண்டும்

## வலியுறுத்துகிறார் பான் கீ-மூன்



ஜெனிவா, பெப்.11

வட கொரியா அணு ஆயுத சோதனையை மேற்கொள்வதை நிறுத்தி, நாட்டு மக்களின் நலனில் அக்கறை செலுத்த வேண்டும்- இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ-மூன்.

ஊடகவியலாளர்களைச் சந்தித்த பான் கீ-மூன், வடகொரிய விவகாரம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

வட கொரியா மீண்டும் அணு ஆயுத சோதனையை மேற்கொள்ளக் கூடாது. அதைவிடுத்து மனிதாபிமான உதவிகள் தேவைப்படும். தனது நாட்டு மக்களின் நலனில் அதிக அக்கறை செலுத்த வேண்டும். வட கொரியாவுக்கு மனிதாபிமான உதவிகளைச் செய்ய ஐ.நா. முயற்சி செய்கிறது. ஆனால் அந்த நாட்டின் அணு ஆயுதச் சோதனை அறிவிப்பு காரணமாக, சர்வதேச நாடுகள் தயக்கம் காட்டுகின்றன. அதன்காரணமாக வடகொரியாவில் மேற்கொள்ளும் மனிதாபிமானப் பணிகளுக்கான நிதிப்பங்களிப்பு குறைவாக உள்ளது. நிதிப்பற்றாக்குறை காரணமாக ஐ.நா. அவசர கால நிவாரண நிதியையே பயன்படுத்த வேண்டியுள்ளது. சர்வதேசத்தின் எச்சரிக்கை, ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் போன்றவற்றை வடகொரியா கருத்தில் கொள்ளவேண்டும்.

வடகொரியா அணு ஆயுதச் சோதனைகளை மேற்கொண்டால், தென் கொரியாவுடன் சுமுகமான உறவை ஏற்படுத்த மேலும் பல ஆண்டுகள் தாமதமாகும்-என்றார் பான் கீ- மூன். (ற)



துனிசியாவின் பிரதான எதிர்க்கட்சித் தலைவர் சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அங்கு வன்முறைகள் வெடித்தன. வன்முறைகளை அடுத்து அரசைக் கலைப்பதாக அந்நாட்டுப் பிரதமர் அறிவித்திருக்கிறார். எனினும் அரசுக்கு எதிராக மக்கள் தொடர்ந்தும் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். வன்முறைச் சம்பவங்களும்தொடர்கின்றன. (ற)

## மிதக்கும் பாடசாலை நைஜீரியாவில்

லாகோஸ், பெப்.11

நைஜீரியாவில் மிதக்கும் பாடசாலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. நைஜீரியாவின் சில பகுதிகள் அடிக்கடி வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்றன. அதனால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன. அதையடுத்தே மிதக்கும் பாடசாலை அமைக்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.

108 சதுர அடி பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள அந்தப் பாடசாலை, 33 அடி உயரம் கொண்டதாகும்.

இந்தப் பாடசாலை சுமார் 100 மாணவர்கள் கல்வி கற்பதற்குரிய வசதிகளைக் கொண்டது. மேலும் பாடசாலை மின்விளக்குகளுக்கான மின்சாரம் கூரையில் பொருத்தப்பட்டுள்ள சூரிய சக்திப் படல்கள் மூலம் சூரிய ஒளியில் இருந்து பெறப்படுகின்றது. அந்தக் கட்டடம் மழைநீரை அப்படியே உள்வாங்கி சற்றும் ஒழுகாமல் வெளியேற்றக் கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ற)

## மிஸ்டர் பீனின் காரைத் திருத்த 1.4 மில். பவுண்ஸ்!

பரிஸ், பெப்.11

புகழ்பெற்ற நகைச்சுவை நடிகரான மிஸ்டர் பீனுக்கு 1.4 மில்லியன் பவுண்ஸ் காப்புறுதி இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. கார் விபத்துத் தொடர்பான வழக்கிலேயே இந்தத் தொகை இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது. பிரிட்டன் வரலாற்றிலேயே கார் விபத்துத் தொடர்பாக வழங்கப்பட்ட அதிகூடிய இழப்பீட்டுத் தொகை இதுவாகும்.

மிஸ்டர் பீன் கதாபாத்திரத்தில் நடிக்கும் ரோவன் அட்கின்சன், மிஸ்டர் பீன் என்றே எல்லோராலும் அறியப்பட்டவர். இங்கிலாந்தை சேர்ந்த இவர் மெக்லாரன் எப்1 என்ற விலை உயர்ந்த காரைப் பயன்படுத்தி வந்தார். அதில் பயணம் செய்த போது நிலை தடுமாறி கார் வீதியோர மரத்தில் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்துக்குள்ளான காரை திருத்துவதற்காக காப்புறுதி நிறுவனம் நடிகர் அட்கின்சனுக்கு 1.4 மில்லியன் பவுண்ஸ் வழங்க முன் வந்துள்ளது. (ற)

# அல்-குவைதா அமைப்பின் முடிவு காலம் விரைவில்

## அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா

வோஷிங்டன், பெப்.11

அல் குவைதா பயங்கரவாத அமைப்பை அடியோடு அழிக்கும் காலம் நெருங்கி விட்டது என்று தெரிவித்துள்ளார் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா.



அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் லியோன் பனேட்டா, தமது பதவியில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். அவருக்கு வெள்ளை மாளிகையில் பிரிவுபசார விழா நடைபெற்றது. அங்கு உரையாற்றும்போதே பராக் ஒபாமா இவ்வாறு தெரிவித்தார்.

ஒபாமா தமது உரையில் தொடர்ந்து கூறிய தாவது:-

உளவுப் பிரிவின் தலைவராகப் பனேட்டா பணியாற்றிய காலத்தை எப்போதும் மறக்க முடியாது. அல் குவைதா அமைப்பின் நிறுவுநர் ஒசாமா பின்லேடனின் இருப்பிடம் தொடர்பான தகவலைக் கண்டறிவதில் முக்கிய பங்காற்றி உள்ளார். அந்தத் தகவல்கள் மூலமே பின்லேடன் கொல்லப்பட்டார். அமெரிக்க வரலாற்றில் அந்தச் சம்பவம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

பயங்கரவாத குழுக்களுக்கு எதிராக அமெரிக்க அரசு கடும் நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. ஈராக்கில் நடைபெற்ற போர் முடிந்து விட்டது. அங்கிருந்த அமெரிக்கப் படைகள் திரும்பி விட்டன. தற்போது அமெரிக்கப் படைகள் ஆப்கனில் முகாமிட்டு, அல் குவைதா அமைப்புக்கு எதிராக போராடி வருகிறது. அந்த அமைப்பை அடியோடு வேரறுக்கும் காலம் நெருங்கி விட்டது. ஆப்கன் போரும் விரைவில் முடிவுக்கு வரும்-என்றார்.

ஓய்வுபெறும் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் பனேட்டா அங்கு கூறிய தாவது:-


இத்தாலிய அமெரிக்கரான நான் அமெரிக்க அரசின் உயர் பதவியில் இருந்தது தனிச்சிறப்பு, வாய்ந்த அனுபவமாக உள்ளது. பின்லேடனுக்கு எதிரான வேட்டை முடிவுக்கு வந்ததாக ஒபாமா அறிவித்த பிறகு வெள்ளை மாளிகையிலிருந்து வெளி வந்தபோது எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை ஒருபோதும் மறக்க முடியாது. உளவுப் பிரிவு மற்றும் இராணுவத்தின் ஒருங்கிணைந்த செயற்பாடு காரணமாகவே பின்லேடனுக்கு எதிரான வேட்டையில் வெற்றி கிடைத்தது- என்றார். (ற)

# பிரெஞ்சு பேச மறுத்தாராம் அமைச்சர் ஜோன் கெர்ரி

## கிளம்பியது புதிய சர்ச்சை

நியூயோர்க், பெப்.11

அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சராகப் புதிதாகப் பதவியேற்றுள்ள ஜோன் கெர்ரி பிரெஞ்சு மொழியில் உரையாற்ற மறுத்தது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.



புதிதாகப் பதவியேற்ற ஜோன் கெர்ரி அண்மையில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தியிருந்தார். அப்போது அவரை பிரெஞ்சு மொழியில் உரையாற்றுமாறு கேட்கப்பட்டது. அதன்போதே அவர் மறுப்புத் தெரிவித்திருந்தார். பிரெஞ்சு மொழியில் நன்கு பரீட்சயமுள்ள கெர்ரி அவ்வாறு மறுப்புத் தெரிவித்தமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

பிரெஞ்சில் உரையாற்றுமாறு ஊடகவியலாளர்கள் கேட்டதற்கு, ''இன்று முடியாது. நான் என்னைச் சற்று புதுப்பித்துக் கொள்ள வேண்டும்'' என்று தெரிவித்திருந்தார் ஜோன் கெர்ரி.

அவரின் இந்தப் பதில் பிரெஞ்சு பேசும் சமூகத்தினரிடையே சற்றுச் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

2004 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியைத் தழுவிய பின்னர் கெர்ரி பங்கு கொண்ட பத்திரிகையாளர் சந்திப்பு மற்றும் தேர்தல் பிரசாரங்களின் போது அடிக்கடி பிரெஞ்சு மொழியிலும் உரையாற்றியிருந்தார். அவரின் கருத்துக்கள் காரணமாக ஈராக் போரின் போதான பங்களிப்புக் குறித்து அமெரிக்க- பிரான்ஸ் இராஜதந்திர உறவுகளில் அப்போது சிறிது விரிசல் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில் அவர் பிரெஞ்சில் உரையாற்ற மறுத்தமை சர்ச்சையாக உருவெடுத்துள்ளது. (ற)

# சொந்த நாட்டு மக்களையே கொல்ல உத்தரவிட்டுள்ளார் ஜனாதிபதி ஒபாமா

## குற்றஞ்சாட்டுகிறார் விக்கிலீக்ஸ் அசாஞ்சே

லண்டன், பெப்.11

சொந்த நாட்டு மக்களையே கொல்ல அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா உத்தரவிட்டுள்ளார். இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் விக்கிலீக்ஸ் நிறுவுநர் ஜூலியன் அசாஞ்சே.

அல்-குவைதா போன்ற பயங்கரவாத அமைப்புக்களுடன் அமெரிக்கர்களுக்கு தொடர்பு இருந்தால் அவர்களை எதிரிகளாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமெரிக்க அரசு அண்மையில் தெரிவித்திருந்தது. அதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே அசாஞ்சே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்திருப்ப தாவது:-

தங்கள் நாட்டு மக்களையே கொல்ல உத்தரவிட்டிருப்பதன் மூலம் அமெரிக்காவின் அரசியல் நடைமுறையையே ஒபாமா சிதைத்துவிட்டார். இதுபோன்ற அரசுகள் மக்களை மதிக்காமல் செயற்படும்போதுதான், அவர்களின் இரகசியங்களை அம்பலப்படுத்த விக்கிலீக்ஸ் போன்ற அமைப்புக்கள் தேவைப்படுகின்றன. ஆப்கன் உட்படப் பல இடங்களில் பயங்கரவாதிகளுக்கு எதிராகவும், உளவு பார்ப்பதற்காகவும் ஆள் இல்லாத விமானங்களை அமெரிக்கா பயன்படுத்தி வருகிறது. இது தொடர்பான விதிகளின் முழுவிவரங்களை வெளியிட அமெரிக்கா தயாரா?

இது தொடர்பாக வெள்ளை மாளிகையில் இருந்து யாராவது எங்களுக்கு உதவ முன் வந்தால் வரவேற்போம். அவர்களின் பெயர், விவரம் இரகசியமாகப் பேணப்படும். என்று தெரிவித்தார் அசாஞ்சே. (ற)

# ஈராக்கில் குண்டு வெடிப்பு: 29 பேர் சாவு

பாக்தாத், பெப்.11

ஈராக்கில் இரண்டு இடங்களில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களில் 29 பேர் உயிரிழந்தனர். 70இக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

ஷியா முஸ்லிம் பிரிவினர் அதிகமாக வசிக்கும் பபிள் மாகாணத்தில் உள்ள ஷோமலி நகரில் கார்க் குண்டுத் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டது. அதில் 13 பேர் உயிரிழந்தனர். 26 பேர் காயமடைந்தனர். உயிரிழந்தவர்களில் குழந்தைகள் மற்றும் பெண்களும் அடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, ஈராக்கின் வடக்குப் பகுதியிலுள்ள பறவைகள் சந்தையில் நடத்தப்பட்ட தாக்குதலில் 16 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் காயமடைந்தனர். உயிரிழந்தவர்கள் ஷியா முஸ்லிம்கள் என்று கூறப்படுகிறது.

மனநலம் பாதிக்கப்பட்ட பெண்கள் இருவரின் உடலில் குண்டுகள் கட்டப்பட்டு, அதனை ரிமோட் மூலம் இயக்கி பயங்கரவாதிகள் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர் என்று பொலிஸார் கூறுகின்றனர். (ற)






இலங்கையிலே முதல் முறையாக
அதி நவீன தொழில்நுட்பத்துடன் வவுனியாவில்
இன்று (11-02-2013) திங்கட்கிழமை ஆரம்பமாகும்

# V.S.S. அரிசி ஆலை

## V.S.S. Rice Mill வேப்பங்குளம், வவுனியா.

0245670145, 0779000640, 0244928306, 0244928307

*சுப நேரம் : 9.30 - 11.30 சுபவேளையில் இன்று ஆரம்பமாகும் ா.றீ.றீ.அரிசி ஆலை மேன்மேலும் வளரவும் அதனுடைய உற்பத்திகள், மக்கள் மத்தியில் முதல் இடத்தைப் பிடித்து பல படிகள் தாண்டி உயர்ந்து நின்று சாதனை படைக்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டி எமது மனம் மகிழ்ந்து இதய பூர்வமாக வாழ்த்துக்கள் தெரிவிக்கின்றோம்.*

**வாழ்த்துவோர்:**

**ஐயப்பன் ரேடர்ஸ்**
No.30, ஸ்ரேசன் வீதி,
கிளிநொச்சி.
T.P: 0213208013

**கந்தசாமி அன் சன்ஸ்**
பிரதான வீதி,
சங்கானை.
T.P: 0213211008

**வைகுந்தபெருமாள்**
பல்பொருள் வாணிபம்
மார்கற் பிளேஸ்,
வட்டக்கச்சி.
T.P: 0776128159

**பரந்தாமன்**
பல்பொருள் வாணிபம்
கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
T.P: 0212285458,
0773747344

**சிறி விநாயகர் ஸ்ரோர்ஸ்**
கரந்தாய்ப்பளை, A9 வீதி,
கிளிநொச்சி.
K.தரனீதரன் (அகிலன்)
T.P: 0770523625

**ஈசன் களஞ்சியம்**
கண்டி வீதி,
சாவகச்சேரி.

**சிறி சிவராம் றேடர்ஸ்**
**SRI SIVARAM TRADERS**
189, Katheresan Street,
Colombo.
T.P: 0777560760

**POINT PEDRO TRADERS**
No: 16,
Sangamitha Mw,
Colombo-13.
No.183,
K.K.S. Road,
Jaffna.
Mobile: 077386 62 50
Tel: 021 222 88 81
021 222 88 29.
E.mail: pptjude@yahoo.com

**P.P.T. Express**
*Super Luxury Service*
Fully Adjustable & Side way Adjustable Seats
Wi-Fi (Internet), Video, Mobile Charging
Mic, Security Camera, Coolbox (Fridge)
No.16, Sangamitha Mawatha,
Colombo 13, Tel: 011 4375790, 077 5755175
No.183, K.K.S. Road, Jaffna.
Tel:021 4923240, 077 5731318
www.pptxpress.com



(c/6341) (10,6,7)

## டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

உங்கள் வீடுகளில் உடைந்த பிளாஸ்ரிக் பொருள்களைக் கொள்வனவு செய்து அவற்றிலிருந்து மீண்டும் புதிய பொருள்கள் செய்து தரப்படும்.
உடைந்த கழிவுப் பொருள்கள் கொள்வனவு செய்யப்படும்.
இல. 06, [illegible], கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
[illegible]: இல. 30/27, [illegible], நல்லூர்.
Tel: 021 222 8680, 0775925088, 0750407430

## காணி விற்பனைக்கு

அளவெட்டி பிரதான வீதியில் ஆறு பரப்பு வயல் காணி உடன் விற்பனைக்கு உண்டு. வீட்டுக் காணியாகவும் பயன்படுத்தலாம்.
T.P- 0718561919 (29380)(6.7.11)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்வி முதுமாணி கற்கை நெறியின் (M.Ed) சக ஆசிரிய மாணவனான இ.சிறிதரன் அவர்களின் அன்புத்தாயார்

**திருமதி இராமநாதன் தங்கமணி**

அவர்கள் 06.02.2013 புதன்கிழமை இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

இணைப்பாளர், விரிவுரையாளர்கள்,
சக ஆசிரிய மாணவர்கள்,
தேசிய கல்வி நிறுவக பிராந்திய கற்கை நிலையம்,
தேசிய கல்வியியல் கல்லூரி, யாழ்ப்பாணம்.
(294 3)(8.6.7)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

French மொழி கற்பதற்கு French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இவ்அரிய சந்தர்ப்பத்தினை தவறவிடாதீர்கள். மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.

புதிய வகுப்புக்கள் மிக விரைவில்... T.P.: 021 222 8093
61, Kachcheri Nallur Road, Jaffna.
(ரக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)

## MAHA FASHION CORNER & ACADEMY

தேசிய விருது பெற்ற ஆசிரியரால் Fashion Jewellery Making வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. பயிற்சியின் போது தோடு, மாலைகள், நெக்லஸ், கொலுசு, காப்பு, பதக்கம் சங்கிலி, மணப்பெண் அலங்கார செற் (குந்தன/ஐஸ்வரியா செற்) போன்ற 25 இற்கும் அதிகமான ஆபரணங்கள் செய்ய பயிற்றுவிக்கப் படும். சான்றிதழ் வழங்கப்படும். மேலதிக பயிற்சிகளாக Pot Painting, Glass Painting, Saree Work, Fabric Painting, Screen Printing, Wall Hanger Making, Stocknet Flower Making நடத்தப்படுகின்றன.

தொடர்புகளுக்கு- MAHA FASHION CORNER AND ACADEMY,
0776404383 (C/29365)(6.7.11)




# கேள்வி அறிவித்தல் - 2013
# கரைச்சிப் பிரதேச சபை - கிளிநொச்சி

எதிர்வரும் 26.03.2013 திகதி நடைபெறவுள்ள கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு கீழ்க்காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள துவிச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள், வாகன பாதுகாப்பு நிலையங்களை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கமைய கேள்வி அறிவித்தல் கோரப்படுகின்றது. பொருத்தமானவர்கள் கேள்விப்பத்திரங்களை அரக்கு முத்திரையிட்டு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கேள்விப்பத்திரம் வழங்கும் காலம் :- அலுவலக நாள்களில் 01.03.2013 தொடக்கம் 07.03.2013 வரை.
கேள்விப்பத்திரம் வழங்கும் நேரம் :- மு.ப 8.30 இல் இருந்து 3.30 மணி வரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித்திகதி :- 11.03.2013 மு.ப 11.00 மணிக்கு.
கேள்வி திறக்கும் திகதி :- 11.03.2013 மு.ப 11.00 மணிக்கு.
கேள்வி திறக்கும் இடம் :- கரைச்சிப் பிரதேச சபை உப அலுவலகம் முரசு மோட்டை.

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை தலைவர், கரைச்சிப் பிரதேச சபை உப அலுவலகம் முரசுமோட்டை என்ற முகவரியிட்டு அரக்கு முத்திரையிட்டப்பட்டு தபால் உறையின் இடதுபக்க மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது கரைச்சிப்பிரதேச சபையின் முரசுமோட்டை உபஅலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி என்ற முகவரியிட்டு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் தங்களது தேசிய அடையாள அட்டை அல்லது கடவுசீட்டை கொண்டுவருதல் வேண்டும்.

| இல | விபரம் | கேள்விப்படிவ கட்டணம் | கேள்விவைப்பு (மீளளிக்கக் கூடியது) | ஆரம்பக் கேள்வித்தொகை. |
|---|---|---|---|---|
| (1) | துவிச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் | 500/= | 5000 /= | 60000/ |
| (2) | வாகன பாதுகாப்பு நிலையம் | 500/= | 5000 /= | 100000/= |

### நிபந்தனைகள்

1. திருவிழாக்காலங்களில் 26,27 திகதிகளில் மட்டுமே பாதுகாப்பு நிலையங்கள் அமைந்திருத்தல் வேண்டும்.
2. துவிச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள், வாகனம் என்பன தொலையும் சந்தர்ப்பத்தில் குத்தகை எடுத்தவரே பொறுப்புடையவராவார்.
3. சுற்று வேலி தாங்களாகவே அமைத்தல் வேண்டும்.
4. கேள்விதாரராக தெரிவு செய்யப்படுபவர் பிரதேசசபையால் குறிக்கப்படும் திகதியில் முழுப்பணத்தினையும் ஒரேதடவையில் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் மேற்கொள்ள வேண்டும்.
5. ஆரம்ப கேள்வித்தொகைக்கு குறைந்த தொகையில் விண்ணப்பித்தாலோ அல்லது சித்திகர கேள்விதாரராக தெரிவு செய்யப்பட்டு குறித்த திகதிக்குள் பணத்தினை செலுத் தத்தவறினாலோ குறித்த நபரின் பெயர் கறுப்பு பட்டியலில் இணைக்கப்படுவதுடன் இவரின் வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.

இது தொடர்பான மேலதிக விவரங்களை பெற விரும்பினால் கரைச்சிப்பிரதேச சபையின் முரசுமோட்டை உபஅலுவலகத்தில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளவும்.

**வை.குகராசா.**
**தலைவர்.**
**கரைச்சிப் பிரதேச சபை.**
**கிளிநொச்சி.**

(29365) (45.6.7)

## வாழ்த்துகிறோம்! வாழ்த்துகிறோம்!

கிளிநொச்சி மத்திய கல்லூரியையும், கல்விப்பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையில் உச்சப் பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்ட மாணவச் செல்வங்களையும், அர்ப்பணிப்புடன் செயற்பட்ட ஆசிரியர்கள் குழாமையும், ஆற்றல்மிகு அன்பான அதிபர் அவர்களையும் வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றோம். பெற்றோர்கள், சமூகமாகப் பூரிப்படைகின்றோம். நலன்விரும்பிகளாக நல்லாசிகள் கூறி நிற்கின்றோம், நமது கல்லூரி தொடர்ந்தும் சாதனைகள் படைக்க நெஞ்சார வாழ்த்தி நிற்கின்றோம்.

**நன்றிகள்! எஸ்.ஏ.எம். பிரசாத்**
(கல்லூரி அபிவிருத்திச் சங்கத்தின் முன்னாள் செயலாளர், செல்வா சாரதிப்பயிற்சிப் பாடசாலை இயக்குநர்)

தங்களின் எதிர்கால நேர்முகத்தேர்வுகளுக்கு ஏற்ற விதமாக, முறைசாராக் கல்விப்பிரிவின் ஊடாக, விஞ்ஞான ரீதியான சாரத்தியம் கற்றுத்தந்து கல்வித்திணைக்களத்தின் சான்றிதழ்களையும் பெற்றுத்தந்து, சாரதி அனுமதிப்பத்திரங்களையும் வழங்குபவர்கள்.





## செல்வா சாரதிப் பயிற்சிப் பாடசாலை
ஆனந்தபுரம்-கிளிநொச்சி.

உங்களுக்கான எங்கள் ஹெல்ப் லைனில் வாருங்கள்

(26337)(10.6.7)

# பிள்ளைகளை வளர்ப்பதில் பெற்றோரின் பங்களிப்பு

எந்தக் குழந்தையும் பிறக்கும்போது நல்ல குழந்தையாகவே பிறக்கிறது. ஆனால் அவர்கள் நல்லவராவதும் தீயவராவதும் பெற்றோரின் கையில் தான் உள்ளது. பெற்றோர் எப்போதுமே அவர்களின் குறைகளை மட்டும் எடுத்துக் கூறக் கூடாது. நல்லவற்றை மட்டும் எடுத்துக் கூறவேண்டும். தங்கள் குழந்தையை வேறெந்தக் குழந்தையுடனும் ஒப்பிட்டுப் பேசக்கூடாது. பிள்ளையின் பிஞ்சு உள்ளம் நோகாமல் பெற்றோர் பார்த்துக் கொள்ள வேண்டும். இளம் பராயத்திலிருந்தே நல்ல பழக்க வழக்கங்கள் உருவாகவில்லை என்றால் நிறைவான வாழ்க்கை வாழமுடியாத சூழ்நிலை உருவாகி விடுகின்றது. சிறு வயதிலிருந்தே பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு நல்ல பழக்க வழக்கங்கள், பண்பு, கலாசாரம் இவைகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும். அப்போது தான் குழந்தை தன் வாழ்க்கை முறையை சரியாக மேற்கொள்ளும். இன்றைய காலகட்டத்தில் சிறு பிள்ளைகளுக்கு எவ்வளவோ அநியாயங்கள் நடைபெறுகின்றன. பெரியவர்கள் சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்யும் நிலை அதிகரித்துள்ளது. இதனால் அந்த பிஞ்சு உள்ளங்களின் வாழ்க்கை பாழாகின்றது.



பெற்றோர்கள்தான் பிள்ளைகளை மிகவும் அக்கறையுடன் வளர்க்க வேண்டும். அதிலும் விஷேடமாக பெண் பிள்ளைகளைப் பெற்றோர் அதிக கவனத்துடன் வளர்த்தெடுக்க வேண்டும். பிள்ளைகள் கல்வியில் மட்டும் முன்னேறினால் மட்டும் போதாது. அவர்கள் பழக்க வழக்கங்களிலும் முன்னேற மிகவும் அக்கறை செலுத்த வேண்டும். குழந்தைகளின் வாழ்க்கை தான் தமது வாழ்க்கை என்பதை இன்றைய பெற்றோர் நினைக்கவேண்டும். கண்டிப்போடு அதிக அன்பையும் குழந்தையிடம் காட்டவேண்டும். அப்போதுதான் அந்தக் குழந்தை தனக்குள் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ளும். தன் வாழ்க்கையில் வெற்றி பெற்று தன் இலக்கை அடையும். வாழ்வில் மகிழ்ச்சியைக் காணும்.

எஸ்.ஷிராணி,
48, பாண்டியன் தாழ்வு,
யாழ்ப்பாணம்.

# நீ முயன்றால் வானம் அருகில்



இதயத்தில் காயங்கள்
நிறைந்திட
தோல்வியை எண்ணி
துடித்திடும் தோழியே!
நீ சுட்டிடும் பொழுதே
சங்கும் வெளுக்குமே!
பிறர் இகழ்ந்திடும்
பொழுது துவண்டு
நீ இமயத்தைக் கண்டு பயந்து
வாடிடும் மலரே!
எழுந்து நிமிர்ந்திடு
உழுதிடும் நிலமே பண்படும்
அறிந்திடு
வழியில் தடைகள் ஆயிரம்
குறுக்கிடும்
தயங்கி நீ நிற்காதே
முடியாதென்று, முயற்சியை
இழந்து
வீட்டுக்குள் முடங்காதே!
மலைபோல் மனத்துயர்
சூழ்ந்திடினும்
மனவுறுதி பெண்ணுக்கு
வேண்டும்
தோல்விகள் துரத்திடும்
போதும்
பெண் உழைப்பால்
உயர்ந்திட வேண்டும்
வீழ்ந்தபின் எழுவதும்
விரக்தியை களைவதும்
வெற்றிக்கு இலக்கணமே
தடைகளைத் தாண்டி
தரணியை வென்றி
பிறந்தவள் நீ தானே!
சிகரம் இருப்பது தொலைவில்
நீ பயணத்தை தொடங்கிடு
விரைவில்
மனம் நினைத்ததை
முடித்திடும் எளிதில்
நீ முயன்றால் வானம்
அருகில்....

கெ.ஜெய்சி.லீனா
தாழ்வுபாடு, மன்னார்.

# தாய் மனசு தங்கம்

தாய் என்று சொல்லப்படுகின்ற பெரும் பொக்கிஷம், தாரம் என்கின்ற நிலையையும் கடந்து இயங்கிக் கொண்டிருக்கும் உலக இயக்கத்தின் ஜீவநாடி. ஏனெனில் எம்மைப் பெற்றெடுத்த நாள் முதலாய் தூக்கத்துக்கும் விழிப்புக்குமிடையே தினம் தினம் போராடி, தன் வாழ்நாளின் முழு நேரத்தையும் எமக்காக ஈய்ந்து விடுகின்றாள். எம்மை உறங்க வைக்கும் தலையணையாகவும், எழும்ப வைக்கும் அலாரமாகவும், ஓடியாடி சுறுசுறுப்பாக்கும் காலைத் தென்றலாகவும், கல்லூரி வாழ்க்கையில் பள்ளித் தோழியாகவும், கடமை நேரங்களின் போது நல்ல ஆலோசனை கூறும் சக பணியாளராகவும், நாம் நோயுற்ற வேளையில் கூட விருந்து காக்கும் தாதியாகவும், கும்மாளமிடும் வேளையில் கூடிக் குதூகலிக்கும் நண்பியாகவும், சந்தர்ப்பத்தை தட்டிக்கொடுக்கும் நல்ல நலன் விரும்பியாகவும், தவறும் பாதையில் கீறும் முட்களை கிள்ளி எடுத்து எறியும் நல்ல பக்குவமுள்ளவளாகவும், உயரும்போது ஏற்றிவிடும் ஏணிப்படியாகவும் எப்போதும் பிள்ளைகளின் நலனை மட்டுமே உருவகித்து வாழும் தாய் என்று சொல்லப்படுகின்ற தங்கம் எவ்வளவு காலமும் குன்றாது வாழும் தெய்வம் என்று கூறினால் அது மிகையாகாது.

இத்தகைய தெய்வத்தைத் தினமும் போற்றி வாழ்நாள் பூராகவும் அவளது கடமைகளை மனம் கோணாது செய்து, அவளின் மனம் மகிழச் செய்வோமாக.

எம்.சுகா, அச்சுவேலி.



“எம்மைப் பெற்றெடுத்த நாள் முதலாய் தூக்கத்துக்கும் விழிப்புக்குமிடையே தினம் தினம் போராடி, தன் வாழ்நாளின் முழு நேரத்தையும் எமக்காக ஈய்ந்து விடுகின்றாள்.





திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் “திலகம்”, உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021 222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021 5671111
விநியோகம்: 021 5677222
தொலைநகல்
செய்தி: 021 5678844,
விளம்பரம்: 021 2229731
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ–9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வீதி, முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி: 021-2262789,
021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' – மானிப்பாய் சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேர்ன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'நீர்வேலி கஜானன்' – கண்டி வீதி, நீர்வேலி தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி வலைக்கிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஓட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரைஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# தூக்கிலிடப்படும் நியாயங்கள்

இலங்கையில் வடக்கு, கிழக்குப் போல, இந்தியாவில் காஷ்மீரிலும் உரிமைக்கான போராட்டம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. ஆயினும் அங்கும் இரும்புக் கரம் கொண்டு அப்பாவிகளின் உரிமைக்குரல் நசுக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறது.

அப்சல்குரு, காஷ்மீரிகளின் உரிமைக்காக ஜனநாயக ரீதியில் குரல் கொடுத்த ஒரு போராளி. அவர் ஆயுதப் பயிற்சி பெற்றவர் அல்லர். ஆயுதங்கள் மூலம் அதிகாரத்தை முற்றுமுழுதாக வென்றுவிட முடியாது என்ற கருத்தில் நம்பிக்கை கொண்டவர். எனவே அவர் கொள்கை ரீதியாக அதிகாரத்தை எதிர்க்க முயன்றார். விடாது அவர் மீது பாய்ச்சல் நிகழ்ந்த போதும் துணிச்சலோடு மக்களுக்காக குரல் கொடுத்தார். எப்போதுமே காஷ்மீர் மக்களை தீவிரவாதிகளாகவே சித்திரித்துக் கொண்டிருந்த இந்தியாவுக்கு, 'காஷ்மீரின் காந்தியாக' அப்சல்குரு உருவெடுக்க தொடங்கியது பிரச்சினையாக மாறியது. ஏனெனில் ஆயுததாரிகளைக் காண்பித்து, அவர்கள் கூட்டாலேயே நாங்கள் கொன்றோம் என்று அப்பாவிகளை வேட்டையாடப்படும் போலிச் சமர்களை அப்சல்குரு போன்றவர்களின் எழுச்சி காட்டிக் கொடுத்துவிடும் என்று இந்திய அரசு அஞ்சியது. அதனால் தேசத்துரோகியாக்கப்பட்டார் அப்சல்குரு. ஏராளமான தேசத்துரோக வழக்குகள் அப்சல்குருவின் தலையின் மீது தன்பாட்டிலேயே வந்துவிழுந்தன.

கூடங்குளம் அணுஉலையை எதிர்த்து மக்களுக்காக எப்படி ஜனநாயக ரீதியில் சுப.உதயகுமார் போராடுகிறாரோ அதேபோன்றே மக்கள் சக்தியை திரட்டிப் போராட முயன்றவர் அப்சல் குரு. உதயகுமாருக்குக் கிடைத்தது போன்றே அப்சல்குருவுக்கும் தேசத்துரோகி மகுடம் எளிதாகச் சூட்டப்பட்டது.

அப்சல் குருவை வேட்டையாடி காஷ்மீரிகளின் ஜனநாயகக் குரலை ஒரேயடியாக ஒழித்துக்கட்ட இந்திய அரசு தருணம் பார்த்துக் காத்திருந்தது. இந்திய நாடாளுமன்றம் மீதான தாக்குதல் பழத்தை நழுவி பாலில் விழ வைத்தது. இந்தத் தாக்குதலுடன் அப்சல் குருவுக்கு தொடர்பிருப்பதாகக் கூறி கைது செய்யப்பட்டார். ஒரு தலைப்பட்சமாகவே விசாரணைகள் நடந்தன. அப்சல்குரு தன்னுடைய நியாயத்தை வெளிப்படுத்த சந்தர்ப்பம் ஏதும் அளிக்கப்படவில்லை. குற்றம் சுமத்தியவர்களே நீதிபதி கதிரையிலும் அமர்ந்தனர். நீதியின் தராசு அதிகாரத்தின் பக்கமாகவே தாழ்த்தப்பட்டது. அப்சல்குருவுக்கும் நாடாளுமன்றத் தாக்குதலுக்கும் இடையிலான தொடர்புகள் குறித்த எந்தவித சாட்சியங்களும் ஆதாரபூர்வமாக பிரசன்னப்படுத்தப்படாமலேயே அவருக்கு மரண தண்டனையும் விதிக்கப்பட்டது.

மும்பைத் தாக்குதலில் ஈடுபட்ட அப்துல் கசாப்புக்கு ரகசியமான முறையில் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டதைப் போன்று, அப்சல்குருவும் யாரும் அறியாப் பொழுதொன்றில் தூக்கிலிடப்பட்டார். அவர் மீதான விசாரணைகள் நியாயமான முறையில் நடைபெறவில்லை என்று மனித உரிமை அமைப்புக்கள் போராடி வரும் நிலையில் அப்சல் குருவின் கருணை மனுக் கோரிக்கையை இந்திய ஜனாதிபதி நிராகரித்ததாலேயே அவருக்கான தூக்குத் தண்டனை ரகசியமாக நடந்தேறியிருக்கிறது. அவர் தூக்கிலிடப்பட்ட பின்னர்தான் இந்திய ஜனாதிபதி அப்சல்குருவின் கருணை மனுவை நிராகரித்த செய்தி உலகுக்கு சொல்லப்பட்டது.

இப்போது மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள ராஜீவ் கொலைக் குற்றவாளிகள் என்று கூறப்படும் முருகன், சாந்தன், பேரறிவாளன் மூவருக்கும் விரைவில் அப்சல்குருவின் கதிதான் நிகழுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது. ராஜீவ்காந்தி கொலை தொடர்பான விசாரணைகளும் எழுந்தமானமாக மேற்கொள்ளப்பட்டு அப்பாவிகளுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டதாக சர்ச்சை எழுந்துள்ள நிலையில், அவர்களின் கருணை மனுவையும் நிராகரித்து விரைவில் தூக்கிலிடவே இந்திய அரசு முனையும் என்று நம்பப்படுகிறது. ஏனெனில் இப்போதெல்லாம் பல சந்தர்ப்பங்களிலும் தூக்கிலிடப்படுவது குற்றவாளிகளையல்ல: உண்மையையும் நியாயத்தையும்தான்.

# கால் நழுவும் சுவடுகள்

■ செந்தூரி

"இந்த மக்கள் கேரள மக்களைப் போல விசாலமாக வாழ்கின்றார்கள்" - இன்றைக்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால், யாழ்ப்பாணம் வந்திறங்கிய இந்திய அமைதிப்படை ஜவான்கள் யாழ்ப்பாணத்து மக்களின் வாழ்வியலை, இந்தியாவின் 'கடவுள் தேசமாக' வர்ணிக்கப்படும் மலையாள வாசனைக்குரிய கேரளாவுடன் ஒப்பிட்டு பேசிய தருணங்கள் அவை. புறப்படையான பார்வை நோக்கலின் அடிப்படையில், யாழ்ப்பாணத்து மக்கள் "விசாலமானவர்கள்" என்னும் முடிவுக்கு அந்நியர்கள் வேகமாக வந்து விடுவதற்கான முக்கிய காரணங்கள் எமது 'பொருளாதாரமும்', 'வாழ்வாதாரமும்', 'வாழிடக் கோலமுமே'! தனித் தனியான, கிணறுகள், எல்லைப்படுத்தப்பட்ட தனிக் குடும்ப வாழிடங்கள், பிரத்தியேகமான மலசல கூடங்கள், பொறுப்புணர்ச்சியுடன் விளைவிக்கப்படுகின்ற விவசாய நிலங்கள் என்று எமக்குத் தெரியாமல் பிற ஆசிய தேசங்களுக்கு கண்ணைக் குத்துகின்ற எமது சிறப்புக்கள், உண்மையிலேயே தனித்துவமானவை. "வரதட்சணை" என்ற பணப் பிசாசின் கோரப்பிடியில் இந்தியாவின் பல்வேறு சமூகங்கள் சீரழிவுக்குள்ளான போதிலும், சில -பல கட்டுப்படுத்தப்பட்ட முறைகளினூடாக கைமாற்றப்படுகின்ற யாழ்ப்பாணத்தவர்களின் "சீதனம்" வீழ்த்தியவர்களை விட, வாழவைத்தவர்களின் எண்ணிக்கை மனக் கணக்கினால் எப்போதும் அதிகமே! மரணங்களை மலிவுப் பதிப்பில் எம்மிடம் விற்பனை செய்த ஆள்வோரின் அடக்குமுறைக்குள் அமிழ்த்திக் கிடந்ததை, முதன்மைக் காரணமாகவும், நாகரிக உச்சத்தின் தலைசிறந்த வாழ்க்கைக் கோலமான 'குடும்ப' அமைப்பு முறையை துணைக் காரணமாகவும் கொண்டு வடபுலம் என்றைக்குமே சனத்தொகை நெருக்கடி என்ற சங்கடத்தை இன்றுவரை சந்தித்ததேயில்லை. வடிகால்கள் மீதிக்கு இணைக்கப்படாத தத்தமது வீட்டுக் கழிவுகளை எல்லைக்குள்ளேயே அடக்கிக் கொள்ள வேண்டிய 'விசாலம்' இன்னும் மீதம் இருக்கின்றதென பெருமைப்படக் கூடிய குறு நிலங்கள் வடபுலத்தில் நகர்ப்புறம் தவிர்ந்த எல்லா இடங்களிலும் பரந்து கிடப்பதை சாதாரணமாகக் காணலாம்.

எது உயர்ந்த வாழ்க்கை? இருக்கவே இல்லாத இடத்தில், எண்ணற்ற இலத்திரனியல் உபகரணங்களையும் ஆளுக்கு மேல் அடுக்கப்பட்ட குடியிருப்புக்களையும் கூட்டிக் கட்டி வாழ்வதா?

தனக்கான உணவைப் பயிரிட்டுஅறுக்கப் போதுமானவிளைநிலமும், ஒவ்வொரு தனி மனிதனை சுற்றியும் நான்கு மடங்கு வாயுக் கோளமும் கொண்டு பரந்து வாழ்வதா? 'அறுபது'களுக்கு பிறகு ஊரோடு உட்கார்ந்துவிடும் அரச ஊழியர்களையும் இறுதிக் காலங்களை சொந்தங்களோடு கழிக்கவென்று புலம் பெயர்ந்த தேசங்களை விட்டுப் பிரிந்து நிரந்தரமாக வேப்பம் காற்றில் தங்கி விடுகின்ற முதிய தம்பதியினரையும் பார்த்துப் பழகும் "பக்குவம்" எமக்கு வர இன்னமும் காலம் இருக்கிறது.

திராவிடக் குடிகளில் ஆதியிலேயே ஊறிப் போன தனித்துவமான வாழ்க்கை முறைகளில் பழக்கவழக்கங்களாக, குடும்பங்களுக்கு பிரத்தியேகமான "நீர்குண்டு", "தீக்குண்டு" முறையே இன்றைய "கிணறு", 'சமையலறை' என்பன அடையாளப்படுத்தப்பட்டிருந்தன. பழந்தமிழர் வரலாற்றை அடித்துக் கூறும், காலச் சான்றாதாரம் என்று எதனையும் தன்னிடத்தில் கொண்டிராத போதிலும், ஆங்காங்கே திட்டுத் திட்டாக வீழ்ந்து கிடக்கும் காலத்தின் சுவடுகள், இத்தன்மையை உறுதிப்படுத்துகின்றன. கூடவே அழிவுக்குள்ளாக்கப்படும் இனமொன்றின் நீடித்த வீழ்ச்சியை உறுதி செய்யும் ஊடுருவல்களாக மொழியழிப்பும், கலாசாரவெழுக்கமும் காலகாலமாக அடக்கியாளும் தேவையுடையோர்களால் கைக்கொள்ளப்படுகின்ற மலின உத்திகளேயாகும், "தூய வழி இனம்" என்ற பெருமையை சிதைக்க வேண்டிய, கலப்பு யுத்தியை அதிகாரத்தின் துணையோடு விதைப்பவர்களின், நீண்ட நோக்கம் எதிர் வருகின்ற நூற்றாண்டுகளை நோக்கிய பலவீனப்படுத்தும், கொடூரமானதும், அருவருப்பு நிறைந்ததுமாகும்.

உலக வரலாற்றில் இது ஒன்றும் புதிதல்ல. தத்தமது சொந்தப் பூமியிலேயே சிறுபான்மையினராக ஆக்கப்பட்டவர்களின் கண்ணீரில் கால் கழுவி மௌனத்தில் துடைத்தழித்து தலைகுனிந்து நிற்கின்றது இறந்த காலம் அமெரிக்க கண்டங்களில் செவ்விந்தியர்களையும், ஆஸ்திரேலியாவின் அபார் ஜீனிஸ்களையும், தென்கிழக்காசியாவின் மஞ்சூரியர்களையும், குமரிக் கண்டத்தின் தமிழர்களையும், இன்னும் எஞ்சியிருக்கும் பூர்வீகிகளாக கொண்டாடி ஆடும் தைரியம் எந்த வரலாற்று ஆசிரியருக்கும் இன்னும் வரவில்லை. ஆதித் தொழில்களில் ஒன்றான விவசாயத்தை, தம் வாழ்வோடு பின்னிக் கொண்ட இவர்களில் இன்னும் மீண்டெழாமல் எஞ்சியிருப்பவர்களாக ஆபிரிக்க கறுப்பினர்கள் சுட்டிக் காட்டப்படுகின்றனர். உடல் உழைப்பினை பிரதான மூலதனமாகக் கொண்ட பூமித் தாயின் பூர்விக புத்திரர்கள் யாவரினதும் மேனி நிறம் "மெலனின்" வஞ்சகம் நிறைந்த கறுப்பு- என்று உண்மையை அதக்கிப் பூசுகின்றது உயிரியல் விஞ்ஞானம் உலகுக்கு உணவிடும் உழவுத் தொழிலை கண்டங்களாகப் பிரித்து தாமுண்டு தன் பாடுண்டென்று வாழ்ந்தவர்களை பின்னால் வந்த 'கொம்பு'கள் மறைத்தெழுந்து அடிமை கண்டது தான் நாம் அனைவரும் அறிந்ததொன்றே.

ஐரோப்பிய வந்தேறிகளினால் வளம் சுரண்டப்பட்ட அமெரிக்காவின் பூர்விக செவ்விந்தியர்களும், ஆஸ்திரேலியாவின் அபார் ஜீனிஸ்களும் தமக்கான எதிர்ப்பினை காட்டிக்கொள்ள முடியாத மனித வலு வறுமையும், பொருளாதார வெற்றிடமும் வாழிட பரம்பல் குறைவும் கொண்ட சமூகங்களாக தம்மைத் தாமே ஆக்கிக் கொண்டதன் விளைவு, இன்றை திகதியில், விரலிட்டு எண்ணிவிடக் கூடிய ஆட்தொகையில் தத்தமது எஜமானர்களால் எறியப்படும் ஜீவனாம்சத்தில் பிழைப்பு நடாத்தும் கண்காட்சி மனிதர்களாக வீழ்ந்து வாழ வைத்திருக்கின்றது. ஆனால் தொழில்நுட்பம் கூட கடந்து போகத் துடிக்கின்ற விஞ்ஞானத்தின் எழுச்சிப் புள்ளியில் நின்றுகொண்டிருக்கின்ற உலகத்தில் அன்றைய ஆக்கிரமிப்புக்களுக்கு சற்றும் நிகர் குறையாத நில அபகரிப்பினை எதிர்த்து குரல் எழுப்பும் வலிமையை ஈழத் தமிழன் சூப்புக்கேனும் நாவெடுக்காமல் வாழவிருப்பது வியப்பில்லையா? துப்பாக்கிகளுக்கு முன்னால் நடுங்கி ஒழித்துக் கொள்கின்ற 'பயம்' தான் இன்றும் ஐம்பது ஆண்டுகள் கழிந்து வருகின்ற தமிழ் சந்ததிக்கு எம்மால் உரித்தாக கொடுக்கப்படப்போகும் அடிமை வாழ்வுக்கான முதல் துளி என்பதை எப்படி ஜீரணிக்க முடிகிறது எம்மால்?

பாதிக்குப் பாதி சிங்களக் குடியேற்றங்களால் கற்பனை செய்யப்படுகின்ற வரும் எதிர்காலத்தின் பழிச் சொற்களின் பட்டியலில், 'ஆளுநரையோ' 'அமைச்சரையோ', 'அதிகாரிகளையோ' திட்டித் தீர்க்கப் போவதில்லை எம் விழுதுகள் - மாறாத ஐம் புலன்களினாலும் சடப்பொருளாக உறைந்து நின்ற ஒவ்வொரு தமிழர்களையும் கேட்கக் காது கூசும் வார்த்தைகளால் அர்ச்சிக்கக் காத்துக் கிடக்கின்றது 'இருள் மயமான' எம் எதிர் காலம்.

வலி. வடக்கில் பாதுகாப்பு வேலிகளின் முன்னகர்வு, 'நிரந்தர சொகுசுக் கட்டடங்களாக மாற்றப்படும் இராணுவ முகாம்கள்', 'நாவற்குழியில்' அரச காணிகளில் சிங்கள மக்களுக்கான வீடமைப்புத் திட்டம்', 'மாத்தளனில் திடீரென வந்திறங்கிய சிங்கள மீனவர்கள்' இவையெல்லாம் அண்மைய நாள்களில் இலங்கையில் இருந்து புறப்படும் ஊடகங்களின் முக்கிய செய்திகள் பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள், இணையத்தளங்கள் எனப் பன்முகப்படுத்தப்பட்ட ஊடகங்களின் வாயிலாக வெளிவருகின்ற இத்தகவல்கள் போதுமான ஆதாரங்களா? அதே இலங்கையிலிருந்து புறப்படுகின்ற ஊடகங்களில் பாதிக்கு மேற்பட்ட எண்ணிக்கையிலானவை இதேசெய்திகளை "அரச அபிவிருத்திப்" பணிகளாக முரசறைகின்றன. அவற்றுள் பல்வேறு தமிழ் ஊடகங்களும் அடக்கம். இருக்க, 'நாவற்குழி' தமிழர் பிரதேசம் என்பதையும், அங்கு அத்துமீறியவர்கள் பெரும்பான்மை இனத்தவர்கள் என்பதையும் தேடிக் கண்டுபிடித்து நீதி தரக் காத்திருக்கின்றது. சர்வதேசம் என்று நம்புவதில் என்ன பலன் கிட்டப் போகின்றது? வெகுவாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மக்கள் எண்ணங்கள் என்ற பிரதிபலிப்பை விம்பப்படுத்தி விடாத செய்திகளுக்காக எவருமே இலங்கை அரசையும், ஆள்வோரையும் கேள்வி கேட்கப் போவதில்லை என்ற உண்மையை நம்பக் கடினமேயாயினும், நம்பியே ஆக வேண்டும். ஆனால் மேற்கூறிய வலிந்த அத்துமீறல்களுக்கு எதிராக "சாமானியர்களால் முன்னெடுக்கப்படுகின்ற எதிர்ப்பு நடவடிக்கைகள்' என்கின்ற தொனிப்பினால் பிரதானப்படுத்தப்படுகின்ற தகவல்களும், தரவுகளும், ஒலிவடிவங்களும், புகைப்படங்களும் காணொலிகளும் உலகத்தின் பார்வையை எம்மை நோக்கி ஈர்க்கச் செய்யும் என்ற யதார்த்தத்தை அவ்வளவு சுலபத்தில் ஏற்றுக் கொள்ள எம்மில் யாருமே தயாரில்லை.

கடந்தபோன மூன்று வருடங்களில் மூக்குடைந்த தமிழர்களின் உடல் மொழி உலகுக்கு சொல்ல வருவது என்ன?' ஒன்று கூடல் ' என்பது ஆலயத்திருவிழாக்களோடு வீதிகளை குறைத்து நெருங்குவதாகவும், 'கூட்டம்' என்பது வீடமைப்புக்கும், நியமனத்துக்கும், ஆள்பிடிக்கும் வரும் படிப் பொறியாகவும், ' எழுச்சி', 'புரட்சி' எல்லாம் எழுத்துக்களில் மட்டும் வந்து போகின்றவையாகவும், 'ஹர்த்தால்' போன்ற இயல்பு வாழ்வின் முடக்குகைகள் முன்னாள் சம்பவங்களாகவும் மாறிப் போனவை தானே? மேற்படி எவ்வழிகளிலேனும் தமது "அன்றாடக் கருமங்கள் பாதிக்கப்படாமல் கொண்டு நடத்துகின்ற மக்களிடம் பிரச்சினை உள்ளது" என்று சிறுபான்மையாக தமிழ் மக்களை பிரதிபலிக்கின்ற ஊடகங்கள் சொல்வதை அப்படியே நம்பி உலக தேசங்கள் எமக்கு நீதி பெற்றுத் தருவதற்கு முண்டியடிக்கும் என இலவு காத்திருப்பது எத்துணை

(16 ஆம் பக்கம் பார்க்க)

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உயர்ந்த எண்ணங்களை செயற்படுத்துவீர்கள். வெளிப்புறம் இனிமையாகப் பேசி அதிக மதிப்பு, மரியாதை பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு எளிதில் பூர்த்தியாகும். உபரி பணவருமானம் கிடைக்கும்.

**இடபம்:** நீங்கள் நன்கு அறிமுகம் இல்லாதவர்களுக்கு புத்திமதி, ஆலோசனை சொல்ல வேண்டாம். தொழில் வளர்ச்சிப் பணி நிறைவேற்றுவதில் தாமதம் இருக்கும். பணச்செலவு அதிகரிக்கும். விலை மதிப்புள்ள பொருள் களைமுறையுடன் பயன்படுத்தவும்.

**மிதுனம்:** உங்கள் நண்பருக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் தாமதம் உருவாகலாம். தொடர்பில்லாத பணியில் ஈடுபட வேண்டாம். தொழில்,வியாபார நடைமுறையில் போட்டி அதிகரிக்கும்.

**கடகம்:** உங்கள் செயலில் சாதனை நிகழ்த்துகின்ற எண்ணத்துடன் செயற்படுவீர்கள். முயற்சி சிறந்து நல்ல பலனை பெற்றுத்தரும். தொழில், வியாபார வகையில் அபிவிருத்திப் பணிபுரிவீர்கள். எதிர்பார்ப்பை விட உற்பத்தி விற்பனை செழிக்கும்.

**சிங்கம்:** உங்கள் மனசாட்சிக்கு கூடுதல் மதிப்பு தருவீர்கள். நண்பர், உறவினருக்கு இயன்றளவில் உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை திருப்திகரமாகும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும்.

**கன்னி:** உங்கள் செயலை சிலர் பாராட்டிப் பேச வேண்டும் என்கிற எண்ணம் கொள்வீர்கள். செயல்களில் தற்காப்பு நடைமுறை பின்பற்ற வேண்டும். கூடுதல் முயற்சியினால் தொழில், வியாபார நடைமுறை சீராக இருக்கும்.

### நாளை

தை -30 செவ்வாய்க்கிழமை 12.02.2013
திதி: துதியை மு.ப 11.43 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி பி.இ 05.19 வரை
சுபநேரம்: 11.04- 12.34 வரை
ராகுகாலம்: 03.34- 05.04 வரை

**துலாம்:** உங்கள் மனதில் தன்மான சிந்தனை அதிகரிக்கும். நிலுவைப்பணியை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். உற்பத்தி, விற்பனையில் நல்ல மாற்றம் ஏற்படும். பணியாளர், சலுகைப்பயன் பெறுவதில் தாமதம் இருக்கும்.

**விருச்சிகம்:** உங்களின் கடந்தகால இனிய நினைவுகளைப் பற்றி சிந்திப்பீர்கள். வாழ்வில் வளம் பெற புதிய வழிவகை உருவாகும். தொழில், வியாபாரம் செழிக்க நண்பரால் உதவி உண்டு. அளவான பணவரவு கிடைக்கும்.

**தனுசு:** உங்கள் மனதில் சஞ்சலம் தோன்றி பின்னர் சரியாகும். நண்பர், உறவினரின் செயல்களில் குறை காண வேண்டாம். தொழில், வியாபார நடைமுறை தகுந்த முறையில் பணிபுரிவது அவசியமாகும்.

**மகரம்:** உங்களின் தகுதி, திறமையை நன்கு பயன்படுத்துவீர்கள். சமூகத்தில் கூடுதல் மதிப்பு, மரியாதை கிடைக்கும். ஆன்மிக சுற்றுலா சென்றுவரத் திட்டமிடுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதத்தைத் தவிர்க்கவும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**கும்பம்:** உங்களுக்கு அறிமுகம் இல்லாத எவருடனும் பொது விடயம் குறித்துப்பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் நிலுவைப்பணி நிறைவேற்ற மாற்று உபாயம் பயன்படுத்துவீர்கள். பணச் செலவு அதிகரிக்கும்.

**மீனம்:** எதிர்வரும் மாறுபட்ட சூழ்நிலையை திறம்பட சரிசெய்வீர்கள். வாழ்வில் கூடுதல் நன்மை உருவாகும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். வியத்தகு அளவில் பணப்பரிவர்த்தனை முன்னேற்றமாகும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | | 8 | 7 | | 1 | |
| | 2 | 8 | 1 | | 9 | 3 | | |
| 1 | | | | | | | 5 | 8 |
| | | 2 | 8 | | 6 | | | 7 |
| | | | 7 | 3 | 2 | | | |
| 4 | | | 5 | | 1 | 8 | | |
| 6 | 4 | | | | | | | 1 |
| | | 3 | 9 | | 8 | 4 | 7 | |
| | 1 | | 6 | 7 | | | 2 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 2 | 3 | 9 | 5 | 4 | 6 | 7 | 1 |
| 9 | 1 | 4 | 7 | 3 | 6 | 2 | 5 | 8 |
| 5 | 7 | 6 | 1 | 2 | 8 | 3 | 4 | 9 |
| 7 | 8 | 2 | 3 | 4 | 1 | 9 | 6 | 5 |
| 4 | 6 | 5 | 8 | 7 | 9 | 1 | 3 | 2 |
| 1 | 3 | 9 | 2 | 6 | 5 | 7 | 8 | 4 |
| 2 | 4 | 8 | 6 | 9 | 3 | 5 | 1 | 7 |
| 3 | 9 | 1 | 5 | 8 | 7 | 4 | 2 | 6 |
| 6 | 5 | 7 | 4 | 1 | 2 | 8 | 9 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

தென்மராட்சி கொடிகாமம் மண்ணில்.
A9 வீதியில் புதியதோர் உதயம்.....



பயனியர் கவின் சேவிஸ் ஸ்ரேசன்
கண்டி வீதி, கொடிகாமத்தில் எம்மால் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட
பயனியர் கவின் சேவிஸ் ஸ்ரேசன்
எனும் சுத்திகரிப்பு நிலையம் இன்று (11.02.2013) திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.
சகலவிதமான வாகனங்களும் வாடிக்கையாளரின் மனம் கவரும் வகையில் திருப்திகரமாக சுத்திகரிப்புச் செய்து கொடுக்கப்படும்.
அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்.
உரிமையாளர் இ.மதுரன் (குட்டி) T.P. 0770774608
(சி/232) (2-6-9)

## பெண்களைப் பாதுகாக்க பொலிஸ் கண்காணிப்பு


கொழும்பு,பெப்.11

கொழும்பில் இரவு நேரங்களில் பயணிக்கும் பெண்களைப் பாதுகாக்கும் பொருட்டு பொலிஸ் கண்காணிப்புகள் அதிகரிக்கப்படவுள்ளன.

அண்மையில் ஓட்டோ ஒன்றில் இனந்தெரியாதோர் பெண் ஒருவரைக் கடத்திச்சென்று வன்புணர்வுக்கு உட்படுத்திய சம்பவத்தை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் இரவு நேரங்களில் ஓட்டோக்களின் நடமாட்டங்களை அவதானிக்கவுள்ளனர். பொதுவாக பெண்கள் பணியாற்றும் இடங்களில் பொலிஸ் கண்காணிப்புகள் தீவிரப்படுத்தப்படவுள்ளன.

இதேவேளை ஓட்டோக்களிலேயே அதிகளவு சம்பவங்கள் பெண்களுக்கு எதிராக இடம்பெறுகின்றன என்று பொலிஸ் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது. 2012 ஆம் ஆண்டு இலங்கையில் 1920 வன்புணர்வு சம்பவங்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச)



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அவரது பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ, இரு புதல்வர்கள் ஆகியோர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திருப்பதி வெங்கடாசலப் பெருமானை தரிசித்த பின் கோவில் அறங்காவலர் உறுப்பினர்களுடன் இணைந்து எடுத்துக்கொண்ட படம் இது.

## மரணதண்டனைக் கைதிகளுக்கு நோய்கள்

கொழும்பு,பெப்.11

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள 200 கைதிகள் பல்வேறுபட்ட நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 304 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 200 பேர் நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கண்டி போகம்பரை, வெலிக்கடை போன்ற சிறைகளில் இந்தக் கைதிகள் தண்டனை அனுபவித்து வருகின்றனர். கண் பார்வையின்மை, இருதய நோய்கள், நீரிழிவு, மன அழுத்தம் உள்ளிட்ட பல்வேறு நோய்களால் அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நோய்களால் பாதிக்கப்பட்டவர்களில் இருவர் பெண்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)

## நிறுத்தப்பட்ட ஜி.எஸ்.பி. வரிக்கு அரசு மீண்டும் விண்ணப்பிக்கும்

கொழும்பு,பெப்.11

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகைக்காக இலங்கை மீண்டும் விண்ணப்பிக்கவுள்ளது.

அதற்கான ஆயத்தங்களை இலங்கை அரசு மேற்கொண்டு வருகிறது. ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை 2010 ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றியத்தால் திரும்பப் பெறப்பட்டது.

அதன் காரணமாக 1.5 பில்லியன் டொலர் பெறுமதியான சலுகையை இலங்கை இழந்தது. அதனையடுத்து இலங்கையில் ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டதுடன், வேலையற்றோர் வீதமும் அதிகரித்துள்ளது.

இந்த நிலையிலேயே இலங்கை அரசு ஜி.எஸ்.பி பிளஸ் சலுகைக்காக விண்ணப்பிக்கவுள்ளது. (ச)

# ‘வெளிநாட்டில் வாழும் இலங்கையர்’ “இரட்டைப் பிரஜாவுரிமை” பெயர் மாறுகிறது

### விரைவில் நடைமுறைக்குவரும் என்கிறார் குடிவரவு–குடியகல்வு கட்டுப்பாட்டாளர்



கொழும்பு,பெப்.11

இரட்டை பிரஜாவுரிமை என்ற பெயர் மாற்றப்பட்டு ''வெளிநாட்டில் வாழும் இலங்கையர் என்ற பெயரில் இரட்டை'' பிரஜாவுரிமை வழங்கும் திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும்.

இவ்வாறு குடிவரவு- குடியகல்வு திணைக்களத்தின் பிரதான கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரேரா தெரிவித்தார்.

இந்தத் திட்டம் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என்று அவர் கூறினார்.

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட புதிய நடைமுறை தொடர்பான சட்டவரைவு அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

குடிவரவு ,பிரஜாவுரிமை ஆகியன தொடர்பாக இரண்டு விடயங்கள் இந்தச் சட்ட வரைவுக்குள் இணைக்கப்பட்டுள்ளன. சட்டவரைஞர் திணைக்களத்தால் முன் வைக்கப்பட்ட இந்தத் திருத்தங்கள் தொடர்பில், குரவரவு - குடியகல்வு .திணைக்களம் இணங்காத காரணத்தால் இந்தத் திருத்தங்கள் இரண்டையும் ஏற்கனவே பெறப்பட்ட அமைச்சரவை அங்கீகாரத்துக்கு உட்பட்ட விதத்தில் திருத்தித் தருமாறு சட்டவரைஞர் திணைக்களத்திடம் கோரப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

சட்டவரைஞர் திணைக்களம் திருத்தங்களை முன் வைத்ததுடன் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கும் புதிய நடைமுறை நடைமுறைப்படுத்தப்படும் என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ச)

## வெளிநாட்டு கப்பல்கள் மூலம் கொழும்புக்கு வந்துசேரும் எலிகள்

கொழும்பு,பெப்.11

வெளிநாட்டுக் கப்பல்களிலிருந்து கொழும்புக்கு எலிகள் பெரும் எண்ணிக்கையில் வந்து சேர்ந்து விடுகின்றன என்று கொழும்பு மாநகர சபை வைத்தியர் காரியவசம் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொழும்பில் எலிகளைக் கட்டுப்படுத்தும் செயன்முறை மந்த நிலையை அடைந்துள்ளமையால் அவை தொடர்ந்தும் அச்சுறுத்தலாகவே இருந்து வருகின்றன.

எலி மருந்துகளாக உபயோகிக்கும் இரசாயனங்களை காலத்துக்குக் காலம் மாற்ற வேண்டியுள்ளது. அதனால்அவற்றின் விலையேற்றம், தொழிலாளர் பிரச்சினை ஆகியன காரணமாக எலிகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது மந்த கதியை அடைந்துள்ளன.

கொழும்பில் எலிகள் பெருகுவதற்கான முக்கிய இடமாக கொழும்புத் துறைமுகம் கருதப்படுகிறது. வெளிநாடுகளிலிருந்து வரும் கப்பல்கள் மூலமாகவே வெவ்வேறு நாடுகளிலிருந்து எலிகள் வந்து சேர்கின்றன.

துறைமுகத்தில் கப்பலொன்று நங்கூரமிடப்பட்டதும் அதற்குள்ளிருந்து பெரும் எண்ணிக்கையான எலிகள் வெளியேறுகின்றன. அவற்றுக்குத் தேவையான போதியளவு உணவு புறக்கோட்டை சந்தைப் பகுதியில் கிடைக்கிறது.

இந்தப் பிரதேசங்களை மையமாகக் கொண்டே எலிகள் கொழும்பின் வடக்கு, தெற்கு பகுதிகளை நோக்கி நகர்கின்றன.

எனவே புறக்கோட்டை பகுதிகளில் எலிகளை கட்டுப்படுத்துவதன் மூலம் கொழும்பில் அதன் எண்ணிக்கையைக் குறைக்க முடியும்.-என்றார்.

இதேவேளை கடந்த வருடம் கொழும்பில் ஏழு பேர் எலிக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## கஞ்சா சேனை சிக்கியது

சுமார் 10 கோடி ரூபா பெறுமதியானகஞ்சாசேனை பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

உடவலவ பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேசத்துக்கு அருகிலேயே கஞ்சா பயிரிடப்பட்டிருந்தது. இந்தப் பயிர்ச் செய்கையை பொலிஸார் அழித்துள்ளனர். நேற்றுமுன் தினம் சனிக்கிழமை மாலை மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது இந்தப் பிரதேசம் இனங்காணப்பட்டுள்ளது.

இந்தத் தேடுதல் நடவடிக்கையில் 180 பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## தொண்டர் ஆசிரியர் சேவையில் பட்டதாரிகளை இணைக்க தீர்மானம்

கொழும்பு,பெப்.11

தொண்டர் ஆசிரியர்களாக மேலும் சில பட்டதாரிகளைச் சேவையில் இணைத்துக்கொள்ள மேல் மாகாண சபை தீர்மானித்துள்ளது.

2011 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசியர் சேவைக்கான போட்டிப் பரீட்சையில் 100 - 102 இற்கு இடைப்பட்ட புள்ளிகளைப் பெற்றவர்களே தொண்டர் ஆசிரியர் சேவையில் இணைத் துக்கொள்ளப்படவுள்ளனர் என்று மேல் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஜயந்தி விஜேதுங்க தெரிவித்தார்.

சில மாதங்களின் பின்னர் அவர்களுக்கு ஆசிரியர் சேவைக்கான நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது என்று அவர் கூறினார்.

இதேவேளை நாளை செவ்வாய்க்கிழமை 500 பட்டதாரிகளுக்கு மேல் மாகாண ஆசிரியர் சேவை யில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## உலமா சபைக்கு எதிராக பொதுபலசேனா வழக்கு

ஹலால் சான்றிதழ் குறித்து விசாரணை நடத்தியார் அந்தச் சான்றிதழை வழங்கு வது என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும்

கொழும்பு,பெப்.11

அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா சபைக்கு எதிராக பொதுபலசேனா அமைப்பு வழக்குத் தாக்கல் செய்யவுள்ளது.

ஹலால் சான்றிதழ் பிரச்சினை தொடர்பிலேயே இந்த வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது.

ஹலால் சான்றிதழ் ஒரு வியாபாரமாக மேற்கொள்ளப்படுகிறது என்று பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் கலகொடட்டே ஞானசாரதேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஹலால் சான்றிதழ் குறித்து விசாரணை நடத்தி யார் அந்தச் சான்றிதழை வழங்குவது என்பதை கண்டறிய வேண்டும் என்று தெரிவித்தார். (ச)

## மின்னல் தாக்கி சிறைச்சாலை அதிகாரி காயம்

கொழும்பு,பெப்.11

வெலிகடை சிறைச்சாலை காவலரண் மீது மின்னல் தாக்கியதில் சிறைச்சாலை அதி காரி ஒருவர் காயமடைந்துள்ளார்.

தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் அவரின் உடல்நிலை தற்போது தேறி வருவதாக வைத்தியசாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

காவலரண் மீது நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 7 மணிக்கு மின்னல் தாக்கம் ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் கூறினர். (ச)

## வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்த முயற்சி

### ரவிநாத் ஆரியசிங்க குற்றச்சாட்டு

**வெளிநாடுகளில் வாழும் சில இலங்கையர்கள் நாட்டின் நன்மதிப்புக்கு களங்கம் ஏற்படுத்தக் கூடிய பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.**



கொழும்பு,பெப்.11

வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் சில இலங்கையர்கள் நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படுத்த முயற்சித்து வருகின்றனர் என்று ஐக்கிய நாடுகள் சபையின் ஜெனிவாவுக் கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரிய சிங்க குற்றம்சாட்டியுள்ளார்.

ஜெனீவாவில் நடைபெற்ற சுதந்திரதின நிகழ்வுகளில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் உள்விவகாரங்களில் வெளிநாடுகள் தலையீடு செய்யும் வகையில் புலம்பெயர்ந்து வாழ்வோர் நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது.

வெளிநாடுகளில் வாழும் சில இலங்கையர்கள் நாட்டின் நன்மதிப்புக்குக் களங்கம் ஏற்படுத்தக் கூடிய பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் உண்மையான விடயங்களை மறைத்து போலிப் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

உள்நாட்டு முரண்பாடுகள் சர்வதேச அரங்கில் நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தக் கூடிய வகையில் அமையக்கூடாது.

உள்நாட்டு முரண்பாடுகள் நாட்டின் வெளியுறவுக் கொள்கைகளில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது.-என்றார். (ச)

## கால் நழுவும்.....

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முட்டாள்த் தனம்? கணத்தாமதமின்றி உலகத்தின் ஒவ்வொரு தனி மனிதனும் ஒட்டுமொத்த நிலப்பரப்புகளையும் கண்காணிக்கும் வசதி படைத்த தகவல் தொழில் நுட்பத்தின் வானவெளியின் கீழ் வாழ்ந்து கொண்டு, ஆயுத அடக்குமுறைக்கும், அரசியல் பழிவாங்கல்களுக்கும் அஞ்சுகின்ற 'பேதமையை' யாழ்ப்பாணத்தமிழர்கள் உள்ளிட்ட ஈழத்தமிழர்கள் யாவரினதும், இன்றைய முகமூடிகளாக இறுக்கிக் கட்டிவிடத் துடிப்பவர்கள் எவரையும் மன்னிக்காது எம் " நாளை".

உணவுக்கு மட்டும் வாய்திறப்பவர்களாகவும் தலை சொறிய மட்டும் கைதூக்குபவர்களாகவும், மரத்துப் போகக் கூடாதென்பதற்காய் கால் நீட்டுபவர்களாகவும் படிப்படியாக மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்ற மறுபக்கத்தில், தமது தேவைகளை எவ்வித எதிர்ப்புமின்றி நிகழ்த்தி முடிக்கக் காத்திருப்பவர்களின் நிகழ்ச்சித் திட்டத்தில் நாங்களும் " தோன்றாப்" பங்காளர்களாகவே கணிக்கப்படும் அபாயம் காத்திருப்பதைக் கண்டு, விழிமின் ! எழுமின் ! " கிளைகளை நம்பி அமர்வதில்லை பறவைகள் , தன் சிறகுகளை ........" பெயர் மறந்து போன கவிஞனொருவனின் வார்த்தைகளில் துளித் துளியாய் வடிந்து, ஒவ்வொருவரினதும் உள்ளங்கைகளில் உறைந்து இறைஞ்சுகின்றது. எம் " இனத்தின் இருப்பு" ! ★

## செம்மணியில் பொதுக்கூட்டம் எதிர்வரும் 24

யாழ்ப்பாணம், பெப்.11

செம்மணி இந்து மயான அபிவிருத்திச் சபையின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு செம்மணி இந்து மயான மண்டபத்தில் தலைவர் வி.இலட்சுமிகாந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது. நேற்று கூட்டம் இடம் பெறவுள்ளது என்று தவறாகச் செய்தி வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இன்று ஸ்கானிங் நடைபெறாது

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இன்று திங்கட்கிழமை நடைபெறவிருந்த ஸ்கானிங் பரிசோதனைக் கிளினிக் தவிர்க்க முடியாத காரணத்தால் நடைபெறமாட்டாது எனவும் இந்தக் கிளினிக் எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டது. (ம-9)

☎ 0215671111
advt@uthayan.com
உதயன்

சேவை நலன் பாராட்டு
திருமதி கமலாதேவி ஜெனரட்ணசிங்கம்

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த இருபத்தொன்பது வருடங்களாக தாதிய உத்தியோகத்தராக சிறப்பான சேவையாற்றி கடந்த 28.01.2013 ஓய்வு பெற்றுச் சென்ற திருமதி. கமலாதேவி ஜெனரட்ணசிங்கம் அவர்களை பல செல்வங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ மனதார வாழ்த்துகின்றோம்.
தாதியர் நலன்புரி சங்கம்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

K.K.J Furniture Show room
மீண்டும் பிரமாண்டமாக....
இல.11, ஐந்து சந்தி, யாழ்ப்பாணத்தை தலைமையகமாகக் கொண்ட எமது நிறுவனம் இன்று 11.02.2013 முதல் தனது காட்சியறையை மீண்டும் இல.391, K.K.S வீதி, யாழ்ப்பாணம் எனும் அதே இடத்தில் பிரமாண்டமாக ஆரம்பிக்கின்றது என்பதை வாடிக்கையாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

தகவல் - உரிமையாளர்
T.P- 077 9037203, 021 321 8501

ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி
அன்னை மடியில்
19.03.1985
ஆண்டவன் அடியில்
11.02.2007

செல்வன் பத்மகாந்தன் சஞ்ஜித்
(மாணவன்- யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி, S.S.M பொறியியல் கல்லூரி, சேலம்- இந்தியா)
நீங்காத துயரினிலே எம்மை நிறுத்தி விட்டு
நீ மறைந்து சென்றாலும், அணையாத தீபமாக
எம் மனதில் என்றும் நீ சுடர் விடுகின்றாய்!
அன்பு தவழும் உன் திருவுருவம் எம் நினைவில்
என்றும் வாட்டி வதைக்குதைய்யா!!
ஆசைமகன் என்று அன்புடனே அரவணைத்தோம்
ஆண்டவனோ தனது அடிக்கு அரவணைத்து அழைத்ததேனோ?
என்றும் உன் நினைவில் வாழும்
குடும்பத்தினர்.
'புனித வாசம்', மீசாலை கிழக்கு, மீசாலை.
NO. 5-1/3, 42 ஆவது லேன், கொழும்பு-06.

CeyLabs Solutions (Pvt) Ltd
Department of Engineering Solutions
204,Brown Road,Jaffna.

- உங்களது அலுவலகங்கள்/நிறுவனங்கள்/வீடுகள் புதுப்பிக்கப்பட அல்லது சீர்செய்யப்பட வேண்டுமா?
- உங்களது வீட்டில் ஏதேனும் வைபவங்களுக்காக அவசரமாகத் திருத்தல் வேலைகள் செய்யப்பட வேண்டுமா?
- உங்களது வீடுகளில்/நிறுவனங்களில் சிறிய தொழில்நுட்ப கோளாறு ஏதேனும் இருந்தால் உடனே சரிசெய்ய வேண்டுமா?
- உங்களது நிறுவனங்கள்/அலுவலகங்கள் உச்ச வினைத்திறனுடன் சரியான கால இடைவெளிகளில் குறைந்த செலவுடன் பராமரிக்கப்பட வேண்டுமா?
- குறைந்த செலவில் வினைத்திறனான வீடுகள் கட்டித்தர வேண்டுமா?
- உங்களது நிறுவனத்திலோ/அலுவலகத்திலோ/வீட்டிலோ ஏதேனும் அமைப்பில் மாற்றங்கள் (Alterations) செய்யப்பட வேண்டுமா?
- குறைந்த செலவுடன் பாதுகாப்புக் கண்காணிப்புக் கருவிகள் பொருத்தி உங்களது வீட்டையோ/நிறுவனத்தையோ எங்கிருந்தும் கண்காணிக்கும் வசதி வேண்டுமா?

அழைப்பு எடுத்தவுடன் உங்களிற்குச் சேவை செய்ய, தொழில்சார் நெறிமுறைகளைக் கடைப்பிடித்து நியாயமான செலவுடன் உங்கள் தேவைகள் நிறைவேற்றப்பட நீங்கள் அழைக்க வேண்டிய தொலைபேசி இல 077 011 7707

பின்வரும் சேவைகள் எம்மால் தாமதமின்றி உங்களிற்கு அசௌகரியங்கள் ஏற்படாதவாறு சிறப்புடன் செய்து தரப்படும்.

1) மின் இணைப்புச் சேவைகள் (Electrical wiring Services)
2) வளி-பதனி இணைப்புச் சேவைகள் (Air-Conditioning Services)
3) குழாய்கள், நீர்ப்பம்பி, கொமட் பொருத்தும் சேவை (Plumbing Services)
4) வலையமைப்பு சேவைகள் (Networking Services)
5) கணினி திருத்தல் சேவைகள் (Computer repairing Services)
6) மாபிள், ரைல்ஸ் பதித்தல் சேவைகள் (Placing floor & wall tiles services)
7) கட்டட நிர்மாண சேவைகள் (Building Construction)
8) வர்ணப்பூச்சுச் சேவைகள் (Painting Services)
9) CCTV கமரா இணைப்புக்கள் (CCTV camera Installation Services)

நாங்கள் நிறுவல் (Installation), பராமரித்தல் (Maintenance), திருத்துதல் (Repairing), சீரமைப்பு (Renovation), மற்றும் புதுப்பித்தல் (Refurbishment) போன்ற வகைகளில் மேற்குறிப்பிட்ட அனைத்துச் சேவைகளும் சிறப்பாக செய்து தருவோம்.
நீங்கள் எந்நேரமும் எங்களை அழைக்கலாம். அழைக்க வேண்டிய தொலைபேசி இல. 222 1807, 077 011 7707
(சி/29375) (45.6.7)

# கல்முனையில் டெங்கு தீவிரம்; 3 வார காலத்தில் 21 பேர் பாதிப்பு

## கட்டுப்படுத்தும் நடவடிக்கை தீவிரம்

கல்முனை,பெப்.11

கடந்த மூன்று வார காலப் பகுதியில் கல்முனை பிரதேசத்தில் 21 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இந்தப் பிரதேசத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்று சுகாதார அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் பெய்த அடைமழையைத் தொடர்ந்து கல்முனை பிரதேசத்தில் டெங்கு நோயாளர்கள் தொடர்ந்தும் இனங்காணப்பட்டு வருகின்றனர்.

அதனால் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் குடியிருப்பற்ற வெற்றுக் காணிகள், குடியிருப்பு நிலங்கள் ஆகியவற்றை சோதனையிடும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குடியிருப்புகளற்ற தனியாருக்குச் சொந்தமான வெற்றுக் காணிகளிலுள்ள குப்பைகள், வெற்றுப் பேணிகள் உபகரணங்களில் தேங்கிநிற்கும் தண்ணீர் ஆகியவை டெங்கு நோய் பரவக் காரணமாக அமைகின்றன.

இவ்வாறு கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி ஏ.எல்.எம்.ரபீஸ் தெரிவித்தார்.

வெற்றுக்காணிகளையும், குடியிருப்பு நிலங்களையும் சோதனையிடும் வேலைத் திட்டத்தை தற்போது நடைமுறைப்படுத்தி வருகிறோம். அத்தோடு காணி சொந்தக்காரர்களுக்கும் அறிவித்தல்களை விடுத்துள்ளோம் என்று அவர் குறிப்பிட்டார்.

சோதனையின்போது அங்கு டெங்கு நோய் தோன்றும் அபாயம் காணப்படுமாயின், மூன்று நாள்களுக்குள் காணிகள் சுத்திகரிக்கப்பட்டு சீர்செய்யப்படவேண்டும். அவ்வாறு சீர்செய்யப்படாவிடின் குறிப்பிட்ட காணிச் சொந்தக்காரர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்ற அறிவித்தலையும் விடுத்து வருகின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)



டெங்குநோயைக் கட்டுப்படுத்த கிண்ணியா நகரசபை ஊழியர்கள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பழைய வைத்தியசாலையில் சிரமதானத்தில் ஈடுபட்டனர்.

# விபத்தில் ஒருவர் சாவு

சம்மாந்துறை,பெப்.11

சம்மாந்துறை - கல்முனை பிரதான வீதியிலுள்ள மாவடிப்பள்ளி பாலத்தடியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் மலையடிக்கிராமம், முதலாம் பிரிவைச் சேர்ந்த முகம்மதலியார் அப்துல் சலாம் (வயது-42) என்ற நபரே உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகிய போது ஏற்பட்ட பலத்த காயங்களினாலேயே அவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் கூறினர்.

சடலம் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த ஆதார வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ச)

# பிரச்சினைகளை ஏற்படுத்த ஹலாலில் ஒன்றுமே இல்லை

## கம்பளையில் பிரதமர் தெரிவிப்பு

கம்பளை,பெப்.11

ஹலாலை பூதாகரமாக்கி அதிலிருந்து பிரச்சினைகளை ஏற்படுத்துவதற்கு ஹலாலில் ஒன்றுமே இல்லை. ஹலாலான உணவு என்பது சுத்தமான உணவாகும் என்று பிரதமர் டி.எம். ஜயரட்ண தெரிவித்தார்.

கம்பளை இல்லவதுறை ரஹ்மானிய்யா முஸ்லிம் வித்தியாலயத்தின் புதிய கட்டடத் தொகுதியின் திறப்பு விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் இன, மதங்கள் மூலமாக இனங்களுக்கு இடையில் நிலவும் புரிந்துணர்வை ஒழிக்க முற்படும் சக்திகளுக்கு ஜனாதிபதி ஒருபோதும் இடமளிக்க மாட்டார்.

போரின் பின்னர் இனங்களுக்கு இடையில் புரிந்துணர்வு ஏற்பட்டு வருகின்றது. சமாதானம் கட்டியெழுப்பப்



பட்டுள்ளது. எனவே இந்தச் சந்தர்ப்பத்தில் இனங்களுக்கு மத்தியில் பகைமைகளை வளர்க்க இடமளிக்க முடியாது.

முரண்பாடுகளை உருவாக்குவதற்கு சிறு சக்திகள் முற்படுகின்றன. நாம் முஸ்லிம் சமூகத்தை சந்தேகக் கண் கொண்டு நோக்கக் கூடாது. சர்வதேசத்தின் முன்னால் இலங்கையைத் தண்டிக்க சில நாடுகள் முனைப்புடன் செயற்படுகின்றன.

அரசு வடக்கு,கிழக்கு உட்பட சகல பகுதிகளிலும் கோயில்களை நிர்மாணிக்கவும், பள்ளிவாசல்களைக் கட்டவும் உதவியுள்ளது- என்றார். (ச)

# மட்டு.இறால் உற்பத்தியை ஊக்குவிக்க நடவடிக்கை

## முகாமைத்துவ திட்டங்களும் அதிகாரிகளால் வகுப்பு


மட்டக்களப்பு,பெப்.11

போர் மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட இறால் உற்பத்தியை மீளக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு மாவட்டத்தில் இறால் வளர்ப்பை ஊக்குவிக்க கடற்றொழில் நீரியல்வள அமைச்சு விசேட திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இந்தத் திட்டம் உலக வங்கியின் சுமார் 7 கோடி 80 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இறால் வளர்ப்பு உற்பத்தித் திட்டத்தில் வாகரை, வட்டவான் பகுதியில் மாதிரி இறால் பண்ணை ஒன்று தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்று மாவட்ட நீரியல் உயிரியலாளர் எஸ்.ரவிக்குமார் தெரிவித்தார்.



இந்தத் திட்டத்தை தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அதிகார சபைமட்டக்களப்பு இறால் வளர்ப்பு விரிவாக்கல் கண்காணிப்பு பிரிவு நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இந்தத்திட்டத்தைசிறப்பாக நடைமுறைப்படுத்த விசேட பயிற்சிப் பட்டறை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மாவட்ட நீரியல் உயிரியலாளர் எஸ்.ரவிகுமார் தலைமையில் நடைபெற்ற இந்தப் பயிற்சிப் பட்டறையில், தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நிமல் சந்திரரத்ன, உதவிப் பணிப்பாளர் கே.ஏ.அத்துல, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் இரா.நெடுஞ்செழியன் உட்பட பல உயரதிகாரிகளால் சிறந்த முகாமைத்துவத் திட்டங்கள் வகுக்கப்பட்டன.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் மாவட்ட இறால் பண்ணையாளர்கள், சுற்றாடல், வனவள, விவசாய, நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சூழலுக்கு பாதிப்பற்ற முறையில் நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி சிறந்த இறால் வளர்ப்பு முகாமைத்துவத்தை நடைமுறைப்படுத்துவதற்கான சிறந்த ஆவணம் தயாரிக்கப்பட்டது.

இந்த நடை முறைகளை மீறுவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தீர்மானிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)


# மூன்று வருடங்கள் கடந்தும் பாலம் சேதமுற்ற நிலையிலேயே!

## புனரமைக்கக் கோருகின்றனர் மக்கள்

மட்டக்களப்பு,பெப்.11

மட்டக்களப்பு, மதுரங்குடலை வீதி பாலம் சேதமடைந்து 3 வருடங்கள் பூர்த்தி அடைந்தும் இதுவரை புனரமைக்கப்படவில்லை என்று பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தப் பாலம் சேதமடைந்துள்ளதால் காக்காச்சி வட்டைக்குச் செல்ல ஒரு கிலோ மீற்றர் தூரம் பயணம் செய்ய வேண்டிய நிலையில் பாலையடிவட்டையைச் சுற்றி 4 கிலோ மீற்றர் தூரம் பயணம் செய்ய வேண்டி



உள்ளது.

அதனால் மக்கள் பாதிப்படைந்து வருகின்றனர். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக பாலத்தைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண் டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(ச)

# கொலைக்கு பழிக்குப் பழி மூவருக்கு மரணதண்டனை

## தீர்ப்பு வழங்கியது கல்முனை நீதிமன்றம்

அம்பாறை,பெப்.11

கொலைக்காக மற்றுமொருவரை கொலை செய்தார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட மூவரை குற்றவாளிகளாக இனங்கண்ட கல்முனை நீதிமன்றம் அந்த மூவருக்கும் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

அம்பாறை, இறக்காமம் பிரதேசத்தில் தமது உறவினர் ஒருவரை கொலை செய்தவரை துப்பாக்கியால் சுட்டு கொலை செய்த அதே பிரதேசத்தைச் சேர்ந்த மூவருக்கு கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி மரண தண்டனை வழங்கி தீர்ப் பளித்துள்ளார்.

இறக்காமம், நான்காம் பிரிவைச் சேர்ந்த எம்.ஐ.நூர்தீன் என்றழைக்கப் படுபவரை கடந்த 2002ஆம் ஆண்டு அதே பிர தேசத்தில் வைத்து மூன்று பேர் துப்பாக்கியால் சுட்டு கொலை செய்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட மூன்று சந்தேகநபர்களும் அக்கரைப்பற்று நீதிமன் றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு, ஆரம்ப வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்தன. பின்னர் கல்முனை மேல் நீதிமன்றுக்கு வழக்கு விசாரணைக்கு மாற்றப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை கடந்த புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சந்தேக நபர்கள் மூவரையும் குற்றவாளிகளாக இனங்கண்ட நீதிமன்றம் அவர்களுக்கு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. (ச)

## மணல் மண் வேண்டுமா?

கட்டட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் மிகச்சிறந்த மண் வேண்டுமா? இருந்த இடத்திலிருந்தே பெற்றுக் கொள்ள வேண்டுமா? உங்கள் இடத்துக்கே கொண்டு வருகிறோம்.

4½ டிராக்டர் 20,500/=

தொடர்பு: (ராம்) 0726378546

(29364)(6.7.11)


# மரண அறிவித்தல்கள்

## இளையவி ரூபசௌந்தரி



மயிலணி வடக்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையவி ரூபசௌந்தரி (தங்கம்) கடந்த (09.02.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2013) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப.3.00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மயிலணி வடக்கு,
சுன்னாகம்.

(சி/6352)(8.6.7)

தகவல்:
குடும்பத்தினர்.

## இராமநாதர் அம்பலவாணர்

### (செல்லத்துரை)



வடக்கு எழுது மட்டுவாளினைப் பிறப்பிடமாகவும், உசனை வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதர் அம்பலவாணர் (செல்லத் துரை) நேற்று (10.02.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதர்-உமையாத்தை தம்பதியரின் ஏகபுத்திரனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா -அன்னப்பிள்ளை தம்பதி யரின் மருமகனும், நல்லதங்கத்தின் அன்புக் கணவரும், தங்கம்மா (கோப்பாய்), பாக்கிய தேவி (சுவிஸ்), காலஞ்சென்ற மல்லிகாதேவி (டென்மார்க்) மற்றும் ஜெயதேவன் (நோர்வே), நகுலாதேவி (உசன்) சத்தியாதேவி (டென்மார்க்), ஜெயதீபா(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற இராசையா(கோப்பாய்), சிவபாதம் (சுவிஸ்), ஜெயராஜா (டென்மார்க்), சுலோசனா தேவி (நோர்வே), கந்தசாமி (உசன்), பிறேமானந்தன் (டென்மார்க்), ராஜேந்திரம் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், செல்வமலர், யோகராஜா (நீர்வேலி), கிருஷ்ணகுமார், பற்பலீலா (கோப்பாய்), வசந்தகுமார் கிருபானந்தி (அச்சுவேலி), டிலக்சி, சகான், இந்துஜா, சாரங்கி, கிரிசாந், செந்தூரன், துவாரகா, செந்தூபியா -அச்சுதன், பிருந்தூபியா- வசந்தரூபன், துவாரகன், கஸ்தூரியா, பிரசீத், பிரீர்த்தி, குலேன் ஆகியோரின் அன்புப் பேரனும் கேசாயினி, லதுலாஸ், ஆராதனா, விகாஷ், தக்சா, லாஸ்யா ஆகியோரின் பாச மிகு பூட்டனும், சின்னத்தங்கம், காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை ஆகியோ ரின் அன்புச் சகோதரனும், சதாசிவம், பொன்னையா, நல்லதம்பி ஆகியோ ரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நேற்று (10.02. 2013) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பூதவுடல் உசன் ஈச்சங்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

உசன், மிருசுவில்.
தொ.பே.:0776153551,
0778175191

(18037)(6.7.11)

## 6 ஆயிரம் ரூபா அபராதம்

அளவுக்கு அதிகமாக மது அருந்தி பொது இடத்தில் அட்டகாசம் புரிந்த நபருக்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் 6 ஆயி ரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

மது அருந்திவிட்டு பொது இடத்தில் நின்றுநடமாடும் மக்களுக்கு இடைஞ்சல்களை விளைவித்து சிரமங்களைக் கொடுத்ததுடன், பொதுமக்கள் முகம் சுழிக்கும் அளவுக்கு நடந்து கொண்ட நபர் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

கைது செய்யப்பட்ட அல்வாய் வாசி பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார்.

குறித்த நபர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து நீதிபதியால் கடுமையாக எச்சரிக்கப்பட்டதுடன் 6 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ம-8)


advt@uthayan.com 0215671111


# மரண அறிவித்தல்கள்

## சவரிமுத்து பீலிக்ஸ் ஜெயசிங்கம்



இளவாலையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சவரிமுத்து பீலிக்ஸ் ஜெயசிங்கம் (03.02.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சவரிமுத்து (தம்பிராசா)-மேரிப்பிள்ளை தம்பதியரின், இளைய மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-மாகிறேட் தம்பதியரின் மருமகனும், நீற்றா இந்திராணி அவர்களின் அன்புக் கணவரும், அன்ரனி ஜெய்சங்கர் (பாபு-கனடா), யூட் தம்பிராஜா( வளன்-ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி திரேசா மரியாம்பிள்ளை(மலேசியா), காலஞ்சென்ற பிலிப் இராச நாயகம் மற்றும் திருமதி பத்மா றொபர்ட்(ஆஸ்திரேலியா), செல்வி யூலியானா (கனடா) ஆகியோரின் அன்பு சகோதரரும், ரூபா அன்ரனி, நளாயினி யூட் ஆகியோரின் அன்பு மாமனாரும், ருத், சுசன்றா, மேரி, நிக்கோல், சந்தோஷ், அபிஷா, ஆகியோரின் அன்பு பேரனாரும், காலஞ்சென்றவர்களான செல்வராயன், மன்னவராயன், மெற்றில்டா மற்றும் திருமதி டெய்சி சவுந்தரநாயகம், குணரத்தினம், தனரத்தினம், தேவதாஸ் (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 13-02-2013 புதன்கிழமை பி.ப 12.15 மணிக்கு மரியன் தேவாலயத்துக்கு (MARIEN KIRCHE (CHURCH ), MARIEN STR ,58452, WITTEN) எடுத்துச்செல்லப்பட்டு ஆத்மசாந்தித் திருப்பலியின் பின்னர் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, மரியன் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:மனைவி 4923029888731,
அன்ரனி 4167509916, வினிதா 0212225610

(29389)(8.6.7)

தகவல்:
வினிதா ஜெயகாந்த்(பெறாமகள்)
யாழ்ப்பாணம்.

## முருகேசு நடராசா



இணுவில் கிழக்கு, அங்களப் பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு நடராசா (09.02.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-தங்கம்மா தம்பதியரின் அன்புப்புதல்வனும் இரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பொன்னர்- நாகமணி தம்பதியரின் மருமகனும், பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான பாக்கியம், இரத்தினம், கண்மணி, இராசதுரை ஆகியோரின் அன்புச்சகோதரனும், செல்லம்மா, வைத்திலிங்கம், ராமுப்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும், புஸ்பமணி(சாந்தா), புஸ்பநாதன்(செல்வம்), புஸ்பகாந்த ராஜா(மணி-பிரான்ஸ்), புஸ்பகுமாரி (ரதி-லண்டன்), ரவீந்திரன் (ரவி- சுவிஸ்), சண்முகானந்தன் (மோகன் -இத்தாலி), ஸ்ரீரயனி (வனசா), பாமினி ஆகியோரின் அன்புத்தந்தையும், இராசையா(சின்னராசா), நகுலாதேவி, கௌரி (பிரான்ஸ்), நடராசா (லண்டன்), தயாநிதி(சுவிஸ்), விஜயலட்சுமி(இத்தாலி), சிவசுப்பிரமணியம்(இத்தாலி), சிவகுமாரன் (வவா-அம்பாள் மல்ரி கூட்ஸ், யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாரும், சுதர்சன்-நளினி(இத்தாலி), சுதர்சினி-தவனேசன் (இத்தாலி), சுரேஸ்குமார்- லக்சாயினி(லண்டன்), ஜெயனி, ஜலந்தா-மோனன் (லண்டன்), கீர்த்திகா, சுரேந்திரன், பிரசாந்(பிரான்ஸ்), பிரதீபன்-சுசிகலா(லண்டன்), முகுந்தன்-சங்கீதா(லண்டன்), ராதா-கருணா(சுவிஸ்), விமல்ராஜ், நிமல்ராஜ், நிஷாந்(லண்டன்), கோபிகா, ஜோதிகா(சுவிஸ்), கம்ஷா, கஜனி, கஜானா(இத்தாலி), சிந்துஜா, திவ்ஜன் (லண்டன்), சோபிதா-சிவாகர்(லண்டன்), சுகன்ஜா, சுஷந்திகா, சுதர் மிகா, சுவேதிகா ஆகியோரின் பேரனும், சுவேதா, நிவேதன்(இத்தாலி), தர்சிகா, தரணிகா, தனுசியன்(இத்தாலி), அபிஷன், அபிராமி(லண்டன்), வைஷ்ணவி (லண்டன்), தர்மிகா, தருண், தஸ்விகன்(சுவிஸ்) ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2013) திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(29388)(8.6.7)

தகவல்:
குடும்பத்தினர்.


## இடமாற்றம்

இல. 321, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கி வந்த T.K.S Enterprises Transport ஸ்தாபனம் இல. 33, அரசடி வீதி (தட்டா தெருச் சந்திக்கு அண்மையில்) எனு ம் முகவரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதனை வாடிக்கையாளர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியுடன் அறிய த்தருகின்றோம்.

**T.K.S Enterprises**
**Transporters, Colombo → Jaffna**
**Distributers, SMAK &millers**

இல.33, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல- 021 222 3509, 0214925102, 021 222 7904

(29387)(6.7.11)

## VACANCY ANNOUNCEMENT

GATEWAY Language Centre

*Gateway Language Centre invites application from qualified, dedicated and result - oriented professionals for Full Time English Lectures to our branches at Jaffna, Nelliady & Chavakacheri.*

Qualifications : Bachelor or equivalent with academic background with minimum 1 year teaching experience in English. Must have overall computer skills

*Further training will be provided in Colombo . Interested, ideal candidates send their updated resume and credentials along with hand written application on or before 20th February 2013.*

**The Manager/HR,**
**347, Kasthuriyar Road,Jaffna**

## காணிகள் விற்பனைக்கு

சங்கானை மேற்கு, சாங்கையில் 11 பரப்பு பள்ள வயற்காணி (இரண்டு போகம் செய்யக்கூடியது)
உரும்பிராய் சம்பந்தர் ஒழுங்கை, வடலிப் புலத்தில் 15 பரப்பு தோட்டக் காணி என்பன உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு-0772873245, 0778025022

(29401)(6.7.11)

## பஸ்விற்பனைக்கு

30Sri-xxxx ஜெனி பஸ் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு-0779673395

(29334)(3&7)

## ஜனா கொம்பியூட்டேர்ஸ்

''கணினி மற்றும் உதிரிப்பாகங்கள் விற்பனைக்கு''
கொம்பியூட்டர் - 10,000/= தொடக்கம்
C.R.T. மொனிற்றர் - 1500/=, L.C.D மொனிற்றர் - 4000/=
T.V. - 6000/= மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். கணினி திருத்த வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு: 0777508908.
உரும்பிராய், கிளிநொச்சி.

(26317) (6.7.2))

## வீடு விற்பனைக்கு


கந்தர்மடச்சந்திக்கு அருகில் 3 பரப்பு காணிக்குள் இருக்கும் சகல வசதிகளுடன் கூடிய இரண்டு வீடுகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு
0776562661

(29379) (8.6)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

புதிய TOMAHAWK சைக்கிள் ஒன்று எம்மால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. தகுந்த ஆதாரத்தைக் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.
தொடர்பு: 0214912014

(29381) (8.6.7)




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# டெங்கு ஒழிப்பை முன்னிட்டு இன்று சிரமதானப் பணிகள்

யாழ்ப்பாணம், பெப்.11

டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நாயன்மார்கட்டு பாரதி மன்ற சனசமூக நிலைய சுற்றாடல் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் துப்புரவு நடவடிக்கைகள் சிரமதானம் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளன.

சிரமதானத்தை யாழ்.மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆரம்பித்து வைப்பார்.

அந்தப் பகுதிகளுக்கான கிராம சேவையாளர்கள், பொது சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலருடன் அந்தப் பகுதிகளைச் சேர்ந்த குடியிருப்பாளர்களும் இந்தப் பணியில் கலந்துகொள்வார்கள்.

வீடுகள், காணிகளில் சிரமதானம் மூலம் சேகரிக்கப்படும் சிரட்டைகள், இளநீர்க் கோம்பைகள், ரின்கள், தகரங்கள், வாழைத்தண்டுகள் உள்ளிட்ட நுளம்புக் குடம்பிகள் உருவாகக் கூடிய பொருள்களுடன் இணைந்த குப்பைகள் ஒன்று சேர்க்கப்பட்டு யாழ்.மாநகர சபை வாகனங்கள் மூலம் அப்புறப்படுத்தப்படும். (3-8)

## பண்பாட்டு மலருக்கு ஆக்கம் அனுப்பலாம்

யாழ்ப்பாணம்,பெப்.11

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பண்பாட்டு மலர் வெளியீட்டுக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த மலருக்கு அனுப்பப்படுகின்ற ஆக்கங்கள் சண்டிலிப்பாய் பிரதேசத்துக்குரிய கலை, கலாசாரம், பூர்வீகம், பாரம்பரியம், விவசாயம், கைத்தொழில் மற்றும் சைவ, கிறிஸ்தவ ஆலய வரலாறுகள் உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

ஆர்வமுடையவர்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக, பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் ஒப்படைக்கலாம் என சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் தெரிவித்துள்ளார். (3-14)

## மெய்வன்மைப் போட்டிகள்

தென்மராட்சி, பெப்.11

கச்சாய் அ.த.க. பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும். பாடசாலை அதிபர் க.உதயகுமாரன் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும் கலந்துகொள்வர். (3-9)

★ ★ ★

சங்கானை கிழக்கு விக்னேஸ்வரா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று திங்கட் கிழமை பிற்பகல் 2 மணிக்கு மகாதேவப் பிள்ளையார் ஆலய வீதியில் நடைபெறவுள்ளது. அதிபர் பொ.தயானந்தம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலிகாம கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நூ.உதயரட்ணமும் சிறப்பு விருந்தினராக மா.கணேஸும் கலந்து கொள்வர். (3-29)

## எள்ளின் விலை அதிகரிப்பு நல்லெண்ணெய் ரூபா 500

எள்ளு விலை அதிகரித்ததைத் தொடர்ந்து வடக்கில் நல்லெண்ணெய் போத்தல் ஒன்று 50 ரூபாவால் அதிகரித்துள்ளது. யாழ்.மாவட்டத்தில் நல்லெண்ணெய் தயாரிப்புக்கு வெளிமாவட்டங்களிலிருந்து குறிப்பாக அநுராதபுரம் மாவட்டத்தில் இருந்தே எள்ளு எடுத்து வரப்படுகின்றது.

அண்மைக்கால கடும் மழை காரணமாக அநுராதபுர மாவட்டத்தில் செய்கை பண்ணப்பட்ட எள்ளுப் பயிர் அழிவுற்றதால் எள்ளு உற்பத்தி குறைவடைந்ததே எள்ளு விலை அதிகரிப்புக்குக் காரணம் என வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன. எள்ளு விலை அதிகரிப்புக்கு முன்னர் போத்தல் 450 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட நல்லெண்ணெய் 500 ரூபாவாக தற்போது விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. (3-8)

# உயர்தரப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், பெப்.11

2012 ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் ஏற்கனவே வெளியாகியிருந்தன. அதனடிப்படையில் பாடசாலை அதிபர்கள் அனுப்பி வைத்துள்ள பெறுபேற்று விவரம் வருமாறு:-

**கட்டைவேலி ஞானாசாரியார் கல்லூரி**

**கலைப்பிரிவு** - மி.மதுமிதா-2ஏபி, என்.தனுசியா -3சி,

**வர்த்தகப் பிரிவு** - பி.பிரியா-3பி, என்.துவாரகன்-2பிஎஸ், மி.மாகரிமி-3சி

**பருத்தித்துறை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி**

**கணிதப்பிரிவு**- ம.கௌசிகா-3பி, தி.சொரூபி-2பிசி, தி.ரஜிதா-3சி, கு.சுகன்யா -2சிஎஸ்

**விஞ்ஞானப் பிரிவு** - செ.தர்ஷிகா-3ஏ, ஸ்ரீ.தர்ஷிகா-2பிசி, ஜெ.கீர்த்தனா-சி2எஸ், கோ.தேனிகா-சி2எஸ்

**வர்த்தகப் பிரிவு**- த.சாத்வீகா-2ஏபி, ச.லாவண்யா-ஏ2பி, பொ.கிருகயா-ஏபிசி, ர.லாவண்யா-ஏ2சி, பீ.ஜொய்லினி-பிசிஎஸ்,

**கலைப்பிரிவு** - கி.நிவேதா -ஏ2பி, த.தரண்யா-ஏபிசி, பு.நிசாந்தினி- ஏ2சி, அ.ஆரணி -2பிசி, ரெ.கௌசிகா-2பிசி, ஏ.ஜெனனி -2பிசி, நா.துர்க்கா -2பிசி, பொ.நளினி -2பிசி, த.ஹேமவித்தியா-2பிசி.

**வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி**

**கணிதப்பிரிவு** - சுபாங்கனி நடராசா- 2ஏ, பி, சரண்யா பாலேந்திரன்- ஏ,சி,எஸ்.

**விஞ்ஞானப் பிரிவு** - உஷ்சாந்தி புலேந்திராஜ்-ஏபிசி, துஷ்யந்தி கணேசகுமார்- பி 2சி, அனுஷா சுந்தரலிங்கம் - ஏபிசி.

**கலைப்பிரிவு** - கீதாஞ்சலி கணேசு- 3ஏ, ஆரத்தியா புஸ்பலிங்கம் - ஏ2பி, அனுசியா பாலகிருஷ்ணன்- ஏ2பி, திவ்வியா இந்திரதாஸ்- ஏ2பி, துசாந்தி ஜெயசீலன்- ஏ2பி, கீர்த்தனா கிருஷ்ணமூர்த்தி- ஏ,2பி, கார்த்திகா நாகராசா- ஏ2பி, அபிராமி பாலசுப்பிரமணியம் - 3பி.

**வர்த்தகப் பிரிவு** - தனுஷா குலநாதன்- ஏபிசி, ஆராதனா ஸ்ரீகாந்தன்- ஏ2சி,, சுகீர்தனா பரமதாஸ்- 2பி,சி.

**காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்**

**கலைப்பிரிவு**- ந.ராகினி- 3ஏ, பி.சசிதரன்- ஏ2சி,

**வர்த்தகப் பிரிவு**- சு.ஜனகன்- 2ஏபி, எஸ்.கலா- ஏ2பி.

**கணிதப்பிரிவு**- வை.கோகுலன்- 3 எஸ், ரி.கஜந்தன்- 3 எஸ். (3-253-8-250)

## சமய சந்நிதிகளில்

கோயில் வீதி, அருள் ஆச்சிரம புனித லூர்து அன்னைக்கு இன்று ஹெபித் திருநாள் நடைபெறவுள்ளது. மாலை 4.15 மணிக்கு செப மாலையுடன் ஆரம்பமாகும் திருநாளில் கூட்டுத்திருப்பலி, திவ்விய நற்கருணை எழுந்தேற்றம், ஆசீர் என்பன இடம்பெறும்.

யாழ்.வண்ணை, நல்ல தண்ணீர்க் கிணற்றடி ஸ்ரீ.ஞான வைரவர் ஆலய அலங்கார உற்சவம் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 14 தினங்கள் நடைபெறும். இன்றைய விஷேட நிகழ்வாக தென்னிந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட வைரவப் பெருமானின் ஐம்பொன்னிலான எழுந்தருளி திருவுருவின் அருட்கண்கள் திறத்தலும் அது தொடர்பான கிரியைகளும் முற்பகல் 10மணிக்கு நடைபெறும். உற்சவ காலங்களில் தினமும் மாலை 5.30 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து சுவாமி உள்வீதியுலா வருவார் .(3)


★

கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதி ஸ்ரீ சிவ மஹா காளி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

ஆலயத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (3)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 16.07.1931 மறைவு 26.01.2009



**அமரர் முருகேசு சங்கரப்பிள்ளை**

திதி: பிரதமை

ஆண்டுகள் நான்கு சென்றாலும்
ஆறவில்லை உங்கள் நினைவுகள்
என்றும் எம்மை விட்டகலாத தெய்வமே
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

'மலரகம்' பலாலி வீதி,
கொட்டக்காடு வீதி, கோண்டாவில் கிழக்கு.
தொ.பே-021 321 1988 (29358)(6.7.11)

என்றும் நினைவில்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**சுதாஜினி பாக்கியநாதன்**

(இராமநாதன் நுண்கலைப் பீட மாணவி)

திதி: பிரதமை - 11.02.2013

தாயின் மடியில் 20.06.1990

விண்ணின் மடியில் 24.01.2012

எங்கள் குல விளக்காய் உதித்த நீ
எங்களைப் பாதியிலே விட்டுப் போவதற்கா?
என் கருவில் பத்துமாதம் இருந்தாய் நீ.....
இருபத்தொரு வருடம் எம்முடன் வாழ்வதற்கா....?
எமைப் பிரிந்து நீ சென்று ஓராண்டு ஆனாலும்
என்றும் நீ எங்கள் நெஞ்சில் வாழ்ந்திடுவாய்!

எங்கள் செல்வியின் ஓராண்டு நினைவுதின அழைப்பை நேரில் வந்த அழைப்பாக ஏற்று உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கம்பர்மலை,
வல்வெட்டி, வல்வெட்டித்துறை.

**குடும்பத்தினர்.**

(S/2[illegible]5.6.7)

**Superlink Travels**

30 ஆவது ஆண்டு நிறைவையொட்டிய விஷேட சலுகை

புனித தேசத்திற்கான 08 நாள் யாத்திரை

தமிழ் பேசும் யாத்திரிகர்களுக்கான...



- யாத்திரை மற்றும் புனித திருப்பலி தமிழில் நடத்தப்படும்
- யாத்திரை குழு தமிழ் பேசும் பங்குத்தந்தை ஒருவரால் வழி நடத்தப்படும்

ஒருவருக்கான யாத்திரை கட்டணம்
Rs.210,000/=
ரோயல் ஜோர்தானியன் விமானத்தின் மூலம் ஜோர்தானுக்கு நேரடி பயணம்

புறப்பாடு 2013 ஏப்பிரல் 18

பதிவு செய்வதற்கு தொடர்பு கொள்ளவும்
**Superlink Travels**
"Lucky Plaza" 70, Kollupitiya Lane (St. Anthony's Mawatha)Colombo 03
Tel: +94 11 2301616, 257 5900, 257 5698 Fax: 2 57 5832, 257 6932
www.superlinktravels.com Email – Superlink@superlink.eureka.lk, superlink@slt.lk

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு



நிகழும் மங்களகரமான நந்தன வருஷம் மாசி மாதம் 11ஆம் நாள் இன்று (11.02.2013) திங்கட்கிழமை 12.15 மணிமுதல் 01.30 மணிவரையுள்ள இடபலக்கினமும் சித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த சுப வேளையில் எம்மால் புதிதாக திறக்கப்படவிருக்கின்ற

**தையல்நாயகி ஜீவல்லறி**

இறைவன் திருவருள் கொண்டு திறக்கவிருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல 304, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இங்கனம் தங்கள் நல்வரவை நாடும்
ஜெயராமகிருஷ்ணன் முகுந்தன்
குடும்பத்தினர் 0777 178089

## தேவை

- English- Teachers Knowledge in Elocution.
- IT - Lecturers - BSc Computer Sc, Bsc IT.
- H/W Networking Admin
  -Knowledge in Thin client architecture.
- S/W Developers - C#, Sql, Adobe.
- Course Coordinators
  -Bsc Science, Knowledge in Lab & Precticals
- Marketing Executives

Apply With in 7Days

Visalam
Wide and Beyond

Visalam MINDS
127/1 Temple Road Jaffna
021 221 9695 075 979 9695
Email: admin@visalamholdings.com


# கண்ணீர் அஞ்சலி



கடந்த [08.02.2013] வெள்ளிக் கிழமை இறைவனடி சேர்ந்த எமது S.K.M.E. நிறுவனத்தில் பணிபுரியும் சுகதாஸ் அவர்களின் அன்புத் தாய்

**சூசைதாசன் பிபியானா [பாப்பா]**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கடற்கரை வீதி,
நாவாந்துறை வடக்கு,
யாழ்ப்பாணம்.

அன்னை கடல் உணவு
வாணிபத்தின் உரிமையாளர்,
ஊழியர்கள். S.K.M.E.


# வெளிநாடுகளிற்கான துரித தபால்கள் பொதிகள் சேவை



15 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை

- 11 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் அதி விஷேட கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன.
- மருந்து பொருட்கள், கடலுணவு , மற்றும் எண்ணெய் வகைகள் என்பனவும் அனுப்பிக்கொள்ளலாம்.
- உங்கள் வீடுகளிலிருந்தவாறே பொருட்களை அனுப்பிக்கொள்ளலாம், குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.
- குறைந்த நிறையுடைய பொதிகளுக்கும் விஷேட கட்டணச்சலுகை.



மிக குறைந்த கட்டணத்தில் அதி விரைவு சேவை எம்மிடம் மட்டுமே

சகல நாடுகளிற்குமான விமானபயணச்சீட்டுக்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

ARRUL GLOBAL EXPRESS
International Courier & Cargo Service

இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி , யாழ்ப்பாணம். Tel : 021 222 6113


# மரண அறிவித்தல்

திருமதி

## சற்குணலிங்கம் றோஸ் மாகிறேற்

(இளைப்பாறிய தொலைபேசி இயக்குநர்-ஸ்ரீலங்கா ரெலிகொம்)



ஹற்றனைப் பிறப்பிடமாகவும், கொக்குவில், பழைய தபாற்கந்தோர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சற்குணலிங்கம் றோஸ் மாகிறேற் 07.02.2013 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சற்குணலிங்கத்தின் (ஓய்வுபெற்ற தபால் அதிபர்-கொக்குவில்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கேப்பிரியேல்-செல்வநாயகி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்- சற்குணவதி தம்பதியரின் அன்பு மருமகளும், ஆஷாபிரியா (கனடா), காலஞ்சென்ற அனுஷன் ஆகியோரின் அன்புத் தாயும், சுரேந்திரனின் (கனடா) அன்பு மாமியும், ஆதவன் (கனடா), அகரன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அன்னி, கிறிஸ்ரீனா, விக்ரோரியா, எலிசபெத், சார்லி (நோர்வே), டொறின் (நோர்வே), ஜோசப்பின், கிறிஸ்ரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், செம்மனச்செல்வி, ஜெயராஜலிங்கம் (டுபாய்), மகாலிங்கம் (ஜேர்மனி), திருச்செல்வி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.02.2013) செவ்வாய்க் கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பழைய தபாற்கந்தோர் வீதி,**
**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்.**

**தகவல் :**
**சற்குணலிங்கம் (கணவர்),**
**ஆஷாபிரியா (மகள்),**
**சுரேந்திரன் (மருமகன்).**
**தொ.பே: 021 222 6218,**
**0750700624**

(29394) (10-6)

# மரண அறிவித்தல்

## வல்லிபுரம் நாகமுத்து



அச்சுவேலி வடக்கு, கந்தசாமி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கொண்டலடி வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும், அச்சுவேலி வடக்கு சித்திரவேலாயுதர் தேவஸ்தான ஸ்தாபகர் நாகர் அவர்களின் பேரனுமாகிய வல்லிபுரம் நாகமுத்து கடந்த (08.02.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - பார்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் பூமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான மாதர்துங்கம், நடேஷ் யோகம்மா ஆகியோரின் அன்பு சகோதரனும் சிவராஜா (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்), சறோஜா (பிரான்ஸ்), ஜெயச்சந்திரன் (யாழ். பல்கலைக்கழகம்), இந்திரன் ஸ்ரீகாந்தன் (நீர்வளச்சபை, யாழ்ப்பாணம்), ரவீந்திரன் (வைத்தியசாலை மேற்பார்வையாளர், அரசினர் ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி), சுதர்சன் (பிரான்ஸ்), சுபத்திரன் (பிரான்ஸ்), சசிகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும் புஸ்பராணி, வரதராஜா (பிரான்ஸ்), அருந்ததி, யோகம்மா, ரஞ்சினி, தயாளினி, கீதா (பிரான்ஸ்), றெஜிதா (பிரான்ஸ்), கலைவதனி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.02.2013) செவ்வாய்க் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 11 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**கொண்டலடி வீதி,**
**நல்லூர்.**
**021 320 1591**

தகவல்
குடும்பத்தினர்.

advt@uthayan.com
0215671111

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா - கனகரட்ணம் (ராசர்)



மீசாலை வடக்கைச் சேர்ந்த செல்லையா - கனகரட்ணம் நேற்று (10.02.2013) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னத்தங்கம் தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை, சுப்பிரமணியம் மற்றும் குமாரசாமி ஆகியோரின் சகோதரரும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் ரஞ்சிதா, பானுமதி, காலஞ்சென்ற நாகேந்திரன் மற்றும் ரவீந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையும் புவிதரன், சந்திரகுமார் (போகா), தபோநினி ஆகியோரின் மாமனும் பிரசாந்தன், கிரிசாந்தன், புஜீவன், புருசோத், அசோக், கிசோக், திசாளினி, நிசாளினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2013) திங்கட்கிழமை 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

மீசாலை வடக்கு,
மீசாலை.
0776757245

தகவல்
பிள்ளைகள்

## இராமன் யோகராசா

(ஓய்வு நிலைக் கிராம அலுவலர், J/285, J/287, கோப்பாய் பிரதேச செயலகம்)



நெல்லியோடை, அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராமன் யோகராசா (ஓய்வுநிலை கிராம அலுவலர்) நேற்று (10.02.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமன் - சாந்தி தம்பதியரின் மகனும் கரவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற துரைராசா - பரமேஸ்வரி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்றவர்களான ஜெயராசா, செல்வராஜா, சிங்கராஜா, சின்னராஜா, இராசமலர் மற்றும் சௌந்தரராஜா, சரோஜினிதேவி, சுசீலாதேவி ஆகியோரின் சகோதரனும் கலட்டி, கரணவாய் கிழக்கைச் சேர்ந்த யோகேஸ்வரியின் (ரஜனி) அன்புக் கணவரும் நிஜேந்திரா, ஆரபி (உயர்தர வகுப்பு மாணவி, யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2013) திங்கட்கிழமை பி.ப. 01.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆவரங்கால் இந்து மயானத்துக்கு தகனத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

நெல்லியோடை,
அச்சுவேலி தெற்கு.

தகவல்
திருமதி. யோ.யோகேஸ்வரி
(மனைவி)

## சுப்பிரமணியம் சுந்தரலிங்கம்



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சுந்தரலிங்கம் (குணம்) நேற்று (10.02.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் சாம்பசிவம் ஸ்ரீஸ்கந்தராசா, சிவநேசன், காலஞ்சென்ற சண்முகலிங்கம் மற்றும் ஸ்ரீரங்கநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராசையா, சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெயக்குமாரி (றஞ்சி)யின் அன்புக் கணவரும் சிவதாஸ், சிவதீபன், சிவரூபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (11.02.2013) திங்கட்கிழமை 4 மணியளவில் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

யாழ்ப்பாணம் வீதி,
மானிப்பாய்.

தகவல்
குடும்பத்தினர்.

## திருமதி அப்பாத்துரை தங்கரத்தினம் (தேவி)



வீமன்காமம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும், கலைமகள் வீதி, அரியாலையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாத்துரை தங்கரத்தினம் நேற்றுமுன்தினம் (09-02-2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - அன்னப்பிள்ளை (வாடாமலர்) தம்பதியரின் அன்பு மகளும், ஆறுமுகம் - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற அப்பாத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற என்ரி பாலசிங்கம் (ஆனந்தன்) மற்றும் புஸ்பவதி (ஜேர்மனி), தவராசா (லண்டன்), சோதிமலர் (யமுனா-பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற கனகலிங்கத்தின் (குமரபுரம், பரந்தன்) அன்புச் சகோதரியும், கமலாவதியின் அன்பு மைத்துனியும், பவானி, பாலகுமார், ரஜிதா, விஜயரட்ணம் ஆகியோரின் அன்பு மாமியும் சஜிந்தன், நிலாசினி, ஜேசுவன், நந்தஹரி, டினேஸ்ஹரி, கிஷாந்ஹரி, ஜானு, விணுஸ், ஜெனுசா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12-02-2013) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது தற்காலிக இல்லமான அரியாலையில் நடைபெற்று பூதவுடல் சிந்துப்பாத்தி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

98, கலைமகள் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
க.பேரம்பலம்
(செல்லத்தம்பி- சகோதரன்).

# நெல் கொள்வனவுக்கு இம்முறை உரிய நடவடிக்கை

கிளிநொச்சி,பெப்.11

கிளிநொச்சியில் நெல்கொள்வனவிற்கென பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் நிதி சரியான முறையில் பயன்படுத்தப்படவேண்டும் என மாவட்ட அரச அதிபர் றூபவதி கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.

தற்போது காலபோக அறுவடை இடம்பெற்றுவரும் நிலையில் விவசாயிகள் நெல்லைச் சந்தைப்படுத்துவதில் சிரமங்களை எதிர்கொண்டுவருகின்றனர்.

இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரிடம், விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? என்று கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

தற்போது திறைசேரி மூலம் கிடைக்கும் நிதியை கொண்டு காலபோக நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கென பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் நெல்கொள்வனவுக்கென பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட நிதி வேறு தேவைக்கு பயன்படுத்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. இம்முறை அவ்வாறு அல்லாது நெல்கொள்வனவிற்கே முழு நிதியையும் பயன்படுத்த வேண்டுமென பணிக்கப்பட்டுள்ளது. இதனை கண்காணிக்க நடவடிக்கை மேற்கொள்ளபப்பட்டுள்ளது.-என்றார்( ஐ-6)

## சட்டவிரோத மின் பெற்றவருக்கு 3 இலட்சம் ரூபா அபராதம்

வடமராட்சி,பெப்.11

துன்னாலை பகுதியில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற ஒருவருக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தால் 3 இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இலங்கை மின்சார சபை அதிகாரிகள் நடத்திய திடீர் சோதனை நடவடிக்கையின் போது துன்னாலைப் பகுதியில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற குடும்பஸ்தர் ஒருவர் சிக்கிக்கொண்டார்.

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் சட்டவிரோத மின்சாரம் பெற்ற குற்றச்சாட்டுடன் இவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மின்சாரசபையால் தாக்கல்செய்யப்பட்ட இந்தவழக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

விசாரணையின் போது குற்றச்சாட்டுக் குரிய பிரதிவாதி தனது குற்றத்ததை ஒப்புக்கொண்டதன் பேரில் 3 இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அபராதத் தொகையில் 2 இலட்சம் ரூபா இலங்கை மின்சார சபைக்கும் ஒரு இலட்சம் ரூபா அரச அபராதமாகவும் செலுத்த வேண்டும் எனவும் நீதிவான் தீர்ப்பளித்தார்.

(ம-8)

# கண்ணீர் அஞ்சலி



எமது கிராம அலுவலர் குழுவில் ஒன்றாக பணி புரிந்த நண்பன்

இராமன் யோகராசாவின்
(ஓய்வுநிலை கிராம அலுவலர்)

திடீர் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயருறுவதோடு அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கிராம அலுவலர் நண்பர்கள்,
வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகம் கோப்பாய்.

# மரண அறிவித்தல்

## அரசரத்தினம் கந்தமூர்த்தி



வேலணையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி தபால் நிலைய வீதியை வதிவிடமாகவும் கொண்ட அரசரத்தினம் கந்தமூர்த்தி நேற்று (10.02.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரசரத்தினம் - நவரத்தினவதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் - அன்னம் தம்பதியரின் மருமகனும் தையல்நாயகியின் அன்புக் கணவரும் சயிலராஜ், றகிலா (யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட 3ஆம் வருட மாணவி), காலஞ்சென்ற அகிலராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீஸ்கந்தராசா (பிரான்ஸ்), கந்தசோதி (நோர்வே), கார்த்திகைரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தபால் நிலைய வீதி,
சாவகச்சேரி.

தகவல்
குடும்பத்தினர்.

# முதலாவது ஆண்டு நினைவலைகள்

பூபாளமாய்
21
12
1943

முகாரியாய்
25
01
2012



## அமரர் பொன்னையா பாலச்சந்திரன்

திதி: பூர்வ பட்ஷ துதியை

காலத்தின் கசிவில் ஆண்டொன்று கடந்தாலும் - எம்
எண்ணப் படிமங்களில் வண்ணம் குன்றாத
அன்பான தலைவராய்
என்றென்றும் நீங்களே!! எம் ஒவ்வொரு
முன்னெடுப்புகளும்
உங்களை ஞாபகமூட்டிட...
உங்கள் ஆசிகளை யாசித்திருக்கும்...

27/11, 5ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

# மைக்கல் அணியை வீழ்த்தி விக்ரோறியன்ஸ் சம்பியன்



விக்ரோறியன்ஸ் அணி வீரர்கள்

பொன்னாலை சனசமூக நிலையத்தினால் நடத்தப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக்கழகம் சம்பியனானது.

இந்தச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் பொன்னாலை விளையாட்டுக்கழக மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகமும், சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற விக்ரோறியன்ஸ் அணித் தலைவர் முகுந்தன் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

ஆயினும் திட்டமிட்டபடி அதிரடியாக ஓட்டங்களைக் குவிக்க முடியாமல் விக்ரோறியன்ஸ் அணி வீரர்களை மாலிசந்தி மைக்கல் அணியின் பந்து வீச்சாளர்கள் திணறடித்தனர். அவர்களின் களத்தடுப்பும் மிகச் சிறப்பாக இருந்தது. ஒருபுறம் எதிரணியின் ஓட்ட எண்ணிக்கையைக் கட்டுப்படுத்திக்கொண்டு மறுபுறம் இலக்குகளையும் மைக்கல் அணி வீரர்கள் வேட்டையாடிக் கொண்டிருந்தனர். ஆயினும் மைக்கல் அணியின் பந்து வீச்சை விக்ரோறி யன்ஸ் அணியின் லோசுத னும், நகுலும் நம்பிக்கை யோடு எதிர்கொண்டாடினர். இவர்களின் சிறப்பான துடுப் பாட்டத்தால் விக்ரோறியன்ஸ் அணி ஒரு பந்துப் பரிமாற்றத்துக்கு 6 ஓட்டங்கள் என்ற சராசரியை அடையமுடிந்தது.

**3 இலக்குகளை வீழ்த் தியதோடு, தனிநபராகப் போராடி 31 ஓட்டங்களையும் குவித்த மாலிசந்தி மைக்கல் அணி வீரர் கோகுலன் ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.**

10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் விக்ரோறியன்ஸ் அணி 7 இலக்குகளை இழந்து 60 ஓட்டங்களை பெற்றிருந் தது.

அந்த அணி சார்பில் லோசுதன் 26 ஓட்டங்களையும் நகுல் 20 ஓட்டங்களையும் முகுந்தன் 10 ஓட்டங்களையும் பெற்றனர்.

மாலிசந்தி மைக்கல் அணி சார்பில் கோகுலன் 3 இலக்குகளையும் தர்சன், தினோஜன், அச்சுதன் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்குகளையும் வீழ்த்தினர்.

62 ஓட்டங்கள் என்ற இலகுவான வெற்றி இலக்கை துரத்தத் தொடங்கிய மாலிசந்தி மைக்கல் அணிக்கு ஆரம்பத்திலிருந்தே மரண அடி கொடுக்கத் தொடங்கினர் விக்ரோறியன்ஸ் வீரர் கள்.

துடுப்பாட்டத்தில் பிரகாசிக்காத குறையை களத்தடுப்பிலும், பந்துவீச்சிலும் விக்ரோறியன்ஸ் வீரர்கள் நிவர்த்தி செய்தனர். அணி வீரர்கள் அனைவரும் ஒன்றுபட்டு, வெற்றி ஒன்றையே நோக்காகக் கொண்டு, ஆக்ரோஷ ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இதனால், எல்லைக்கோட்டைத் தாண்டி பந்துகளை அடிக்கமுடியாமல் மாலிசந்தி மைக்கல் அணியின் துடுப்பாட்ட வீரர்கள் தடுமாறினர். அவர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களைக்கூட மிகவும் பிரயத்தனப்பட்டே எடுக்கவேண்டியிருந்தது. மாலி சந்தி மைக்கல் அணி வீரர் களை மைதானத்தில் நீண்ட நேரம் நிலைத்துநிற்க விக்ரோறியன்ஸ் பந்துவீச்சாளர்கள் விடவில்லை. வருவதும் போவதுமாக மைக்கல் அணி வீரர்கள் இலக்குகளை இழந்து களத்தை விட்டு வெளியேறினர். அந்த அணியின் கோகுலன் மட்டுமே நிலைத்து நின்று வெற்றிக்காகப் போராடினார். ஆயினும் அவருக்கு இணைப்பாட்டத்தை வழங்க முடியாமல் மறுமுனையில் நின்ற வீரர்கள் இலக்குகளைப் பறிகொடுத்தனர்.

எனவே, அந்த அணியால் 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 54 மூன்று ஓட்டங்களை மாத்திரமே பெறமுடிந்தது. இதனால், விக்ரோறியன்ஸ் 6 ஓட்டங்கள் வித்தியாசத் தில் மைக்கல் அணியை வீழ்த்தி வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

மாலிசந்தி மைக்கல் அணி சார்பில் கோகுலன் 31 ஓட்டங்களையும் , அமிர்தன் 11 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் விக்ரோறியன்ஸ் அணி சார்பில் சுகிர்தன் 3 இலக்குகளையும், பிரதீபன், முகுந்தன் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

3 இலக்குகளை வீழ்த்தியதோடு, தனிநபராகப் போராடி 31 ஓட்டங்க ளையும் குவித்த மாலிசந்தி மைக்கல் அணி வீரர் கோகுலன் ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.(ங)

## இன்றைய ஆட்டங்கள்



இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் துச்சிப் போட்டியில் இன்று திங்கட்கிழமை மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

பிற்பகல் 3 மணி

சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக் கழகம்

எதிர்

மயிலிட்டி கண்ணகை விளையாட்டுக் கழகம்

★ ★ ★

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டித் தொடரில் இன்று திங்கட்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் பங்கு பற்றும் அணிகள் விவரம் வருமாறு:-

பி.ப.4 மணி

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம்

எதிர்

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம்

★ ★ ★

பாடசாலைகளில் 19 வயது பிரிவு ஆண், பெண் அணிகளுக்கிடையே கீர்த்திகன் ஞாபகார்த்தவெற்றிக் கிண்ணத்துக்காக கொக்குவில் இந்துக் கல்லூரி நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று திங்கட்கிழமை இடம் பெற்றவுள்ள காலிறுதியாட்டங்களில் பங்கு பற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

பி.ப. 3. மணி

யாழ்.மத்தியகல்லூரி எதிர் கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி

பி.ப.4.30 மணி

யாழ்.இந்துக் கல்லூரி எதிர் சென்.ஜோன்ஸ் கல்லூரி.

(ங-23-228)

## மெய்வன்மை தொழில்நுட்ப அலுவலர் பரீட்சை சனியன்று யாழ்ப்பாணத்தில்

வலி.வடக்கு, பெப்.11

இலங்கை மெய்வன்மைச் சங்கத்தினால் தொழில்நுட்ப அலுவலர்களுக்காக கடந்த சனிக்கிழமை கொழும்பில் நடத்தப்பட இருந்து பிற்போடப்பட்ட பரீட்சை, எதிர்வரும் 23 ஆம் திகதி யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்ட ரங்கில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

குறிப்பிட்ட பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் யாழ். மாவட்ட மெய்வன்மைச்சங்க தலைவர் அல்லது செயலாளருடன் தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களை பெற்றுக் கொள்ளும்படி அறிவிக்கப் பட்டுள்ளது.

குறித்த பரீட்சை முதலில் கொழும் பில் நடைபெற இருந்தது. ஆயினும் இந்தப் பரீட்சைக்கு யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் இருந்தும் பரீட்சார்த்திகள் தோற்ற வேண்டியிருந்தது. இவர்கள் போக்குவரத்து, தங்குமிடம் போன்றவற்றுக்காக இடர்ப்பட வேண்டியுள்ளதை சுட்டிக்காட்டி, குறித்த பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்தும்படி யாழ். மாவட்ட மெய்வன்மைச் சங்கம் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ங-86)

## தேசியமட்ட ஹொக்கி போட்டி யாழ்ப்பாணக் கல்லூரியில்

### மார்ச் மாதம் நடத்த ஏற்பாடு



யாழ்ப்பாணம் பெப்.11

இலங்கை பாடசாலை ஹொக்கி சம்மேளனம் நடத்தும் ஆண், பெண் இருபாலாருக்குமான தேசியமட்ட ஹொக்கி சுற்றுப் போட்டிஎதிர்வரும் மார்ச் மாதம் 6 ஆம், 7ஆம், 8ஆம், 9 ஆம் திகதிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.மேற்படி போட்டிக்கான ஏற்பாடுகளை யாழ்.மாவட்ட பாடசாலை ஹொக்கி சங்கத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த சுற்றுப் போட்டி நடைபெறவுள்ள வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தை இலங்கை பாடசாலை ஹொக்கி சம்மேளனத்தின் செயலாளர் ரி.என். இந்திரவன்வுகேரந், இலங்கை பாடசாலை ஹொக்கி சம் மேளனத்தின் போட்டி இணைப்பாளர் ஏ.எச்.எம்.கனிடி ஆகியோர் கடந்த புதன்கிழமை பார்வையிட்டனர். போட்டிக்கான ஏற்பாடுகள் தொடர்பாக யாழ்.மாவட்ட பாடசாலை ஹொக்கி சங்கத்தின் தலைவர் நோயல் விமலேந்திரன், செயலாளர் தர்மகுமார் மற்றும் ஹொக்கிச் சங்க நிர்வாகிகளுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர். (ங-23)



கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு மாணவிகளுக்கான சைக்கிளோட்டப் போட்டி ஒன்று நடைபெற்றது. இந்தப் போட்டியை பாடசாலை அதிபர் கி.இராஜசேகரமும், கோப்பாய்ப் பிரிவு செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் இ.மயில்வாகனமும் இணைந்து ஆரம்பித்து வைத்தனர். (ங-8)

# இலங்கை மகளிர் அணி அரையிறுதியில் தோல்வி

இந்தியாவில் இடம்பெற்றுவரும் மகளிர் உலகக் கிண்ணப் போட்டிகளிலிருந்து இலங்கை அணியின் கிண்ணம் வெல்லும் கனவு தகர்ந்தது.

ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக நேற்று இடம்பெற்ற அரையிறுதிப் போட்டியில் தோல்வியடைந்ததையடுத்து இலங்கை அணி உலகக்கிண்ணத் தொடரிலிருந்து வெளியேறியுள்ளது. அத்துடன் ஆஸி. அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது.

மும்பை பிரபோர்ண் மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை மகளிர் அணி 45.2 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 131 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. முதலாவது இலக்கை 7 ஓட்டங்களுக்கு இழந்த இலங்கை அணி, அதன் பின்னர் தொடர்ச்சியாக இலக்குகளை இழந்து தடுமாறியது.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக தீபிகா ரசங்கிக்கா 77 பந்துகளில் 43 ஓட்டங்களையும் டிலானி மனோதரா 46 பந்துகளில் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக எரின் ஒஸ்போர்ண் 10 பந்துப்பரிமாற்றங்களில் 6 ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றங்கள் அடங்கலாக 9 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் மேகன் ஸ்கட், லீசா ஸ்தலேக்கர் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் ஜூலி ஹன்டர், ஹோலி ஃபேர்லிங், சாரா கோய்ற் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

132 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 22.2 பந்துப்பரிமாற்றங்களில் ஒரு இலக்கை மாத்திரம் இழந்து 9 இலக்குகளால் அபார வெற்றி பெற்றது.

முதலாவது இலக்குக்காக 55 ஓட்டங்களைப் பகிர்ந்த



ஆஸ்திரேலிய அணி, அதன் பின்னர் 2 ஆவது இலக்குக்காக பிரிக்கப்படாத 77 ஓட்டங்களைப் பகிர்ந்தது.

துடுப்பாட்டத்தில் ஆஸ்திரேலிய அணி சார்பில் ராசல் ஹெய்ன்ஸ் 61 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 71 ஓட்டங்களையும் மெக் லனிங்ஸ் 36 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 37 ஓட்டங்களையும் ஜெஸ் கமரன் 37 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக வீழ்த்தப்பட்ட இலக்கை ஸ்ரீபாலி வீரக்கொடி கைப்பற்றினார்.

போட்டியின் நாயகியாக எரின் ஒஸ்போர்ண் தெரிவானார். (நா)

## ஹர்பஜன் உள்ளே; கம்பீர் வெளியே



ஆஸ்திரேலியாவுக்கெதிரான டெஸ்ட் தொடரில் பங்கேற்கும் 15 பேர் கொண்ட இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

இந்திய அணியில் இருந்து கௌதம் கம்பீர் நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக ஹர்பஜன் சிங் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளார்.

மேலும் 15 பேர் கொண்ட அணியில் தமிழக வீரர் முரளி விஜய் இடம்பெற்றுள்ளார்.

அணி விவரம் வருமாறு:

டோனி(அணித்தலைவர்), ஷேவாக், ஷிகார் தவான், புஜாரா, டெண்டுல்கர், விராட் கோஹ்லி, ரவீந்திர ஜடேஜா, முரளி விஜய், அஷ்வின், பிரக்யான் ஓஜா, புவனேஸ்வர்குமார், ரஹானே, டிண்டா, இஷாந்த் ஷர்மா, ஹர்பஜன் சிங்.



4 போட்டிகளில் முதல் இரண்டு போட்டிகளுக்கான அணியை மும்பையில் நடந்த கூட்டத்தில் சந்தீப் பாட்டீல் தலைமையிலான தெரிவுக் குழு நேற்று அறிவித்தது.

இரு அணிகளுக்கு இடையேயான முதல் டெஸ்ட் போட்டி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் இந்த மாதம் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

பலராலும் எதிர்பார்க்கப்பட்ட ஸ்ரீசாந்த், சுரேஷ் ரெய்னா ஆகியோருக்கு அணியில் வாய்ப்பு வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நா)

# தீவுகளுக்கு வெள்ளை; ஆஸிக்கு கிண்ணம்

ஆஸ்திரேலியாவில் இடம்பெற்றுவரும் ஆஸ்திரேலியாவுக்கும் மேற்கிந்தியத் தீவுகளுக்கும் இடையிலான 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் 5 ஆவது ஒருநாள் போட்டியிலும் ஆஸ்திரேலிய அணி 17 ஓட்டங்களால் வெற்றி பெற்று, தீவுகள் முகத்தில் வெள்ளையடித்தது.



மெல்போர்ண் மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது.

ஆஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களின் ஆட்டம் தடுமாற்றத்துடனேயே தொடங்கியது. முதலாவது பந்திலேயே வொட்சன் ஓட்டமெதனையும் பெறாமல் பெஸ்டின் பந்தில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து 2 ஆவது ஓட்டத்தில் அடுத்த இலக்கும் இழக்கப்பட்டது. ஆரம்ப வீரராகக் களமிறங்கிய பிஞ்ச், ஒரு ஓட்டத்தை மாத்திரம் பெற்று பெஸ்டின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

பின்னர் ஹியூஸ் - மார்ஸ் இருவரும் இணைந்து கொண்டனர். சிறப்பாக ஆட்டத்தை வெளிக்காட்டி, அணியின் ஓட்டங்களை நிதானமாக உயர்த்தத் தொடங்கினர். இருப்பினும் அணி 63 ஓட்டங்களைப் பெற்ற வேளையில் ஹியூஸ் 4 பவுண்டரிகள் அடங்கலாக 29 ஓட்டங்களுடன் பிராவோவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

பின்னர் மார்ஸுடன் வோக்ஸ் இணைந்து கொண்டார். 4 பவுண்டரிகள் அடங்கலாக 40 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது பிராவோவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார் மார்ஸ். அதன் பின்னர் களம்புகுந்தார் ஹடின். வோக்ஸும், ஹடினும் நிதானமாகவும் பொறுப்பாகவும் ஆடி ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர். இருப்பினும் அணி 193 ஓட்டங்களை பெற்ற வேளை ஹடின் 5 பவுண்டரி அடங்கலாக 43 ஓட்டங்களுடன் ரோச்சின் பந்துவீச்சில் ஆட்டமிழந்து, அரைச்சதம் அடிக்கும் வாய்ப்பைத் தவறவிட்டார். மறுமுனையில் நிதானமாக ஆடிக்கொண்டிருந்த வோக்ஸுடன் இணைந்தார் பவுல்க்னர். இருவரும் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர். தனது கன்னிச்சதத்தை இந்தப் போட்டியில் பதிவெய்தார் வோக்ஸ். ஆஸ்திரேலிய அணி 50 பந்துப்பரிமாற்றங்கள் முடிவில் 5 இலக்குகளை இழந்து 274 ஓட்டங்களைப் பெற்றனர். ஆஸ்திரேலிய அணி சார்பாக வோக்ஸ் 10 பவுண்டரிகள் 2 சிக்ஸர் அடங்கலாக 112 ஓட்டங்களுடனும், பவுல்க்னர் 2 பவுண்டரி அடங்கலாக 31 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.



பந்து வீச்சில் மேற்கிந்திய தீவுகள் அணி சார்பாக பெஸ்ட், பிராவோ ஆகியோர் தலா 2 இலக்குகளையும், ரோச் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

275 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பவெல் 2 ஓட்டங்களைப் பெற்ற வேளையில் ஜோன்சனின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். பின்னர் இரண்டாவது இலக்குக்காக சார்ள்ஸுடன் இணைந்தார் பிராவோ. இருவரும் ஆஸ்திரேலிய அணியின் பந்து வீச்சாளர்களின் பந்தை நிதானமாக ஆடி ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர். இருவரும் இணைந்து 113 ஓட்டங்களைப் பெற்ற வேளை டேரன் பிராவோ 3 பவுண்டரி அடங்கலாக 33 ஓட்டங்களைப் பெற்று டோஹர்ட்டியின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.



பின்னர் களம்புகுந்த டி.ஜே. பிராவோவும் ஒரு பவுண்டரி அடங்கலாக 13 ஓட்டங்களைப் பெற்று ஜோன்சனின் பந்து வீச்சில் வீழ்ந்தார். மறுமுனையில் ஆடிக்கொண்டிருந்த சார்ள்ஸுடன் இணைந்தார் பொலார்ட். இருவரும் அதிரடியாக ஆடிய போதும் பவுல்க்னர் வீசிய பந்தில் சார்ள்ஸ் 8 பவுண்டரிகள் 1 சிக்ஸர் அடங்கலாக 100 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

பின்னர் களம்புகுந்த வீரர்கள் எவரும் சிறப்பாக ஆடவில்லை. டியோநரேன் 4 ஓட்டங்களுடனும், தோமஸ் 19 ஓட்டங்களுடனும், பொலார்ட் 2 பவுண்டரிகள் 1 சிக்ஸர் அடங்கலாக 45 ஓட்டங்களுடனும், சமி 2 பவுண்டரிகள் 1 சிக்ஸர் அடங்கலாக 23 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். ரோச் ஆட்டமிழக்காமல் 2 ஓட்டங்களையும் பெற்றனர். 49.5 பந்துப்பரிமாற்றங்களில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 257 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 17 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

பந்து வீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக மக் கே, ஜோன்சன் ஆகியோர் தலா 3 இலக்குகளையும், ஹடிங், பவுல்க்னர், டோஹர்ட்டி தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

ஆட்ட நாயகனாக ஆஸ்திரேலிய அணி வீரர் வோக்ஸும், ஆட்டத்தொடர்நாயகனாக ஸ்ராக்கும் தெரிவாகினர். 5-0 என்ற வகையில் ஆஸி. அணி மேற்கிந்தியத் தீவுகளுக்கு வெள்ளையடித்து வெற்றிக்கிண்ணத்தைத் தனதாக்கியது. (நா)

# புதிய கட்டட திறப்பு விழா அழைப்பு

# N.S.R. Ruban Complex



நிகழும் மங்களகரமான நந்தன வருடம் தை மாதம் 29ஆம் நாள்
இன்று (11.02.2013) திங்கட்கிழமை சதய நட்சத்திரமும் சித்தயோகமும்
கூடிய பிற்பகல் ஒரு மணி முதல் 2.30 மணி வரையுள்ள சுபவேளையில்

இல.01, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள

## N.S.R. Ruban Complex

எனும் புதிய கட்டடத்தை இறைவன் திருவருள் துணைகொண்டு
திறப்பு விழா செய்வதற்கு பெரியோர்கள் நிச்சயித்துள்ளனர்.

**பிரதம விருந்தினர்**

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்கள்**

கட்டடத்தை சம்பிரதாய முறைப்படி திறந்து வைப்பார்கள்.

**சிறப்பு விருந்தினர்**

யாழ்ப்பாண மாநகரசபை முதல்வர்

**திருமதி யோகேஸ்வரி பற்குணராசா அவர்கள்**

(c/6338) (10.6.7)

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு
அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இல.01,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.**

**திரு. நடராசா சத்தியரூபன்
உரிமையாளர்:
சிறி நதியா நகை மாளிகை**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.02.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.